24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 28
விலை: 30

சுடர் 34 கதிர் 41 மார்கழி 22ஆம் நாள் திங்கட்கிழமை 07 ஜனவரி 2019 வள்ளுவர் ஆண்டு 2049



## இறுதிச் சந்தர்ப்பத்தை தவறவிடோம் புதியஅரசமைப்பை நிறைவேற்றுவோம்

### ராஜித தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 7
தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் இறுதிச் சந்தர்ப்பத்தை நாம் தக்க முறையில் அனைவருக்கும் பயனுள்ள வகையில் பயன்படுத்துவோம். புதிய அரசமைப்பை நிறைவேற்றியே தீருவோம். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்த நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளார். இவ்வாறு சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் >> 06

இதுவே இறுதிச் சந்தர்ப்பம் அல்ல

## கூட்டமைப்பு பொறுமையாக இருந்தால் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு கிட்டும்

### சுமந்திரனின் கருத்துக்கு மகிந்த பதில் தாமே முன்வந்து தருவார் என்றும் தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 7
புதிய அரசமைப்பு நாட்டைப் பிளவுபடுத்தும் வகையில் தான் உருவாகப்போகின்றது. அதனால்தான் நாம் அதனை எதிர்க்கின்றோம். நாட்டைப் பிளவுபடுத்தி வழங்கும் அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு என்று சொல்ல முடி >> 06

## மைத்திரியின் அறிவுறுத்தலை பின்பற்றுமாறு ரணில் பணிப்பு

கொழும்பு, ஜன. 7
அரச நிறுவனங்களுக்குத் தலைவர்களை நியமிப்பதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ள சுற்றறிக்கை சிறப்பானது. அதன்படி அனைத்து அமைச்சர்களும் செயற்பட வேண்டும் ஐக்கிய தேசிய முன்னணிக்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.
அரச நிறுவனங்களுக்குத் தலைவர்களை நியமிப்பதற்கு முன்னர் அவர்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்பிக்க தனது செயலர் தலைமையில் குழு நியமித்திருந்தார். அந்தக் குழுவின் பரிந்துரைக்கு அமைவாகவே அரச நிறுவனங்களுக்குத் தலைவர்களை நியமிக்க முடியும் என்று அரச தலைவர் மைத்திரிபால தெரிவித்திருந்தார்.
ஐக்கிய தேசிய முன்னணி அமைச்சர்களை கட்டுப்படுத்துவதற்கே இவ்வாறான நடவடிக்கையை அரச தலைவர் >> 06

புதிய அரசமைப்பு நிறைவேற

# மைத்திரி - ரணில் - மகிந்த ஓரணியில் நிற்க வேண்டும்

## எந்தத் தடைகள்வரினும் சோர்ந்துவிடாது கூட்டமைப்பு போராடும் என்கிறார் சம்பந்தன்



யாழ்ப்பாணம், ஜனவரி 7
நாட்டில் மீண்டும் ஓர் குருதிக்களரி ஏற்படாமல் இருக்க வேண்டுமெனில் புதிய அரசமைப்பு உருவாக வேண்டும். இனவாதத்தைக் கக்காமல் – பிரிவினையை ஏற்படுத்தாமல் மைத்திரி, ரணில், மகிந்த தரப்புகளைச் சேர்ந்தோர் ஓரணியில் நின்று புதிய அரசமைப்பு வெற்றிபெற உழைக்க வேண்டும்.
இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.
புதிய அரசமைப்பு நிறைவேறாது என்று மகிந்த அணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி என்பன தெரிவித்து வரும் நிலையில், கூட்டமைப்பு எப்படியான நடவடிக்கைகளை எடுக்கப் போகின்றது என்பது தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார். >> 06

அரச ஊழியர்களின்

## சம்பள அதிகரிப்புக்கு ரூ. 159 பில். தேவை

கொழும்பு, ஜன. 7
அரச துறையினரின் சம்பளம் தொடர்பில் மீளாய்வு செய்து பரிந்துரைகளை வழங்க நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கைக்கு அமைவாக, அரச ஊழியர்களின் சம்பளத்துக்கு ஒதுக்கப்படும் நிதி 159 பில்லியன் ரூபாவால் அதிகரிக்கப்பட >> 06

## கஞ்சாக்காரர்களுக்கு சுமந்திரன் பரிந்துரை; இல்லை என்று அடியோடுமறுக்கிறார் அவர்

யாழ்ப்பாணம், ஜன. 7
கஞ்சா கடத்த முற்பட்டார்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்ய முற்பட்டபோது, பொலிஸாரைத் தாக்கினார்கள் என்ற குற்றச்சாட்டில் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 4 இளைஞர்களை கைது செய்தபோது அவர்களைப் பொலிஸ் பிணையில் விடுவிக்குமாறு, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கிளிநொச்சிப் பிரதிப் பொலிஸ்மா அதிபரைத் தொடர்பு கொண்டு பேசினார் என்று கூறப்படும் விடயத்தை, அவர் அடியோடு மறுத்துள்ளார்.
வடமராட்சி கிழக்குப் பகுதியில் 4 தினங்களுக்கு முன்னர் கஞ்சா கடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற என்ற தகவலுக்கு அமைவாக அங்கு சென்ற பொலிஸாரை 4 இளைஞர்கள் தாக்கியதாகப் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பான செய்தி நேற்று வெளியாகியிருந்தது. நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்களை விடுவித்ததாக சமூக ஊடகங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. >> 06

## நீண்ட சுரங்கத்தில் நேற்று தொடருந்து வெள்ளோட்டம்

### மகிந்த அணியினர் எதிர்ப்புப் போராட்டம்

கொழும்பு, ஜன. 7
இலங்கையிலேயே மிக நீளமான சுரங்க தொடருந்துப் பாதை மாத்தறை - பெலியத்த இடையே நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொடருந்துப் பாதையில் தொடருந்து வெள்ளோட்டம் நேற்று இடம்பெற்றது. அதனை மறித்து மகிந்த அணியினர் போராட்டம் நடத்தினர்.
போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவின் தலைமை >> 06

வவுனியா புதூர் சம்பவம்

## பெண் உள்ளிட்ட மூவர் சந்தேகத்தில் கைது

வவுனியா, ஜன. 7
வவுனியா மாவட்டத்தில் புதூர்ப் பகுதியில் ஆயுதங்கள் மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் பெண்ணொருவர் உள்ளிட்ட மூன்று பேர் இதுவரையில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
புதூர்ப் பகுதியில் நான்கு தினங்களுக்கு முன்னர் ஆயுதங்களுடன் நபரொருவர் நடமாடுவதாகக் கிடைத்த தகவலுக்கு அமைவாக பொலிஸார் அந்தப் பகுதியில் சிவில் உடையில் மறைந்திருந்தாகவும், சந்தேக நபர் >> 06

பருத்தித்துறையில்

## வாரப் பத்திரிகை பிரதிகள் எரிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளைபிரபாகரனின் ஒளிப்படத்துடனும் பொருத்தமற்ற தலைப்புடனும் வாரப் பத்திரிகையில் வெளியான செய்தியால் அந்தப் பத்திரிகையின் பிரதிகள் எரிக்கப்பட்டுள்ளன.

வாரப் பத்திரிகையின் முகப்புப்பக்கத்தில்விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் மத்தியில் தலைவர் வே.பிரபாகரன் நடந்து வரும் படத்தைப் பிரசுரித்து. 'இரவு இரண்டு மணிக்கும்பெண்கேட்டதேசிய தலைவர்' என்று தலைப்பிடப்பட்ட நிலையில் பத்திரிகை வெளியாகி உள்ளது.

செய்தித்தலைப்புடன் தொடர்புடைய செய்தியானது இந்தியாவைச் சேர்ந்த முச்சக்கர வண்டிச் சாரதியான சங்கர் என்பவரது கதையாகும். சங்கர் ஒரு தொடர் கொலைகளை செய்த கொலையாளியின் வாக்குமூலம் என செய்தி வெளியாகியுள்ளது.

குறித்த செய்திக்கு இடப்பட்ட தலைப்பு மற்றும் படம் என்பன வேண்டும் என்றே போடப்பட்டன என்று தெரிவித்தே பருத்தித்துறைப் பகுதிகளில் பத்திரிகையின் பிரதியைத் தீயிட்டுக் கொளுத்தி தமது எதிர்ப்பை அந்தப் பகுதி மக்கள்வெளிக்காட்டினார்கள்.

தமிழ் மக்கள் மத்தியில் தேசியத் தலைவர் என்றால் வே.பிரபாகரனே ஞாபகத்துக்கு வரும் நிலையில் வேண்டும் என்றே தமிழ் மக்களின் மனதைப் புண்படுத்தும் நோக்குடன் இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி இளைஞர்கள் தெரிவித்தனர். (ஒ.5.37)

கிளிநொச்சி வெள்ளப் பேரிடர்

# விசாரணைக்குழுவின் கூட்டம் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜன. 7

**வெள்ளப் பேரிடருக்கான காரணம் தொடர்பில் விசாரிக்க நியமிக்கப்பட்ட குழுவின் தலைவரை, அந்தப் பணியிலிருந்து ஆளுநர் இடைநிறுத்தியிருந்தார். இந்த நிலையில் அந்தத் தலைவரால் விசாரணைக்குழுவின் கூட்டம் கூட்டப்பட்ட நிலையில், ஆளுநரின் செயலரால் இடைநிறுத்தப்பட்டுள்ளது.**

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கடந்த மாத இறுதியில் ஏற்பட்ட வெள்ளப் பேரிடருக்கு. இரணைமடுக்குள நீர்பாசன அதிகாரிகள் காரணம் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இது தொடர்பில் விசாரணை நடத்த மூன்று பேர் கொண்ட குழுவை ஆளுநர் நியமித்தார்.

பொறியியல் பீட பேராசிரியர் எஸ்.எஸ். சிவகுமார் தலைமையில், வட மாகாண பொறியியல் சேவைகள் பிரதி தலைமைச் செயலர் எஸ்.சண்முகநாதன் மற்றும் மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் ஆகியோரை உள்ளடக்கிய குழு நியமிக்கப்பட்டிருந்தது.

இந்தக் குழுவின் தலைவர் சிவகுமார், இரணைமடுக்குள அதிகாரிகளே இந்த வெள்ளப் பேரிடருக்கு காரணம் என்று குற்றச்சாட்டை விசாரணைக்குழு நியமிக்கப்பட முன்னரே முன்வைத்திருந்தார். அவரை அந்தக் குழுவில் நியமிக்க முடியாது என்று பல தரப்புக்களும் ஆளுநர் அலுவலகத்துக்குச் சுட்டிக்காட்டிய பின்னர், அவரை அந்தப் பதவியிலிருந்து விலகுமாறு ஆளுநரின் செயலர் அலைபேசி ஊடாக அறிவித்திருந்தார். இந்தத் தகவல் ஊடகங்களிலும் வெளிவந்திருந்தது.



இந்த நிலையில் பேராசிரியர் சிவகுமார், விசாரணைக்குழுவின் கூட்டத்தைக் கூட்டியுள்ளார். விசாரணைக்குழுவின் தலைவர் என்ற அடிப்படையிலேயே இந்தக் குழுக் கூட்டத்தை கூட்டியுள்ளதாகத் தெரியவருகின்றது. அதனை அவரும் உறுதிப்படுத்தினார்.

'விசாரணைக்குழுவுக்கு என்னைத் தலைவராக நியமித்து கடிதம் வழங்கப்பட்டது. அலைபேசி ஊடாக குழுக் கூட்டத்தை நடத்தவேண்டாம் என்று கூறப்பட்டது. ஆனால் எழுத்தில் எதுவும் வழங்கப்படவில்லை. இந்த நிலையில் குழுவின் முதலாவது கூட்டம் இன்று (நேற்று) எனது தலைமையில் ஆரம்பமானது. ஆளுநரின் செயலர் இளங்கோவன் கூட்டத்தை நடத்தவேண்டாம் என்று அலைபேசியில் அறிவித்தார். இந்த விசாரணைகளில் இனி நான் பங்கெடுக்கமாட்டேன்' என்று சிவகுமார் தெரிவித்தார்.

விசாரணைக்குழுவுக்குப் பொருத்தமான ஒருவரை தலைவராக நியமிக்குமாறு கொழும்பு அரசின் நீர்பாசன அமைச்சைக் கோரியுள்ளோம் என்று வடக்கு மாகாணஆளுநரின் செயலர் இளங்கோவன் தெரிவித்தார்.

'பேராசிரியர் சிவகுமாரை விசாரணைக்குழுவுக்கு தலைவராக நியமித்தமை இயற்கைநீதிக்கு முரணானது என்று சுட்டிக்காட்டப்பட்டது. அவர் குழுவின் தலைவராகச் செயற்பட முடியாது என்று அறிவித்தோம். அதன் பின்னர் கூட்டத்தை கூட்டமுடியாது' என்று இளங்கோவன் குறிப்பிட்டார். (ஒ.5,105)

மகிந்த

## சு.கவுடன் கூட்டணி அமைக்கக் கூடாது

### போர்க் கொடி தூக்குகிறார் வெல்கம

கொழும்பு. ஜன. 7

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் மகிந்த ராஜபக்ச கூட்டணி அமைக்கக் கூடாது. இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும் கூட்டு அமைப்பதற்கான பேச்சுகள் இடம் பெற்று வருகின்றன. இவ்வாறானதொரு நிலையிலேயே குமார வெல்கம மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சி இன்று பெரிய நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. முறையான தலைமைத்துவம் இல்லாமையே இதற்குக் காரணம். சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இழைத்த துரோகமே இன்று பொதுமக்கள் முன்னணி என்ற புதிய கட்சி தோற்றம் பெறுவதற்கு வழியேற்படுத்தியது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச கூட்டணியமைத்துக் கொள்வது மீண்டும் இரண்டாவது அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தும்.

இரண்டு தரப்பினரும் புதிய கூட்டணி அமைக்கும் பொழுது கருத்து முரண்பாடுகள் தோற்றம் பெறுவது இயல்பு. பொது மக்கள் முன்னணியினர் ஒருபோதும் தங்களின் தலைமைத்துவத்தையும், கட்சியின் சின்னத்தையும் விட்டுக் கொடுக்கமாட்டார்கள். வீண் முரண்பாடுகளே இடம்பெறும். தேர்தல்கள் இடம்பெறும் வரையில் முழுமையாக இரண்டு தரப்பினரும் மக்களுக்குச் சேவையாற்றினால் மக்களே தமக்கான அரசைத் தெரிவு செய்வார்கள் - என்றார். (ஒ.5)

## மகிந்தவையும் இணைத்து சு.கவைப் பலப்படுத்துவோம்

### கூறுகிறார் தயாசிறி

கொழும்பு, ஜன. 7

மைத்திரி - மகிந்த - சந்திரிகாவை இணைத்துக் கொண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்துவோம் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

குருநாகலையில் நடைபெற்ற நிகழ்வின் போது சமகால அரசியல் நிலவரங்கள் குறித்து அவரிடம் ஊடகவியலாளர்கள் கேள்விகளை எழுப்பினர். அதற்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

'முன்னாள் அரச தலைவர் மகிந்த எந்தக்கட்சியை சேர்ந்தவர்?' என்று கேள்வி எழுப்பப்பட்டது.

'அதை அவரிடம்தான் கேட்கவேண்டும். சுதந்திரக் கட்சியை விட்டுத்தான் இன்னும் விலகவில்லை என்று கூறுகிறார். பின்னர் வேறு விதத்திலும் கருத்து வெளியிடுகின்றார். கடந்த தேர்தலின்போது நாம் புறக்கணிக்கப்பட்டோம். இனி அவ்வாறு செய்ய முடியாது. கூட்டணி அமைத்து வெற்றி நடையில் பயணிப்போம். பேய்களுக்குப் பயந்தால் மயானத்தில் வீடுகட்டுவோமா?'- என்றார் தயாசிறி. (ஒ.5)

## விபத்தில் சிக்கி 4பேர் காயம்

விபத்தில் சிக்கிக் காயமடைந்த நிலையில் 4 பேர் அச்சுவேலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மூன்று பேர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

ஆவரங்கால் வல்லை பிரதான வீதியில் அச்சுவேலி தெற்குப் பெரிய மதவடியில் நேற்று மாலை 3 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்வத்தில் அச்சுவேலியைச் சேர்ந்த திருமதி குணம் அஜந்தி (வயது-40), பாலரஞ்சன் ஆரணி (வயது-15), அல்வாயைச் சேர்ந்த அருமைராசா அஜந்தன் (வயது-26) நீர்வேலியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுதர்சன் (வயது -29) நால்வரும் படுகாயமடைந்தனர்.

'பெண்கள் இருவரும் உந்துருளியில் வீதியைக் கடக்க முற்பட்டபோது, வடமராட்சி நோக்கிச் சென்றுகொண்டிருந்த இளைஞர்களின் உந்துருளி மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது' என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஒ.5,11)



## கதிரேசனை வழிபட்ட மகிந்த

கொழும்பு, ஜன. 7

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச குருநாகல் கதிரேசன் ஆலயத்துக்கு நேற்றுத் திடீரெனச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார். அவர் வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது பொலிஸாரும் சிறப்பு அதிரடிப் படையினரும் ஆலயத்தைச் சுற்றி நின்று பாதுகாப்பு வழங்கினர். ஆலயத்தில் வழிபாடுகளை முடித்துக்கொண்ட பின்னர் அங்கு நின்ற பக்தர்களிடம் அவர் பேசிவிட்டு வெளியேறினார். (ஒ.5,22)

## குடும்பத் தலைவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 7

தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த குடும்பத் தலைவர் திடீரென மயங்கி வீழ்ந்துள்ளார். அவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை - நல்லூர் வீதியைச் சேர்ந்த சின்னத்துரை சசிகரன் (வயது-46) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

ஊரெழுப் பகுதியில் தோட்ட வேலைக்காக நேற்றுச் சென்றிருந்த குடும்பத் தலைவர் புல்லு வெட்டிக் கொண்டிருக்கும் போது திடீரென மயங்கிக் கீழே வீழ்ந்துள்ளார். தோட்டத்தில் வேலை செய்த ஏனையோர் அவரை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளனர். ஆனால் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவமனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த உயிரிழப்புத் தொடர்பான இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (ஒ.5,7,8)

## கதிரையில் அமர்ந்ததும் தமிழரை மறந்துவிடுவர்

### குகதாஸ் குற்றச்சாட்டு

நவாலி, ஜன.7
சிங்களவர்கள் ஆட்சி அதிகாரத்தைப் பிடித்துக் கொள்வதற்காக எமது கூட்டமைப்பினரைவலிந்துஇழுத்துக்கைக்குள்வைத்திருப்பார்கள். கதிரையில்அமர்ந்தவுடன்சகல விடயங்களையும்மறந்துவிடுவார்கள்.
இவ்வாறு வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர்சபா.குகதாஸ்குற்றஞ்சாட்டியுள்ளார்.
நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையத்தில்கடந்தவாரம்நடைபெற்றநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கில்இந்துதொல்லியல்திணைக்களங்களும்வனஜீவராசிகள்திணைக்களங்களும் எமது மக்களுக்கு தொல்லைகளைக் கொடுத்த வண்ணம் உள்ளன.
ஒருபுறம் வடக்கை போதைப்பொருள்கள் ஆக்கிரமித்துள்ளன. மறுபுறம்சிலகாலங்களுக்கு முன்னர் குள்ள மனிதர்கள் இரவு வேளைகளில் மக்களுக்குத் தொல்லை கொடுத்தனர். தற்போது புதிய வடிவத்தில் இலங்கையில்எப்பாகத்திலும்இல்லாதஐஸ் போதைப்பொருள்இங்குபிடிக்கப்பட்டுள்ளது.
இவ்வாறாக வடமாகாணத்தைப்பலவழிகளிலும்சீர்குலைப்பதற்குப்பலரும்பலமுயற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர்.
அண்மையில் கிளிநொச்சி வந்திருந்த தலைமைஅமைச்சர்ரணில்விக்கிரமசிங்க பௌத்த மதத்துக்கே முன்னுரிமை எனினும் ஒற்றையாட்சிக்குள் தான் தீர்வுகளை வடபகுதியில் வைத்து ஆணித்தரமாகக் கூறியுள்ளார். எமதுநாட்டில்தமிழினம்படும் துன்ப துயரங்களுக்கு வெளிநாட்டு மத்தியஸ்தம் ஊடாக ஐ.நாவினால் தீர்வு வழங்கப்பட வேண்டும்.
வடக்கு-கிழக்கு தமிழ் மக்களுக்குச் சிறந்த தலைமைத்துவம் ஒன்று கிடைக்க வேண்டும். இதற்காகத்தற்போதுதமிழ்த்தலைமைகள் மத்தியில் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன. மாகாணத்துக்கு பொலிஸ் காணி அதிகாரங்கள் கிடைக்கப்பெறவேண்டும். இவ்வாறான அதிகாரங்கள் கிடைக்கப்பெற வேண்டும் என்ற நிலமைகள் தொடர்பில் தென்னிலங்கை அரசியல்தலமைகளுக்கு எமது தமிழ்த் தலைவர்கள் இதுவரையில் ஆக்கபூர்வமாக எடுத்து இயம்பவில்லை - என்றார்
இந்த நிகழ்வில் வலி. தென்மேற்கு பிரதேச சபைதிட்டமிடல்பொறுப்பதிகாரிக. கருணாகரன் கலந்துகொண்டார்.
நிகழ்வின் இறுதியில் சனசமூக நிலையத்துக்கு சபா.குகதாஸ் அவர்களால் பல்லூடகம் ஒன்று வழங்கப்பட்டது. (ற-50)

## கடந்த வருடத்தை விடவும் டெங்குத் தொற்று குறைவு



கொழும்பு. ஜன.7
கடந்தஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு டெங்குத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சி கண்டுள்ளதுஎன்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.
2017ஆம் ஆண்டுஒருலட்சத்து 86 ஆயிரத்து101ஆகக் காணப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 2018 ஆம் ஆண்டாகும்போது50ஆயிரத்து163ஆகப்பதிவாகியுள்ளது. மேல்மாகாணத்திலேயே 37.1 வீதமாக டெங்கு நோயாளர்கள் அதிகளவான டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.
2017ஆம்ஆண்டு29ஆவதுவாரத்திலேயே அதிக டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். தற்போதுடெங்குதொற்று இனங்காணப்பட்ட பகுதிகளைச் சுத்தி கரிக்கும் பணிகள் விரிவாக் கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-31)

# குழந்தைகளின் பிறப்பு வீதம் வட மாகாணத்தில் அதிகரிப்பு

### *16,182 குழந்தைகள் 2017 இல் பிறப்பு*

**யாழ்ப்பாணம், ஜன.7**
**வடக்குமாகணத்தில்பிள்ளைகளின்பிறப்புவீதம்2017ஆம்ஆண்டு அதிகரித்துள்ளது. வடக்கின்ஒவ்வொருமாவட்டங்களிலும்இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.**

யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும்2017ஆம்ஆண்டில் 8ஆயிரத்து152குழந்தைகள்பிறந்துள்ளன.
2016ஆம்ஆண்டுடன்ஒப்பிடும் போது 2017ஆம் ஆண்டில் வடக்கு மாகாணத்தில் பிள்ளைகளின்பிறப்புவீதம்அதிகரித்துள்ளது என்று வடக்கு மாகாண சுகாதாரத்திணைக்களத்தகவல்கள் தெரிவிக்கின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் 2016 ஆம் ஆண்டு7 ஆயிரத்து 892 குழந்தைகள் பிறந்துள் ளன.
2017ஆம்ஆண்டில்8ஆயிரத்து 152குழந்தைகள்பிறந்துள்ளன.
வவுனியா மாவட்டத்தில் 2016 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 572 குழந்தைகளும், 2017ஆம் ஆண்டில்2ஆயிரத்து796குழந்தைகளும் பிறந்துள்ளன. மன்னாரில்2016ஆம்ஆண்டுஆயிரத்து 833 குழந்தைகளும். 2017ஆம் ஆண்டில் ஆயிரத்து 839 குழந்தைகளும் பிறந்துள்ளன. முல்லைத்தீவில் 2016 ஆம் ஆண்டில் ஆயிரத்து 498 குழந்தைகள் பிறந்துள்ளன. 2017ஆம் ஆண்டில் ஆயிரத்து 516குழந்தைகளாகஅங்கு அதிகரிப்பு இடம்பெற்றுள்ளது.
கிளிநொச்சி மாவட்டத்தில் 2016ஆம் ஆண்டில் ஆயிரத்து 576 குழந்தைகள் பிறந்துள்ளன. 2017ஆம்ஆண்டில் ஆயிரத்து 880 குழந்தைகளாக அங்குஅதிகரிப்புஇடம்பெற்றுள்ளது. இவ்வாறு வடக்கு மாகாணம் முழுவதுமாக 2016ஆம் ஆண்டில் 15 ஆயிரத்து 371 குழந்தைகள் பிறந்த நிலையில் 2017ஆம் ஆண்டில் 16 ஆயிரத்து182குழந்தைகள்பிறந்துள்ளன. 2017ஆம் ஆண்டில் 811 குழந்தைகள் அதிகமாகப் பிறந்துள்ளன என்று சுகாதாரத் திணைக்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. 30ஆண்டுகாலப் போரால்சிதைவடைந்து, கடந்த இறுதிப் போரில் ஒரு இனப் படுகொலையேநடந்தேறியதுஎன்று அரசியல் தலைவர்களால் தெரிவிக்கப்படும்தமிழர்தாயகமான வடக்கு - கிழக்கு மாகாணங்களில், தமிழர்களின் சனத்தொகையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று பலராலும் தெரிவிக்கப்பட்டுவருகிறது.
திருமணமானவர்கள் மூன்றுக்குமேற்பட்டபிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதன் மூலம் தமிழர்களுடைய சனத் தொகையில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்றும் கருத்துக்கள் இடம்பெறுகின்றன. மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் மூன்று பிள்ளைகளுக்கு மேல் பெறும் குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கும் யோசனை ஒன்றும் அண்மையில் சபையில் நிறைவேற்றப்பட்டிருந்தது. (எ-21)

## எகிறுகின்றது தங்க விலை!

யாழ்ப்பாணம். ஜன.7
உலக சந்தையில் தங்கத்தின் விலை அதிகரிப்பதால் இலங்கையில் கடந்த இரு வாரங்களாக தங்கத்தின் விலை உயர்வடைந்து செல்கிறது.
உலக சந்தையில் தற்போது நாளுக்கு நாள் தங்கத்தின் விலை அதிகரித்துச் செல்வதால் இலங்கையில் அதன் விலை 70 ஆயிரம் ரூபாவாக உயர்வடைவதற்குவாய்ப்புள்ளது என்று தங்க இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.
24 கரட் பிஸ்கட் தங்கத்தின் ஒருபவுணின்விலை64ஆயிரம் ரூபாவாகவும் 22 கரட் தங்கத்தின் ஒரு பவுணின் விலை 58 ஆயிரத்து 500 ரூபா முதல் அதிகரித்துள்ளது.
யாழ்ப்பாணத்திலும் இந்த விலைகளுக்கு அமையவே நகைகள்விற்பனைசெய்யப்படுகிறன என்று நகைக் கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.
சிங்கப்பூர் தங்கமாயின் 22 கரட்டுடைய ஒரு பவுண் தங்கம் 62.500ரூபாவுக்கு அதிகமாகவே யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்படுகிறது என்று யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நகைக்கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர். (எ-21)

## ஐ.ம.சு.முன்னணிக்கு எதிராக செயற்படேன்

### ரஞ்சித் டி சொய்சா எம்.பி தெரிவிப்பு




கொழும்பு. ஜன.7
கட்சித் தலைமைக்கு எதிரான சூழ்ச்சிக்கு ஒருபோதும் துணை போகமாட்டேன்என்றுதெரிவித்துள்ளார்ஐக்கியமக்கள்சுதந்திர முன்னணியின் தேசியப்பட்டில் நாடா ளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டிசொய்சா.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் குழுவொன்று ஐக்கிய தேசிய முன்னணி அரசில் இணைவுள்ளதுஎன்றுவெளியானசெய்திகள்தொடர்பில்கேட்டபோதேஅவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டின் எதிர்கால நலன்கருதியே ஐக்கிய தேசிய முன்னணி தலைமையில்அமைந்தஅரசுக்குஆதரவுதெரிவித்திருந்தேன். அதற்காகநான்கட்சியின்தலைமைக்குதுரோகம்செய்துஅந்தத் தலைமைக்குஎதிராகசூழ்ச்சிசெய்வதற்குஒருபோதும்துணை போகமாட்டேன்.
நான் இன்னமும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு உறுப்பினராகவே இருக்கின்றேன். நாட்டில்அரசுஒன்றுநிலையாகக்காணப்படாமையால்ஏற்பட்ட நிலமைகளை கவனத்தில் கொண்டுதான்புதியஅரசுஅமைப்பதற்குஒத்தாசைகளைவழங்கியுள்ளோம். அதற்காக கட்சி மாறியதாகக் கொள்ளமுடியாது.
தவறான முடிவுகளை எடுத்து அதற்கு செயல்வடிவம் கொடுக்க முனைவார்களாயின் அதற்கு எதிர்ப்புக்களை வெளியிடாது இருக்கப்போவதில்லை. அமைச்சுப் பதவிகளுக்காக அரசுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. நாட்டின் நலனை அடிப்படையாகக்கொண்டே அரசுக்கு ஆதரவளிக்கும் முடிவை எடுத்திருந்தேன். நான்நாடாளுமன்றத்தில்அங்கத்துவம்வகித்தகாலத்தில் நல்லதொருஅரசு இருக்கவில்லை. பொருளாதாரம்சரிவிலிருந்தது . நாடு செயற்படமுடியாது திண்டாடியது என்ற வரலாற்றுக் கறையில் எனது பெயரை பதித்துக்கொள்ள விரும்ப வில்லை. என்றார். (எ-31)

## புரிந்துணர்வு அடிப்படையில் செயலாற்றுகின்றது ஜ.ம.மு.

### வேலுகுமார் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு. ஜன.7
கொள்கை ரீதியிலான அரசியலை முன்னெடுத்து வரும் ஜனநாயக மக்கள் முன்னணி மக்கள் நலன் கருதியே தமிழ் பேசும்மக்களைப்பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுடன் புரிந்துணர்வு அடிப்படையில் இணக்கப்பாட்டு அரசியலை நடத்துகின்றது.
இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர்நாடாளுமன்றஉறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.
ஜனநாயக மக்கள் முன்னணியின் கண்டி மாவட்ட கிளைக் கூட்டத்தில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"ஜனநாயக மக்கள் முன்னணி கடந்துவந்த அரசியல் பாதை என்பது மலர்தூவிய பட்டுப்பாதைகிடையாது. கற்களும், முட்களும்நிறைந்த வழியிலேயே தலைவரின் தற்துணிவான வழிகாட்டலுடன். சவால்களை முறியடித்து நாம் வீறுநடை போட்டோம்.
எமது கட்சி இனவாதத்தையோ மதவாதத்தையோ முன்னிலைப் படுத்தி அரசியல் நடத்தும் கட்சி கிடையாது.
மக்களுக்கான அரசியலையே கொள்கை ரீதியாக முன்னெடுத்து வருகின்றது. எங்கு அநீதி அரங்கேறினாலும் அங்கு நீதியின் குரலாக நாம் நிற்போம்.
வடக்கில்தேர்தல்நடைபெற்றால்கடந்தகாலங்களில்கூட்டமைப்புக்கு ஆதரவாக எமது தலைவர் அங்கு சென்று பரப்புரை செய்வார். தலைநகரில் எமக்கு ஆதரவாக கூட்டமைப்பு பரப்புரை செய்யும். இவ்வாறு எமக்கிடையிலான உறவு ஏதோவொரு விதத்தில் நீடித்து நிலைக்கின்றது.
அதே போல் வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விமர்சிக்கும் கட்சிகளுடனும் நாம் உறவு வைத்துள்ளோம். பொதுவான நோக்கம் மக்களை மையப்படுத்தியதெனில் கரம்கோர்த்து செயற்படுவதில் தவறு கிடையாது" - என்றார். (எ)


# வெள்ளநீர் உட்புகுந்த கிணறுகள் சீரமைப்பு

கிளிநொச்சி, ஜன.7

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள நீர் உட்புகுந்த கிணறுகளைத் துப்புரவாக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. கனடா உறங்கா விழிகள் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் நிதி உதவியுடனும் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த வேலைத் திட்டத்தைக் கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் சங்கமும், கிறீன் பியூச் நேசன் பவுண்டேசனும் இணைந்து முன்னெடுக்கின்றன. (எ)

# குரங்குகளை விரட்ட கரைச்சிக்கு துப்பாக்கி



கிளிநொச்சி, ஜன.7

கரைச்சிப்பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளில் குரங்குகளின் தொல்லையைக் கட்டுப்படுத்துவதற்காகப் பிரதேச சபை இரு துப்பாக்கிகளைக் கொள்வனவு செய்துள்ளது என்று கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் அ.வேளமாலிகிதன் தெரிவித்தார்.

3 மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற சபை அமர்வில் வன்னேரிக் குளம் வட்டார உறுப்பினர் செல்வநாயகத்தால் குரங்குத் தொல்லையிலிருந்து மக்களையும், விவசாயிகளையும்காப்பாற்றுதல்எனநிறைவேற்றப்பட்டதீர்மானத்தின் அடிப்படையில் துப்பாக்கிகளைக் கொள்வனவு செய்யத் தீர்மானம் எடுக்கப்பட்டது. முதற்கட்டமாக இரு துப்பாக்கிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இந்தத் துப்பாக்கிகளைப் பயன்படுத்திப் புகைக் குண்டுகள் மூலமாகக் குரங்குகளை வனங்களுக்கு விரட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் தவிசாளர் குறிப்பிட்டார். (எ)

# தாதியர்வரவேற்புநிகழ்வில் தமிழ் மொழி புறக்கணிப்பு!

கொழும்பு, ஜன.7

யாழ்ப்பாணப்போதனாமருத்துவமனையில்இந்த ஆண்டுக்கான புதிய தாதியர் வரவேற்பு நிகழ்வு கடந்ததிங்கட்கிழமைஇடம்பெற்றது. அந்தநிகழ்வில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளது என்று பல தாதியர்கள்எதிர்ப்புத்தெரிவித்தமையினால்சர்ச்சை ஏற்பட்டது.

யாழ்ப்பாணப்போதனாமருத்துவமனையில்இயங்கும் தாதியர் பயிற்சிக் கல்லூரியின் வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றுள்ளது. தாதியர்பயிற்சிப்பாடசாலையின் பொதுவான சின்னம் மிகப் பிரமாண்டமான வடிவில் அலங்கரிக்கப்பட்டு அமைக்கப்பட்டிருந்தது. அதை அவதானித்த சில புகுமுக தாதியர்களும் பல மூத்த தாதியர்களும் சின்னம் தொடர்பில் கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

சின்னத்தில் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகள் மட்டுமே இருந்தபோதும் தமிழ் மொழி இருக்கவில்லை. அதனாலேயே எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. நிகழ்வு ஆரம்பமானபோதும் சர்ச்சைக்கு தீர்வு கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாகமருத்துவமனைப்பணிப்பாளரிடம் கேட்டபோது:

பயிற்சிப் பாடசாலை நிகழ்வில் வைக்கப்பட்டிருந்த சின்னத்தில் தமிழ் மொழி இல்லை என்ற சர்ச்சை எனது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதும் உடன்டியாக பயிற்சிப் பாடசாலையின் பொறுப்பதிகாரியிடம்அதுதொடர்பில்நேரடியாகவினவினேன். அவர் தாதியர்களின் தற்போதைய சின்னத்தைக் காண்பித்து அந்தச் சின்னத்தில் தமிழ் மொழி இல்லை என்ற விடயத்தை தெரிவித்தார்.

எனினும்யாழ்ப்பாணம்போதனாமருத்துவமனையில் எந்த நிகழ்வு நடத்துவதானாலும் நாட்டின் இரு தேசிய மொழிகளுடன் பொது மொழியையும் உள்வாங்கியே நடத்தப்பட வேண்டும் என்று கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது- என்றார். (எ-105)

# என்போன்ற பின்வரிசை உறுப்பினர்களால் மக்களுக்குச் சேவை செய்ய முடியவில்லை

## ஐ.தே.கவின் இம்ரான் எம்.பி. இப்படிக் கூறுகிறார்

மூதூர், ஜன. 7

**கடந்த மூன்று வருடமாகக் காணப்பட்ட தேசிய அரசின் மூலமாக என்னைப் போன்ற பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களால் நாம் நினைத்ததைப் போல் மக்களுக்குசேவைசெய்ய முடியவில்லை. மக்களின்எதிர்பார்ப்பைப்பூர்த்தி செய்யாமல் அடுத்த தேர்தலுக்கு முன் செல்ல முடியாது.**

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்தார்.

திருகோணமலையில்ஐக்கியதேசியக் கட்சி முக்கியஸ்தர்களுடன் நேற்று நடைபெற்றகலந்துரையாடலில்அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.


மக்களுக்குச் சேவை செய்யவே மக்கள் எங்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பியுள்ளனர். அமைச்சர்களின் ஒத்துழைப்புத் தான் எனது எதிர்பார்ப்பேதவிர, அமைச்சுப்பதவியல்ல. தற்போது ஐக்கிய தேசிய முன்னணியின் அரசு ஏற்படுத்தப்பட்ட பின் ஆதரவாளர்களிடம் பெரும் எதிர்பார்ப்புத் தோன்றியுள்ளது. அவர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யாமல் அடுத்த தேர்தலுக்கு செல்ல முடியாது.

இவ்வாறு கூறினால் அமைச்சுப்பதவியை எதிர்பார்க்கிறீர்களா என்று ஊடகங்கள்என்னிடம்வினவுகின்றன. 19ஆவது திருத்தச் சட்டத்தின்படி அமைச்சர்பிரதிஅமைச்சர்களின்எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நானும்அமைச்சுப்பதவிகேட்டுதலைமையை சிரமத்துக்கு உள்ளாக்க விரும்பவில்லை.

முன்னையகாலத்தைப்போல்அல்லாமல் இப்போது அமைச்சர்களின் முழுமையான ஒத்துழைப்பையே நான் தலைமை அமைச்சரிடமும் அமைச்சர்களிடமும் கோரியுள்ளேன். இவர்களின் முழுமையான ஒத்துழைப்பு எனக்குக்கிடைப்பின் பிரதி அமைச்சர்களை விடச் சிறப்பாகச் செயற்பட முடியும்.

ஆகவேஇனிவரும்காலங்களில்எமது கட்சி ஆதரவாளர்களின் எதிர்பார்ப்பைப் படிப்படியாக நிவர்த்தி செய்ய எண்ணியுள்ளேன். அவ்வாறுஅமைச்சர்களின்ஒத்துழைப்புக்கிடைக்காமல் எமது ஆதரவாளர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறாமல் போனால் நானும் அரசியல்ரீதியாகத்தீர்மானம்ஒன்றை மேற்கொள்ள வேண்டிவரும். அந்தத் தீர்மானம் கட்சி மாறும் தீர்மானமாக இருக்காது என்பதை மட்டும் கூறிக் கொள்ள விரும்புகிறேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (து-40)

# 27,000 ஏக்கர் விவசாயம் கிளிநொச்சியில் அழிவு



கிளிநொச்சி, ஜன.7

கிளிநொச்சிமாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குக் காரணமாக 27 ஆயிரம் ஏக்கர் பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று கிளிநொச்சிக் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

அண்மையில்பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் கிளிநொச்சி மாவட்டத்தில் குளங்களின் கீழ்ப் பகுதி மற்றும் தாழ் நிலப் பிரதேசங்களில்மேற்கொள்ளப்பட்ட பயிர்ச்செய்கைகள்அழிவடைந்துள்ளன. இரணைமடுக்குளம், கல்மடுக்குளத்தின்கீழானபயிர்ச்செய்கைகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டபயிர்ச்செய்கைக்கான இழப்பீடுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (எ-6)

# சு.க. உறுப்பினர்களுக்கு அங்கஜனால் நிதி உதவி

வலி.தென்மேற்கு, ஜன.7

வடக்கு மாகாணத்திலுள்ள பிரதேசங்களின் அபிவிருத்திக்கு உதவுவதற்கு முன்வந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அங்கஜன் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டுத் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு 50 ஆயிரம் ரூபாவிலிருந்து 2 இலட்சம் ரூபா வரை வழங்கியுள்ளார்.

நாட்டில் கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்றஉள்ளூராட்சிமன்றத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிசார்பில்போட்டியிட்டுத்தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் வட்டாரங்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் நாடாளுமன்ற உறுப்பினர்பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டநிதியிலிருந்து பலஇலட்சம்ரூபாவை ஒதுக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்குமாகாணத்திலுள்ளஉள்ளூராட்சிமன்றங்களில்சுதந்திரக்கட்சி சார்பில்37உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் வட்டாரரீதியில்கூடுதலானவாக்குகளைப் பெற்றுத் தெரிவு செய்யப்பட்ட 7 உறுப்பினர்களுக்குத் தலா 2 இலட்சம் ரூபா வீதமும் விகிதாசாரமுறையில்தெரிவுசெய்யப்பட்ட 30உறுப்பினர்களுக்குத்தலா 50 ஆயிரம் ரூபா வீதமும் அபிவிருத்திக்காக வழங்கப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் 13ஆம் வட்டாரத்தில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் வ.ஸ்கந்தராஜாவுக்குவழங்கப்பட்ட50ஆயிரம் ரூபா வட்டார அபிவிருத்திக்காக வழங்கப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் 13ஆம் வட்டாரத்தில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் வ.ஸ்கந்தராஜாவுக்கு வழங்கப்பட்ட ரூபா 50 ஆயிரத்துக்கு நாவலர் சனசமூக நிலையம்சுதுமலைவடக்குதெற்கு விவசாய சம்மேளனம் ஆகியவற்றுக்குத்தளபாடங்கள்வழங்கப்பட்டுள்ளன. (எ-115)

# விபத்தில் ஒருவர் காயம்

மன்னார், ஜன.7

மன்னார், பள்ளங்கோட்டையில்நேற்றுக் காலைநடந்தவிபத்தில்ஒருவர்படுகாயமடைந்துள்ளார்.

நானாட்டான், மடுக்கரைக் கிராமத்தில் இருந்து மன்னார் நோக்கிப் பயணித்த அரசபேருந்துடன்எதிரேவந்தஉந்துருளி மோதி விபத்துக்குள்ளனாது. உந்துருளியைச் செலுத்தி வந்தவர் படுகாயமடைந்தார். காயமடைந்தவர் மன்னார் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அரச பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநரிடம் முருங்கன் போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (எ-213)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவிகள்

யாழ்ப்பாணம், ஜன.7

வடக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இதுவரை 60க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் உதவிகளை வழங்கியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கில்அண்மையில்பெய்தமழையால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் அதிகம் பாதிக்கப்பட்டன. மக்கள் இடம்பெயர்ந்தனர். மாணவர்களும்பாதிக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள்க்குவலயக்கல்விப்பணிமனை ஊடாக பல்வேறு அமைப்புக்கள் உதவிகளை வழங்குகின்றன. கழகங்கள், அமைப்புக்கள், நிறுவனங்கள், ஊழியர் சங்கங்கள் எனப் பல தரப்பினரும் பாதிக்கப்பட்ட மாணவர்கள், பாடசாலைகளின் விவரங்களைப் பெற்று உதவிகளை வழங்குகின்றனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் ஆகிய வலயங்களைச் சேர்ந்த சுமார் 70க்கும்அதிகமானபாடசாலைமாணவர்களுக்கும், யாழ்ப்பாணம், மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சுமார்10க்கும்மேற்பட்டபாடசாலைமாணவர்களுக்கும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

உதவிகள் கிடைக்காத பாடசாலை மாணவர்கள்தொடர்பிலும், உரியதரப்பினருக்கு விவரங்கள்வழங்கப்பட்டுள்ளனஎன்றும், அவர்களுக்கும் உதவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-7)



## குமார் பொன்னம்பலத்தின் நினைவுதினம் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 7

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 19ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்றுமுன்தினம் க்டைப்பிடிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கொக்குவிலில் உள்ள தலைமை செயலகத்தில் இந்த நிகழ்வுநடைபெற்றது.

முன்னணியின் தலைவரும் குமார் பொன்னம்பலத்தின்புதல்வருமானகஜேந்திரகுமார்பொன்னம்பலம் தலைமையில் இதுநடைபெற்றது.

அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் குமார் பொன்னம்பலத்தின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து பொன்னம்பலத்தின் ஞாபகார்த்த உரைகள் இடம்பெற்றன. (கு)

# சு.கவின் 17 பேர் கொண்ட குழு தீர்க்கமான முடிவெடுக்கவுள்ளது

## ரணிலுடன் இணையலாம் என்றே உட்கட்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன

**கொழும்பு, ஜன. 7**

**வரவு – செலவுத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர், சு.கவின் 17 உறுப்பினர்களும் தீர்மானம்மிக்க முடிவொன்றை எடுக்கவுள்ளனர் என்று சு.கவின் தகவல்களிலிருந்து அறிய முடிகிறது. சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் இணைந்து பயணிப்பதற்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தியுள்ள நிலையில் அவர்கள் தீர்மானம்மிக்க முடிவெடுக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.**

உள்ளகத் தகவல்களின்படி குறித்த 17 பேரும் ஐக்கிய தேசிய முன்னணி அரசில் இணைவதற்கான நகர்வுகளில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அறிய முடிகிறது.

முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரறணதுங்கதலைமையில்17பேர் கொண்ட சு.கவின் குழுவொன்று ஐ.தே.மு. அரசியல் இணைந்து பயணிப்பதுதொடர்பில்தொடர்பேச்சுகளில் ஈடுபட்டுள்ளது.

இந்தக்குழுவின்முக்கியஉறுப்பினராக நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க உள்ளார். இவர் தனது நிலைப்பாடுதொடர்பில்சு.கவின்தலைவரும்.அரச தலைவருமான மைத்திரிபால சிறிசேனவிடம் அறிவித்துள்ளார்.

என்றாலும். அரச தலைவர் அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். என்றாலும்துமிந்ததிஸாநாயக்கஉள்ளிட்ட இந்தக்குழுவினர்சிறிலங்காபொதுமக்கள் முன்னணியுடன் இணைந்து பயணிக்க முடியாதென்று அரச தலைவரிடம் தெளிவாக வலியுறுத்தியுள்ளனர்.

இந்தக்குழுவை முன்னாள்அரசதலைவர் சந்திரிகா குமாரறணதுங்க வழிநடத்திவருகிறார். வரவு-செலவுத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் இவர்கள் ஐ.தே.மு. அரசில் இணையக்கூடுமென்று சு.கவின் தகவல் அறியும் வட்டாரங்களில் மேலும் அறிய முடிகிறது.

சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் பதவியிலிருந்த பேராசிரியர் நீக்கப்பட்டுத் தற்போது தயாசிறி ஜெயசேகர நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் மேற்கண்ட தகவல்கள் வெளியாகியுள்ளன. (கு)

# சுயநலத்தை உதறியெறிந்துவிட்டு ஒன்றித்துச் செயற்பட வாருங்கள்!

## தமிழ்க் கட்சிகளை அழைக்கிறார் ஆனந்தசங்கரி

கிளிநொச்சி, ஜன. 7

சுயநலம்கருதிச்சிலர்செயற்பட்டமையாலேயே அரசியல் இழுபறி நீடிக்கிறது. சுயநலத்தைஉதறித்தள்ளிவிட்டுஒன்றுபட்டுச் செயற்பட வாருங்கள் என்று தமிழர் நலனில்அக்கறை கொண்ட தமிழ்க் கட்சிகளுக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி அழைப்பு விடுத்துள்ளது. அனைவரும் ஒன்றுசேர்ந்து தந்தை செல்வாவின் கனவை நனவாக்குவோம் என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

தமிழ் மக்களின் பிரச்சினைகள் நாளாந்தம்வளர்ந்துகொண்டேபோகின்றனவேயன்றித் தீர்வு ஏற்படுவதாகத் தெரியவில்லை. விரும்பத்தகாதசக்திகள்எவையும்தமிழ்அரசுக்கட்சியின் சின்னத்தையும் அதன் பெயரையும் முறைகேடு செய்யக்கூடாதென்ற ஒரே காரணத்துக்காகவே தனது கணவர் தமிழ் அரசுக் கட்சியின்பதிவைபாதுகாத்துவைத்திருந்தார் என்று திருமதி அமிர்தலிங்கம் முன்னர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் அரசுக் கட்சியைச் சீரமைக்கும் எண்ணம் அவருக்கு ஒருபோதும் இருக்கவில்லை. அவரால்வளர்க்கப்பட்டசிலர் தற்போது தமிழ் அரசுக் கட்சியின் பெயரை முறைகேடு செய்யவும். அதனைச் சீரமைக்கவும் முற்படுவது கவலைக்குரியது என்றும் திருமதி அமிர்தலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்மைப்பு என்ற பெயரைக் காலத்துக்குக் காலம் பயன்படுத்தி மக்கள் ஒற்றுமையாக வாக்களிக்க வேண்டும் என்றும் தேர்தலைப் பன்னாட்டுச்சமூகம்உன்னிப்பாகக்கவனிக்கின்றது என்றும் வார்த்தைகளைக்கூறி தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொண்டார்கள். வெற்றி பெற்றவுடன், தங்களுக்குள் தனியாக, குழுவாகப் பிரிந்து செயற்படுவார்கள். அதன் விளைவுகள் கடந்த காலங்களில் இடம்பெற்ற தேர்தல்களில் பிரதிபலித்தன. தொடர்ந்தும் அந்த மாயைக்குள் சிக்கித் தவிக்காமல் மக்கள் விடுபட்டுவந்து உண்மையை உணர்ந்து செயற்பட ஆரம்பித்தமையாலேயேஉள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. இதே சிந்தனையில் மக்கள் செயற்பட்டால்பிரச்சினைகளுக்குவிரைவில்தீர்வு பெற்றுக்கொள்ள முடியும். இன்றுவரை தேர்தல்களில் தமிழர் விடுதலைக் கூட்டணிதனித்துசகலவட்டாரங்கள், தொகுதிகளிலும் போட்டியிடும் தீர்மானத்துடனேயே உள்ளது. அப்படி இருப்பதற்கு நியாயப்படுத்தக்கூடிய பலகாரணங்கள் உள்ளன. இதைச்சகலகட்சிகளின்தலைவர்களும்தத்தம்மனச்சாட்சியைத்தொட்டுக் கேட்க வேண்டும்.

சி.வி.விக்னேஸ்வரன்தமிழர்விடுதலைக் கூட்டணிக்குத் தலைமை ஏற்கும் பட்சத்தில் அவருடன் இணைந்து செயற்பட நாம் தயாராக உள்ளோம். இதே ஏற்பாட்டைத்தான்நான்குஆண்டுகளுக்குமுன்னர் கட்சியின் தலைவர் பதவியை விக்னேஸ்வரனுக்குவழங்கமுன்வந்தேன். தமிழர் விடுதலைக் கூட்டணி ஆரம்பிக்கப்பட்டபோது, அந்தக்கட்சிகள்ஒன்றாகச் சங்கமித்தமையேயன்றி, பங்காளிகளாக இருக்கவில்லை. இதேபோன்றதொருநிலைமைஆரம்பத்திலேயேஉருவாகுமாக இருந்தால் தேர்தல் முடிந்ததும் அனைவரும் ஒரே கட்சியாகத் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஏற்றுப் புதிய நிர்வாகம் தெரிந்து தந்தை செல்வாவின் கனவை நனவாக்குவோம். நல்லெண்ணம் படைத்த அனைவரையும் ஒன்றுசேர வருமாறு அழைக்கின்றேன் – என்றுள்ளது. (கு-6)

## நன்னீர்மீன்பிடிக்குத்தனிஅலகு தேவைகளை அது கண்டறியும்

யாழ்ப்பாணம், ஜன. 7

வடக்கு மாகாண நன்னீர் மீன்பிடிக்குத் தனியான அலகு வருட இறுதியிலிருந்து செயற்பட ஆரம்பித்துள்ளதாக மாகாண விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் கீழ் விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தித் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன உள்ளன. அதேபோன்று நன்னீர் மீன்பிடிக்கான செயற்றிட்டங்களையும் விவசாய அமைச்சு மேற்கொண்டு வருகிறது. நன்னீர் மீன்பிடியை அபிவிருத்தி செய்யவேண்டிய தேவை உள்ளது. குளங்கள் மற்றும் நீர்த் தேக்கங்களை அண்டியபகுதிகளில்நன்னீர்மீன்பிடியைவிருத்தி செய்யலாம். இதற்குத் தனியான பிரிவு ஒன்று வேண்டும் என்று அமைச்சுக்குக் கடந்த வருட ஆரம்பத்தில்தெரியப்படுத்தியிருந்தோம். அதன்படி கடந்தவருடம்நவம்பர்மாதம்தொடக்கம்விவசாய அமைச்சின் அலுவலகத்தில் நன்னீர் மீன் பிடிக்கான தனியான பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர்ஒருவரும், ஐந்துமாவட்டங்களுக்கும் தனியான விரிவாக்கல்அலுவலர்கள்தலாஒருவர் வீதமும் நியமிக்கப்பட்டுள்ளனர். வடக்கு மாகாணத்தில்உள்ளசுமார்64நன்நீர்மீன்பிடிச்சங்கங்களுடன் கலந்துரையாடி அவர்களுக்குத் தேவையான விடயங்களை அறிக்கையிடும் பணிகளை அவர்கள் ஆரம்பித்துள்ளனர். இவ்வாறு திரட்டப்படும்தரவுகள்மூலமாகமக்களுக்குத்தேவையான விடயங்களை அறிந்து நன்னீர் மீன் பிடியை விருத்தி செய்யக்கூடியதிட்டங்களைஇந்த ஆண்டு வகுத்து அதனை நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (கு-7)

## பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில்

# உறுப்பினர்கள் செய்த செயற்றிட்டங்கள் என்ன? பேரவைச் செயலகத்தில் சமர்ப்பிக்கப் பணிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 7

வடக்குமாகாணசபைஉறுப்பினர்களுக்கு 2018ஆம்ஆண்டுவழங்கப்பட்டபிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் மேற்கொண்ட செயற்றிட்டங்கள் தொடர்பான அறிக்கையைத் திணைக்களங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பேரவைச் செயலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடைநிதியாகவடக்குமாகாணசபையின் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் 6 மில்லியன் வீதம் 228 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது. இந்த நிதியில் ஒவ்வொரு உறுப்பினரும் பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டனர். அவை நிறைவடைந்திருக்க வேண்டும். செயற்றிட்டம் தொடர்பானஅறிக்கையைத்தயாரிப்பதற்கு ஏதுவாக வேலைகள் நடைபெற்று வருகின்றன. உறுப்பினர்கள் திணைக்களங்கள் ஊடாகவும்பல்வேறுவேலைத்திட்டங்களை முன்னெடுத்திருப்பார்கள். ஆகவே அது தொடர்பானஅறிக்கைகளை மாகாணபேரவைச் செயலகத்துக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் திணைக்களங்கள் ஒப்படைக்க வேண்டும். உறுப்பினர்கள் மேற்கொண்டசெயற்றிட்டவிவரங்களைஉள்ளடக்கியசெயற்றிட்டப்புத்தகம்ஒன்றும்முதற்தடவையாக வெளியிடப்படவுள்ளதாக பேரவைச்செயலகவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (கு-7)

## இறுதிச்...

ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

பிளவுபடாத நாட்டுக்குள் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு கிடைத்துள்ள இறுதிச் சந்தர்ப்பத்தை சிங்கள மக்கள் தவறவிடக் கூடாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ள கருத்துத் தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்புத் தொடர்பில் இரா.சம்பந்தனும், எம்.ஏ.சுமந்திரனும் வெளியிடும் கருத்துக்கள் இன ஒற்றுமைக்கு வழிவகுப்பவையாக உள்ளன. அவர்களின் கருத்துக்களை மனதார வரவேற்கின்றோம். பிளவுபடாத நாட்டுக்குள் மூவின மக்களும் ஏற்கும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை இந்த அரசு வழங்கியே தீரும். எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதிக்கு முன் புதிய அரசமைப்புக்கான வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

நாட்டின் மீதும் மக்கள் மீதும் அக்கறையுள்ள அனைவரும் புதிய அரசமைப்புக்கு ஆதரவு வழங்குவார்கள். நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கும் அரசமைப்பு விவகாரம் தொடர்பில் மகிந்த அணியினர் கருத்துக்களை வெளியிடும் போது மிகவும் அவதானமாக இருக்கவேண்டும் - என்றார். (ஓ.5.22)

## கூட்டமைப்பு...

யாது. இதற்கு ஒருபோதும் நாம் இடமளியோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அவசரப்படாமல் பொறுமையாக இருந்தால் மூவின மக்களும் ஏற்கும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை நாமே முன்வந்து வழங்குவோம். இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

'பிரிக்கப்படாத நாட்டுக்குள் தீர்வுகாண இதுவேதான் இறுதிச் சந்தர்ப்பம். சிங்கள மக்கள் தவறவிடக்கூடாது. தமிழ் மக்கள் சார்பில் மிக நிதானமாக, மிகப் பொறுப்போடு நாடு பிளவுபடாமல் இருப்பதை உறுதி செய்து, அர்த்தமுள்ள விதத்தில் அதிகாரங்களை மாத்திரம் பிரியுங்கள். நாட்டைப் பிரிக்கவேண்டாம் என்று கேட்கின்ற நிலையில் நாங்கள் இருக்கின்றோம்' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கேட்டபோதே மகிந்த ராஜபக்ச மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பின் ஊடாக வரப்போகும் தீர்வை 'ஒற்றையாட்சி' என்று ரணில் தலைமையிலான தரப்பினரும், 'ஒருமித்த நாடு' என்று சம்பந்தன், சுமந்திரன் தலைமையிலான தரப்பினரும் இருவேறு குழப்பகரமான விளக்கங்களை வழங்கி நாட்டு மக்களை ஏமாற்றி வருகின்றனர். எனினும், புதிய அரசமைப்பில் சொற்பதங்கள் இருவேறு கருத்தாக இருந்தாலும் வழங்கப்படவுள்ள அதிகாரங்கள் கூட்டாட்சியை விட வலிமை பொருந்தியதாகவும், நாட்டைத் துண்டுகளாக்கும் வகையிலும் அமையப்போகின்றன. அதனால்தான் புதிய அரசமைப்பு உருவாக்கத்தை நாம் எதிர்க்கின்றோம்.

தீர்வுக்கான இறுதிச் சந்தர்ப்பம் இதுவல்ல. நாம் ஏற்கனவே வழங்கிய பல சந்தர்ப்பங்களை தமிழ்த் தலைமைகள் தவறவிட்டன. இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உணர்ந்துகொள்ள வேண்டும் - என்றார். (ஓ.5.22)

## மைத்திரியின்..


மைத்திரிபால சிறிசேன முன்னெடுப்பதாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது. இவ்வாறானதொரு நிலையில், அலரிமாளிகையில் ஐக்கிய தேசிய முன்னணியினரை ரணில் விக்கிரமசிங்க நேற்றுச் சந்தித்தார். இதன்போது, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் சுற்றறிக்கை சிறப்பானது என்றும் அதற்கு அமைவாக அமைச்சர்களைச் செயற்படுமாறும் அவர் பணித்துள்ளார். (ஓ.5)

## சம்பள...

வேண்டும். அரச ஊழியர்களது சம்பளத்துக்கு 147 பில்லியன் ரூபாவும் ஓய்வூதியர்களது கொடுப்பனவுக்கு 12 பில்லியன் ரூபாவும் மேலதிகமாக ஒதுக்கப்படவேண்டும் என்று ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளதாக கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அரச வரி வருமானத்தில் 44 சதவீத நிதி அரச ஊழியர்களது சம்பளத்துக்கு என்று ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2018ஆம் ஆண்டு அரச வரி வருமானமாக 2 ஆயிரத்து 40 பில்லியன்' ரூபா கணிப்பீடு செய்யப்பட்ட நிலையில் அதில் 900 பில்லியன் ரூபா அரச துறையினரின் சம்பளத்துக்கு என ஒதுக்கீடு செய்யப்பட்டது.

நாட்டில் ஆயிரத்து 125 அரச நிறுவனங்களில் 15 லட்சம் பேர் பணியாற்றுகின்றனர் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. (ஓ.5)



## நீண்ட...

யில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. தொடருந்து வெள்ளோட்டத்துக்காக அமைச்சர் அர்ஜுன ரணதுங்க ஏறி அமர்ந்து ஆரம்பித்துவைக்க முற்பட்ட போதே போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இது மகிந்த ராஜபக்சவால் அமைக்கப்பட்ட தொடருந்துப் பாதை எனத் தெரிவித்தே அவர்கள் போராட்டம் நடத்தியுள்ளனர். இருப்பினும் வெள்ளோட்டம் நடத்தப்பட்டது.

இதன்போது கருத்து வெளியிட்ட அமைச்சர் ரணதுங்க:

மாத்தறையில் இருந்து கதிர்காமம் வரை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தொடருந்துப் பாதையின் நிர்மாணப்பணிகள் மூன்று கட்டங்களாக இடம்பெறவுள்ளன. முதல் கட்டமாக 26 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்ட பாதை மாத்தறையில் இருந்து பெலியத்த வரையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகளுக்காக 278 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளன. சீன எக்ஸிம் வங்கி நிதியை வழங்கியுள்ளது.

இரண்டாம் கட்டமாக பெலியத்தயிலிருந்து அம்பாந்தோட்டை வரை 48 கிலோமீற்றர் தூரமும் மூன்றாம் கட்டமாக அம்பாந்தோட்டையிலிருந்து கதிர்காமம் வரையிலான 39 கிலோமீற்றர் தூரமும் தொடருந்துப் பாதை அமைக்கப்படவுள்ளது - என்றார். (ஓ.5)

## மைத்திரி ...

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டைப் பிரிப்பதோ துண்டாக்குவதோ எமது நோக்கமல்ல. நீதி மற்றும் சமத்துவம் என்பவற்றின் அடிப்படையில் பிரிக்க முடியாத பிளவுபடாத ஒருமித்த நாட்டுக்குள் தேசியப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வை நாம் அடைந்திட வேண்டும். இதுவே எமது நிலைப்பாடு. இதில் நாம் உறுதியாக உள்ளோம்.

குறுகிய அரசியல் எண்ணம் கொண்ட இனவாதிகள் பிரிவினைவாதிகள் புதிய அரசமைப்பு விவகாரத்தை தங்கள் சுயநல அரசியலுக்குப் பயன்படுத்த முயல்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அவர்கள் கண்டபடி வசைபாடுகின்றனர்.

இதைப் பார்த்து நாம் சோர்ந்துபோகமாட்டோம். பின்வாங்கமாட்டோம். எமது பணி தொடரும்.

எந்தத் தடைகள் வந்தாலும் அதனைத் தகர்த்தெறிந்து முழு மூச்சுடன் நாம் பயணிப்போம். எமது இலக்கை அடைந்தே தீருவோம். புதிய அரசமைப்பைக் குழப்பும் முயற்சிகளை நாம் ஓரணியில் நின்று தோற்கடிக்க வேண்டும். இதற்கு மைத்திரி, ரணில், மகிந்த ஆகிய தரப்பினர் ஒத்துழைப்புக்களை வழங்கவேண்டும்.

புதிய அரசமைப்பு விவகாரத்தில் நான் பெரிது, நீ பெரிது என்று இல்லாமல் நாடுதான் முக்கியம் என்ற வகையில் நாம் செயற்பட வேண்டும். கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகளை புதிய அரசமைப்பு விவகாரத்துடன் எவரும் தொடர்புபடுத்தக்கூடாது. இது நாட்டின் நலன் சார்ந்த விடயம் என்பதை அனைவரும் நினைவில்கொள்ள வேண்டும் - என்றார். (ஓ.5.22)

## கஞ்சாக்காரர்களுக்கு...

இந்தச் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் நேற்று இரவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

செம்பியன்பற்றுப் பகுதியில் சிவில் உடையில் துப்பாக்கியுடன் நின்றவர்களை அந்தப் பகுதி இளைஞர்கள் இராணுவத்திடம் ஒப்படைத்தமையால் ஒப்படைத்த இளைஞர்கள் கஞ்சா கடத்தியதாக சிவில் உடையில் வந்தோர் தகவல் வெளியிட்டிருக்கின்றனர்.

செம்பியன்பற்றுப் பகுதியில் கடந்த 4ஆம் திகதி நிகழ்வுக்குச் செல்வதற்கு என்னால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. 3ஆம் திகதி மாலை அந்தப் பகுதியில் சிலர் சிவில் உடையில் சந்தேகத்துக்கு இடமாக நீண்ட நேரமாக நடமாடியுள்ளனர். அதனை அவதானித்த இளைஞர்கள் அவர்களை அணுகி விசாரித்தபோது தாங்கள் பொலிஸார் எனக் கூறியுள்ளனர். பொலிஸார் எனக் கூறியவர்களிடம் அடையாள அட்டையை காண்பிக்குமாறு கோரியுள்ளனர். சிவில் உடையில் நின்றோர் கைத் துப்பாக்கிகளை காண்பித்துள்ளனர்.

அந்த இளைஞர்கள் துப்பாக்கியை காண்பிக்காது அடையாள அட்டையை காண்பிக்குமாறு கோரியுள்ளனர். அங்கே சிவில் உடையில் நின்ற ஆயுததாரிகள் வாகனத்தில் அந்த இடத்தில் இருந்து நகர்ந்து சென்றதனால் சில இளைஞர்கள் அவர்களை உந்துருளிகளில் பின்தொடர்ந்த அதேநேரம் அருகில் இருந்த இராணுவ முகாமுக்கும் தகவல் வழங்கியுள்ளனர். இராணுவத்தினர் அந்த வாகனத்தை விரட்டிப் பிடித்துள்ளனர்.

பிடித்தபோது சிவில் உடையில் ஆயுதங்களுடன் இருந்த அனைவரும் பொலிஸார் என்று இராணுவத்தினர் அடையாளம் கண்டுள்ளனர். இருப்பினும் பளைப் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் பிரகாரம் பளைப் பொலிஸாரும் அந்த இடத்துக்கு வந்திருந்தனர். அங்கே சிவில் உடையில் ஆயுதங்களுடன் இருந்த பொலிஸார் சீருடைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட சிவில் உடைப் பொலிஸார் பின்தொடர்ந்து வந்த கிராம இளைஞர்கள் தம்மை தாக்கியதாகவும் தாம் சிறப்புப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸார் எனப் பளைப் பொலிஸாரிடம் தெரிவித்தனர். இதனால் பின்தொடர்ந்து சென்றவர்களிலும் 4 இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இந்த விடயம் எனது கவனத்துக்கு கொண்டுவந்த நிலையிலேயே நான் பிரதிப் பொலிஸ்மா அதிபரைத் தொடர்பு கொண்டு விடயத்தை விளக்கினேன். இந்த இடத்தில் குறித்த சம்பவத்துடன் பலர் தொடர்புபட்ட நிலையில் எவ்வாறு பொய்யான ஓர் தகவல் கொடுக்கப்பட்டது என்று தெரியவில்லை என்றுள்ளது. (ஓ.5.6.26)

## பெண்..

பொலிஸாரைக் கண்டதும் ஆயுதங்களை தூக்கி எறிந்துவிட்டு தப்பியோடியதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து இராணுவத்தினர் அந்தப் பகுதியில் தேடுதலில் ஈடுபட்டிருந்தனர். எவரும் கைதாகவில்லை.

இந்த நிலையில் கனகராயன்குளம், ஆலங்குளம், புதுக்குளம் பகுதிகளில் கடந்த சில தினங்களாக பொலிஸார், இராணுவத்தினர் இணைந்து மிகப் பெரிய தேடுதலை முன்னெடுத்திருந்தனர். இதன்போதே சந்தேகத்தில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீட்டில் வேட்டைத் துப்பாக்கி வைத்திருந்த 20 வயது இளைஞன் ஒருவரும், புதுக்குளம் பகுதியில் 35 வயதுடைய இளம் குடும்பப் பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளார். நெடுங்கேணியைச் சேர்ந்த இளைஞனும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் பொலிஸார் கைது செய்துள்ளனர். கணவரைப் பொலிஸார் தேடிச் சென்றபோது அவர் தலைமறைவாகி விட்டார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். அதனையடுத்தே அவரது 35 வயது மனைவியை புதுக்குளம் பகுதியில் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவருடன் 10 வயது மகளும் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். (ஓ.5.105)

# யாழில் அதிகரித்துவரும் கற்றாளைக் கடத்தல்கள்



யாழ்ப்பாணம்,ஜன.7

**மருத்துவக் குணமுடைய இயற்கை மூலிகையான கற்றாளைக்குபெரும்கிராக்கிஏற்பட்டுள்ளநிலையில்யாழ்ப்பாணக்குடாநாட்டில்தற்போது கற்றாளைக் கடத்தல்கள் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன.**

தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களும் உள்ளூர் வாசிகளும் கற்றாளையைப் பிடுங்கி விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

தீவகம் உள்ளிட்ட சில இடங்களில் கற்றாளைக்கன்றுகளைப்பிடுங்கிச்செல்வோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையில் கடந்த மாதம் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பொன்னாலையில் கற்றாளைக் கன்றுகளைப் பிடுங்கிவாகனத்தில்ஏற்றிச்செல்லமுற்பட்டதென்னிலங்கையைச்சேர்ந்தவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர்.

சிறியரகவடிவாகனத்தில்வருகைதந்த தென்னிலங்கைச்சிங்களவர்கள்நால்வர் பொன்னாலை மயானத்துக்குச் செல்லும் வீதியில் கற்றாளைகளைப் பிடுங்கியுள்ளனர் இதை அவதானித்த சமூக ஆர்வலர் செ.றதீஸ்வரன் அப்பகுதிபிரதேசசபைஉறுப்பினருக்குஅறிவித்தார். சம்பவ இடத்துக்குச் சென்ற இருவரும் கற்றாளைப் பிடுங்கியவர்களை எச்சரித்ததுடன் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்க முற்பட்டனர்.

வவுனியாவில்உள்ளபாம்ஒன்றுக்கே கற்றாளைகளைக்கொண்டுசெல்வதாகக்கூறியதுடன் குறிப்பிட்டளவான கற்றாளைகளைப்பிடுங்கிச்செல்லஅனுமதிக்குமாறு தென்னிலங்கை வாசிகள் கேட்டுக்கொண்டனர்.

ஆனால், இயற்கை மூலிகையான கற்றாளையை முற்றாகப்பிடுங்கிச்செல்ல அனுமதித்தால் அது அழிவடைந்துவிடும் என்பதை எடுத்துக் கூறிய மேற்படி இருவரும், அவர்கள் பிடுங்கிய கற்றாளைகளை மட்டும் கொண்டுசெல்ல அனுமதித்து திருப்பி அனுப்பினர்.

மருத்துவ தேவைக்கு கற்றாளைகளைக் கொண்டு செல்வதாயின் வலி. மேற்கு பிரதேசசெயலகத்தில் அனுமதி பெற்று வாருங்கள் எனவும் அவர்களுக்குஅறிவுறுத்தப்பட்டுள்ளதாகதெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் உள்ள மரக்கன்று விற்பனை பண்ணைகளில்ஒருகற்றாளைக்கன்று60 ரூபா தொடக்கம் 80 ரூபா வரை விற்பனைசெய்யப்படுகின்றன. (ஐ)



## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள்


கொடிகாமம், ஜன. 7

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவும் இதயங்கள் நிறுவனத்தினால் உலர் உணவுப் பொதிகள் வழங்கும்நிகழ்வு வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர்புவனேஸ்வரன்தலைமையில்கடந்தசெவ்வாய்கிழமை இடம்பெற்றது.

உடையார்கட்டு தெற்கில் 50 குடும்பங்களுக்கும், தேராவில் இளங்கோபுரம்கிராம அலுவலர்பிரிவில்167 குடும்பங்களுக்கும், உதவும் இதயங்கள் வள்ளிபுனம் மகளிர் அமைப்பின் 35 குடும்பங்களுக்கும், புதுக்குடியிருப்பு கோம்பாவில் கமக்காரர் அமைப்பில் உள்ள 23 குடும்பங்களுக்கும், புதுக்குடியிருப்புமேற்குஉதிக்கும்திசைகிராமஅபிவிருத்திச்சங்கத்தில் உள்ள 27 குடும்பங்களுக்கும் மொத்தமாக 302 குடும்பங்களுக்கு 5 லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர்புவனேஸ்வரன் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பிரதேச மக்களுக்கு இந்த உதவியை உதவும் இதயங்கள் அமைப்பினர் வழங்கினர்.

உதவும் இதயங்கள் நிறுவனத்தின் உறுப்பினர் செல்வன் கிசோபன், செல்வன் தனுசன் ந.கிரியாகரன் பா.பாலேஸ்வரன் ஆகியோருடன் நலன் விரும்பிகள் இணைந்து உலர் உணவுப்பொருள்களை வழங்கி வைத்தனர். (ஐ-159)



## பல்கலையில் பயன்தரு மரங்கள் நடப்பட்டன

யாழ்ப்பாணம், ஜன. 7

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் மருத்துவப்பீடத்தினை அழகு படுத்தும் செயற்திட்டம் நல்லூர்ப் பிரதேச சபையினரால் கடந்த வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

சபையின் தவிசாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சூழலில் 50 பயன்தரு மரங்கள் நடப்பட்டன.

நடப்பட்ட மரங்களைப் பாதுகாக்கும் வகையில் பாதுகாப்பு வேலிகள் போடப்பட்டன. அமைக்கப்பட்ட சுற்று வேலிகளில் மரம் வளர்ப்பது தொடர்பான விழிப்புணர்வு வாசகங்களும் தொங்க விடப்பட்டுள்ளன. இந்த நிகழ்வில் சபை உறுப்பினர்கள் அலுவலகர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ஐ-8)



## உதவிகள் வழங்கல்

யாழ்ப்பாணம்,ஜன.7

யாழ்ப்பாணம் காரைநகர் பிரதேசத்தில் வறுமை நிலையில் உள்ள 25 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொருள்களும், அதே இடத்தைச்சேர்ந்த பாடசாலை மாணவர்கள் 5 பேருக்கு ஈருருளிகளும் வழங்கப்பட்டுள்ளதாகத் தரைப்படை ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வானது காரைநகர் சனசமூக நிலைய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட் டியாராச்சியின் ஆலோசனைக்கு அமைவாக பிரிகேடியர் நிலைப்பொறுப்பதிகாரி பிரிகேடியர் ஏடி அல்வத்தினால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ)

சாவகச்சேரி நீதிமன்றில்

## நான்கு நாள்களில் 8 லட்சம் தண்டம்

சாவகச்சேரி, ஜன. 7

சாவகச்சேரிநீதிமன்றினால்இந்தவருடத்தில்முதல்நான்குநாள்களில் போக்குவரத்து விதிமுறைகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில்சாரதிகளுக்கு 8 லட்சத்து 45 ஆயிரத்து 500 ரூபா தண்டமாக விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருட மாரிகால பருவகால விடுமுறை காலத்தில் போக்குவரத்து மீறிய சாரதிகளுக்கு எதிராகக் கொடிகாமம் சாவகச்சேரி பொலிஸார் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.

இந்தவழக்குகள்கடந்தமுதலாம்திகதிதொடக்கம்நான்காம்திகதி வரையான நான்கு நாட்களில் போக்குவரத்து விதிமுறைகளை மீறிய சாரதிகளுக்கு எதிராகப் பல்வேறு வகையான வழக்குகள் தாக்கல்செய்யப்பட்டன. வழக்குகள்நீதிமன்றில்விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது ஆயிரம்ரூபாதொடக்கம் 2லட்சம்ரூபாவரை தண்டமாக விதிக்கப்பட்டது. அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றியமை, மதுபோதையில் வாகனம் செலுத்தியமை, சாரதிய அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வாகன வரிப் பத்திரம் ஆகியவை இன்றியும், சாரதிய அனுமதிப் பத்திரமில்லாதவர்களுக்கு வாகனம் செலுத்த் வழங்கிமை, ஆசனப் பட்டி அணியாமை, தலைக்கவசம்அணியாமைஉள்ளிட்டகுற்றங்களுக்காக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. (ஐ-9)



## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

கொடிகாமம், ஜன. 7

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு விசுவமடு மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 200 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாண உலகத்தமிழர் மாணவர் ஒன்றியத்தின் ஊடாக இன்பர்சிட்டி வேல்முருகன் தொண்டர்கள் இணைந்து 2லட்சத்து50ஆயிரம்ரூபாபெறுமதியான கற்றல் உபகரணங்களை அண்மையில் வழங்கியிருந்தனர். மேலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வட்டக்கச்சியைச் சேர்ந்த 200 குடும்பங்களுக்கும் உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. (ஐ-159)

## வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் பொங்கல் விழா

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் ஆண்டுதோறும் மிகப்பிரமாண்டமாகக் கொண்டாடபட்டுவரும் தமிழர் திருநாளான 'பொங்கல் விழா' இம்முறையும் இடம்பெறவுள்ளதாகசங்கத்தினர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணமாவட்டதாச்சிசங்கத்தின்அனுசரணையுடனான யாழ்ப்பாண மாவட்ட ரீதியில் தலைசிறந்த 16 அணிகள் மோதும் தாச்சிப் போட்டிகள் எதிர்வரும்12 ஆம் திகதி ஆரம்பமாகி 13ஆம் திகதி இரவு மின்னொளியில் இறுதி ஆட்டம் இடம்பெறவுள்ளது. மரதனோட்ட போட்டிஎதிர்வரும்13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கும், பட்டமேற்றும்போட்டி பொங்கல் தினத்தன்று காலை 8.30 மணிதொடக்கம் இடம்பெறவுள்ளன. மதியம் 1 மணி தொடக்கம் சறுக்குமரம் ஏறுதல், கயிறுழுத்தல், தலையணைச்சண்டை, கிடுகுபின்னல், சிறார்களுக்கானபோட்டிகள்மற்றும் ஏனையபொங்கல்விழாப்போட்டிகள், கலைகலாசார நிகழ்வு, நேத்திரம் சஞ்சிகை வெளியீடு, அதிஸ்டஇலாபச்சீட்டிழுப்புஎன்பனஇடம்பெறவுள்ளன. (ஐ-21)



மறவன்புலோ விநாயகர் சனசமூக நிலையத்துக்கு ஒருதொகுதி தளபாடங்கள் சாவகச்சேரி பிரதேச சபை அலுவலகத்தில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் கே.என் டக்ளஸ்தேவானந்தாவின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதியிலிருந்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் வழங்கப்பட்டன. (ஐ-159)

# உணவக உரிமையாளருக்கு நீதிமன்றினால் எச்சரிக்கை

சாவகச்சேரி.ஜன.7
சுகாதார சீர்கேடுடன் இயங்கும் உணவகத்துக்கு எதிராக பொதுச் சுகாதார பரிசோதகரால் எதிர்காலத்தில் நீதி மன்றில் வழக்கு தாக்கல் செய்யப்படுமாயின் உணவகத்தை மூடுவதற்கு நீதிமன்றம் கடும் நடவடிக்கை எடுக்கும் என்று உணவக உரிமையாளருக்கு சாவகச்சேரி நீதிமன்றினால் எச்சரிக்கை விடப்பட்டது. மக்களுக்கு தரமான உணவுகள் வழங்கும் அதே வேளை உணவகத்தையும் சீர்கேடின்றி பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு உணவக உரிமையாளரின் கடைமையுமாகும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

நாவற்குழியில் உள்ள உணவகத்துக்கு எதிராக அந்தப் பிரிவுப் பொதுச் சுகாதார பரிசோதகர் சமைத்த உணவுகளை திறந்த நிலையில் வைத்திருந்தமை, அழுக்குகள் படிந்த நிலையில் சமயலறை காணப்பட்டமை, காலாவதியான சோடா வகைகளை விற்பனைக்கு வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களுடன் கடந்த மாதம்19 ஆம் திகதி சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இது தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது பொதுச்சுகாதார பரிசோதகரால் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வரை உணவகத்தை மூடுமாறு உத்தர விட்டு வழக்கினை ஒத்தி வைத்தார்.

ஒத்திவைத்த வழக்கு கடந்த 2 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது உணவகத்தில் காணப்பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது என பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அறிக்கை சமர்ப்பித்ததை அடுத்து உணவக உரிமையாளரை எச்சரிக்கை செய்த நீதி மன்றம் 3 குற்றங்களுக்கும் தலா ஆயிரம் ரூபா வீதம் 3ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது. (ஐ-9)

# தென்மராட்சியில் முதன்முறையாக வெகுவிமர்சையாக பட்டிப் பொங்கல்

**தென்மராட்சி, ஜன. 7**
**தென்மராட்சி பிரதேச மக்கள் முதன்முறையாக பட்டிப் பொங்கல் தினமான எதிர்வரும் 16 ஆம் திகதி மாட்டு வண்டில் ஊர்வலத்தையும் பட்டிப் பொங்கலையும் சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் நடத்தவுள்ளனர்.**

பட்டிப் பொங்கலை ஊக்குவிக்கும் வகையில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கான குழு கவிஞர் த.நாகேஸ்வரன் தலைமையில் நேற்றுமுன்தினம் சாவகச்சேரியில் அமைக்கப்பட்டது.

அன்றைய தினம் மாலை சாவகச்சேரி சிவன் ஆலயத்தில் இருந்து மாட்டு வண்டில்கள் ஊர்வலமாகப் புறப்பட்டு தொடருந்து வீதி, அஞ்சலக வீதி வழியாக பெருங்குளம் சந்தியை அடைந்து அங்கிருந்து சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்குச் சென்று ஏ 9 முதன்மை வீதியூடாக சாவகச்சேரி பேருந்து நிலையத்துக்கு வந்ததும் பட்டிப் பொங்கல் ஆரம்மாகுமெனத் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி ஆவின அறவோர் சங்கத்தினர் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற மண்டபத்தில் நடத்திய கூட்டத்துக்கு பெருமளவான மக்கள் கலந்து கொண்டு பட்டிப் பொங்கல் நடத்துவதை வரவேற்றனர்.

பட்டிப் பொங்கல் எம்மத்தியில் வெகுவாகக் குறைந்து வரும் நிலையில் அதற்குப் புத்துயிர் ஊட்டும் வகையில் பொது அமைப்பினர் மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் இந்த விழாவினை நடத்தவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மாட்டு வண்டில்கள் வைத்திருப்போர் இந்த நிகழ்வில் கலந்து விழாவினைச் சிறப்பிக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஐ- 9)



யாழ்ப்பாண கல்வி வலயத்தின் உலக உளநல தினம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.பால்ராஜ் தலைமை அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக மருத்துவ கலாநிதி ஏ.ஜெ.புத்திசிகாமணி கலந்துகொண்டார்.(ஐ50)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்



கொடிகாமம், ஜன 7
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட துணுக்காய் வலய பேராறு மகா வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கடந்த வியாழக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன.

ஜேர்மன் ஸ்ருட்காட்டில் இயங்கும்உறவுகளுக்கு கரம் கொடுப்போம் அமைப்பினால் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ஐ -159)

# பேருந்தில் இருந்து வீழ்ந்து கணவன், மனைவி காயம்

சாவகச்சேரி. ஜன.7
பேருந்தில் இருந்து வீழ்ந்த கணவரைப் பிடித்தவாறு இருந்த மனைவியும் சேர்ந்து வீழ்ந்ததில் இருவரும் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் சாவகச்சேரி சரசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட கணவரை மருத்துவமனையில் சிகிச்சை பெற அழைத்து வந்த மனைவி அங்கு வந்த அரச பேருந்தில் கணவரை ஏற்றிவிட்டு தானும் ஏற முற்பட்ட வேளையில் கணவருக்கு வலிப்பு ஏற்பட்டு கீழே விழ அவரைப் பிடித்திருந்த மனைவியும் சேர்ந்து வீழ்ந்துள்ளார்.

இதனால் காயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

கணவர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற வீடு திரும்பியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# அபிவிருத்தி முன்மொழிவுகளை அனுப்பிவைக்குமாறு கோரிக்கை

நவாலி.ஜன.7
வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வகையில் மக்கள் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்ட பிரதேச மட்ட அபிவிருத்தி முன்மொழிகளை 2019 அபிவிருத்திக்காக வழங்கி வைக்குமாறு பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் வலி.கிழக்கு பிரதேச சபையின் தவிசாளரை கடிதம்மூலம் கோரியுள்ளார்.

2019ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி முன்மொழிவுகளை அமைச்சுக்களுக்கு முன்மொழிவு செய்வதற்காக தார்வீதி, சனசமூக நிலையங்கள், சந்தைகள், சிறியபாலங்கள், சிறிய மதகுகள், வாய்க்கால்கள், மயானங்கள் உள்ளிட்ட விவரங்களை இணைத்து அனுப்பி வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி கடிதத்தில் திட்டத்தின் பெயர், கிராம அலுவலர் பிரிவு, இடம், உத்தேச மதிப்பீடு, அளவு, பயனாளிகள் விவரம் என்பவற்றைக் கோரியே கடிதம் கேட்டுள்ளார். மேற்படி திட்டங்கள் மக்கள் பங்கேற்புடன் தயாரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார். (ஐ-50)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள்

யாழ்ப்பாணம்.ஜன. 7
கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை யாழ்ப்பாண மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வழங்கவுள்ளதாக சமாசத்தின் தலைவர் வ.தெய்வேந்திரன் தெரிவித்தார்.

மாவட்டத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கொத்தணிகள் போன்றவற்றின் பங்களிப்பில் சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான பொதிகள் வழங்கப்படவுள்ளன. இந்த வாரத்தில் இந் உதவிப் பொதிகளை வழங்கி வைக்கவுள்ளதாக சமாசத்தின் தலைவர் தெரிவித்தார். (ஐ-17)





# கலையரங்கு திறப்பு

வடமராட்சி.ஜன.7
யாழ்ப்பாணம் குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட கலையரங்கு திறப்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் முன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ்.சுமந்திரன் கலந்துகொண்டு கலையரங்கை திறந்து வைத்தார். துரித கிராம அபிவிருத்தித்திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரனால் ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. (ஐ-64)



நவாலி ஹேமலதா ஞாபகார்த்த நிதிய அனுசரணையுடன் வடலியடைப்பு ஆராதனா தையல் பயிற்சி நிலையத்தினால் நடத்தப்பட்ட தையல் கற்கை நெறியை நிறைவு செய்த 15 மாணவிகளுக்கு தையல் பயிற்சி டிப்ளோமோ சான்றிதழ்கள் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன. (ஐ- 50)

## மருத்துவ முகாமில் புதிய நோயாளர்கள் இனங்காணப்பட்டனர்

தென்மராட்சி, ஜன. 7
தொற்றாநோய்தொடர்பானமருத்துவபரிசோதனை முகாம்களில் நீரழிவு நோயினால் பீடிக்கப்பட்டுள்ள புதிய நோயளார்கள் இனங்காணப்பட்டுமேலதிகசிகிச்சைக்காகமருத்துவமனைக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.
சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினரால் ஒவ்வொருபொதுசுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளிலும் 35வயதுக்குமேற்பட்ட இருபாலாருக்கும்தொற்றாநோய் தொடர்பானமருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
அந்தவகையில்கொடிகாமம்கெற்பேலிகிராம மக்களுக்கான மருத்துவப் பரிசோதனை முகாம்கெற்பேலிமேற்குபொதுநோக்குமண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த முகாமில் 60 இற்கு மேற்பட்ட மக்கள் கலந்து கெண்டனர். அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் நீரிழிவு நோய் ஏற்பட்டுள்ள 12 பேர் கண்டுபிடிக்கப்பட்டு மேலதிகசிகிச்சைபெறுமாறு அறிவுறுத்தியுள்ளனர். (ஐ-9)



## வகுப்பறைத்தொகுதிதிறப்பு

வடமராட்சி. ஜன. 7
வடமராட்சிசெம்பியன்பற்றுஅ.த.க. பாடசாலையில் சீரமைக்கப்பட்ட வகுப்பறைத் தொகுதிக் கட்டடம் கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் க. கணேஸ்வரன் தலைமையில் திறந்து வைகப்பட்டது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், சிறப்பு விருந்தினராக மருதங்கேணிபிரதேசசெயலர் க.கனகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். துரிதகிராமிய அபிவிருத்தித்திட்டத்தின்கீழ் 10 லட்சம் ரூபா செலவில் இந்தக் கட்டடம் திறந்துவைக்கப்பட்டது. (ஐ-9)

## வடலியம்மன் பெருந்திருவிழாவில் சொற்பொழிவுகள்

சுன்னாகம், ஜன. 7
சுன்னாகம் மயிலணி அருள்மிகு முத்துமாரி அம்பாள் (வடலியம்மன்) ஆலய வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு சிறப்புச் சொற்பொழிவு ஆலய பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை காலை 11 மணிக்கு சமயஜோதி க.நிஜலிங்கம் அவர்களின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது.
முதல்நாள் சனிக்கிழமை சைவப்புலவர் ச. முகுந்தன் 'ஆதியில் காப்பும் அத்தாதியில் நூல் பயனும் கொண்ட அபிராமி அத்தாதி', 13 ஆம் திகதி சைவப்புலவர் ஏ.அனுசாந்தன். 'நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை ',14 ஆம் திகதி சைவப்புலவர் கா.கமலநாதன் 'சக்திபீடங்கள்', 15 ஆம் திகதி இளம்சைவப்புலவர் ச.நவநீதன் 'வரம் பல நல்கிடும் பராசக்தி' ,16 ஆம் திகதி சிவநெறிச்செம்மல் திருமதி மா.அனந்தலச்சுமி ' அம்பிகைவழிபாட்டில் காளி அம்பாள் ',17 ஆம் திகதி சைவப்புலவர் பொன் சந்திரவேல் 'முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கும் இல்லையே', 18 ஆம் திகதி சிவநெறிச்செம்மல் நித்தியபாபுதரன் 'தேர் உற்சவம் உணர்த்தும் வாழ்வியல் ',19 ஆம் திகதி சைவப்புலவர் கந்த சத்தியதாசன் 'ஆலய வழிபாட்டு முறைகள் ', 20 ஆம் திகதி சைவப்புலவர் செ.த.குமரன் ' ஐந்தொழில் தத்துவம் ' ஆகிய தலைப்புக்களில் சொற்பொழிவுகளை ஆற்றவுள்ளனர். (ஐ)

### யாழ்ப்பாணம் மாநகர பிரதேசத்தில்

# ஆயுள்வேத மருத்துவ நிலையங்கள் நவீன முறையில் சீரமைப்பு

யாழ்ப்பாணம்.ஜன.7
யாழ்ப்பாண மாநகர பிரதேசத்தில் உள்ள நான்கு ஆயுள்வேத மருத்துவ நிலையங்கள் நவீன முறையில் சீரமைக்கப்பட்டு வருகின்றனஎன்றுமாநகரசபையின்பிரதி முதல்வர் து.ஈசன் தெரிவித்தார்.
நல்லூர்.பாசையூர்.நாவாந்துறைமற்றும் யாழ் நகர் போன்ற இடங்களில் உள்ள ஆயுள்வேத மருத்துவ நிலையங்களே இவ்வாறு சீரமைக்கப்பட்டுவருகின்றன.
ஒவ்வொரு ஆயுள்வேத மருத்துவ நிலையங்களும் 5 லட்சம் ரூபா செலவில் சீரமைக்கப்பட்டுவருகின்றன.
யாழ்நகர் மற்றும் பாசையூர் ஆகிய ஆயுர்வேத மருத்துவநிலையங்கள் சீரமைப்புப் பணிகள் நிறைவடைந்து மக்கள் பயன்பாட்டுக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளன.
நாவாந்துறை மற்றும் நல்லூர் ஆயுள்வேத மருத்துவ நிலையங்கள் விரைவில் திறந்துவைக்கப்படும் - என்றார். (ஐ-17)



## உலர் உணவுப்பொதிகள் வழங்கல்

யாழ்ப்பாணம். ஜன.7
யாழ்ப்பாணத்தில் வறுமை நிலையில் உள்ள 335 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன என்று தரைப்படை ஊடக அறிக்கை தெரிவிக்கிறது. கரவெட்டி, சுழிபுரம், புனிநகர் மற்றும் அரியாலைபகுதிகளைச்சேர்ந்த குடும்பங்களுக்கே அண்மையில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.
புத்தாண்டைமுன்னிட்டுயாழ்ப்பாணபாதுகாப்புபடைக்கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சியின் ஏற்பாட்டில் அஸ்கிரிய மஹாதேரரின் அனுசரணையுடன் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.
நிகழ்வில் யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைக் கட்டளைத் தளபதி, இராணுவத்தின் உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம். ஜன. 7
இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் பேச்சு மொழி ஆங்கிலத்துக்கான 3 மாதகால கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
இக்கற்கை நெறிக்கு ஜி.சி.ஈ சாதாரண தரத்தில் சித்தி பெற்ற அனைவரும் விண்ணப்பிக்க முடியும். இதற்கான விண்ணப்பப் படிவங்களை நேற்றுமுன்தினம் தொடக்கம் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள எமது நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்று யாழ்ப்பாணப் பிராந்திய உதவிப் பணிப்பாளர் ஆர். கந்தவேல் தெரிவித்தார். (ஐ)



## விவசாய உபகரணங்கள் வழங்கல்

கொடிகாமம் ஜன 7
பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட இளம் விவசாய பயனாளிகளுக்கு முதற்கட்டமாக விவசாய உபகரணங்கள்வழங்கப்பட்டன.
பருத்தித்துறைபிரதேசசபைமண்டபத்தில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமைவழங்கிவழங்கப்பட்டன. மந்திகை, அல்வாய் வடமேற்கு, அல்வாய், துன்னாலை வடக்கு ஆகியகிராமங்களைச்சேரந்த 24 இளம்விவசாய பயனாளிகளுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.
நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் ஏற்பாட்டில் பருத்தித்துறைப் பிரதேச சபை உறுப்பினர் என். பாலரமேஸினால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.
அடுத்த கட்டமாக வறுமையில் கல்வி நடவடிக்கைகளை தொடரும் கற்றல் தேவையுடைய பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன என்றுபருத்தித்துறைபிரதேசசபைஉறுப்பினர்பாலரமேஸ் தெரிவித்தார். (ஐ-159)

### சாவகச்சேரிப் பகுதியில்

## மீண்டும் இறைச்சிக் கடைகளை திறக்குமாறு மக்கள் கோரிக்கை

சாவகச்சேரி.ஜன.7
சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கிய மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சிக் கடைகளை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் சபைத் தவிசாளரிடம் கோரிக்கைவிடுத்துள்ளனர். சாவகச்சேரி நகரப் பகுதியில் கடலுணவு விற்பனைப் பிரிவுக்கு அருகில் இந்த இறைச்சிக் கடைகள் இயங்கிவந்தன. கடந்த வருடம் ஆட்டிறைச்சிக் கடைகள் மூடப்பட்டதால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கினர்.
இந்த வருடத்துக்கு மாட்டிறைச்சிக் கடைகள் மற்றும் ஆட்டிறைச்சிக் கடைகள் குத்தகைக்கு விடப்படவில்லை என்று அறியமுடிகிறது. இந்நிலையில் பொதுமக்களின் நலன் கருதி தலா ஒரு கடை வீதமாவது திறந்து மக்களுக்கு சேவைகளை வழங்குமாறும் கேட்டுள்ளனர்.
இந்த விடயம் தொடர்பாக நகரசபைத் தவிசாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது இந்த வருடத்துக்கு மாட்டிறைச்சிக் கடை மற்றும் ஆட்டிறைச்சிக் கடைகளை குத்தகைக்கு விடுவது தொடர்பாக மூன்று முறை கேள்வி அறிவித்தல்கள் கோரியிருந்தும் எவரும் குத்தகைக்கு எடுக்க முன்வரவில்லை
இந்த நிலையில் இறைச்சிக் கடைகளை ஏலத்தில் விடுவது தொடர்பில் மேலிடத்திடம் அனுமதி கோரியுள்ளோம். அனுமதி கிடைத்தால் ஏலத்தில் விடப்படும் - என்றார். (ஐ-9)


## ஹெரோய்ன் வைத்திருந்தாரென அரியாலையில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 7
ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.
அரியாலை பூம்புகார் பகுதியில் வைத்து நேற்று அதே இடத்தைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞனை யாழ்ப்பாணம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.
சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய இவரிடம் சோதனை மேற்கொண்ட பொலிஸார் 5 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப் பொருளை மீட்டுள்ளனர்.
இதேவேளை கடந்த சில நாள்களுக்கு முன்னர் அரியாலை பகுதியில் 38 கிலோ கஞ்சா போதைப் பொருளை கடத்த முற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் சிறப்பு அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தார். (ஐ-8)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள்

கொடிகாமம், ஜன.7
வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு முல்லைத்தீவு நெத்தலியாறு மகா வித்தியாலயத்தில் தங்கியிருந்த 200 குடும்பங்களுக்கு உலர் உணவுகள் வழங்கப்பட்டன.
உதவும் இதயங்கள் நிறுவனத்தினால் சுமார் 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஐ-159)





## துப்புரவு செய்யப்பட்டது சந்தைக் குழாய்க்கிணறு

முல்லைத்தீவு.ஜன.7

நீண்டகாலமாகப் பாவனையற்றுக் காணப்பட்ட முல்லைத்தீவு குமுழமுனை பொதுச் சந்தைக்கு அருகாமையில் காணப்பட்ட குழாய்க் கிணறு கடந்த 4 ஆம் திகதி துப்புரவு செய்யப்பட்டு மக்கள் பாவனைக்காக விடப்பட்டுள்ளது.

கரைதுறைப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினர் திரு.இரத்தினசிங்கம் கவாஸ்கரின் முயற்சியில் குழாய்க் கிணறு சுத்திகரிக்கப்பட்டுள்ளது. (க-246)



## கற்றல் கருவிகள் வழங்கல்

முல்லைத்தீவு.ஜன.7

முல்லைத்தீவு முள்ளியவளை.கிழக்குப் பகுதியில் உள்ள 10 மாணவர்களுக்கும், அதே பகுதியில் அமைந்துள்ள சரசுவதி அறநெறிப் பாடசாலையில் கல்வி பயிலும் 25 மாணவர்களுக்கும் கற்றல் கருவிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வுகளில் முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன்,கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சி.லோகேசுவரன், சரசுவதி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி இ.சிவரஞ்சனாதேவி. மற்றும் சரஸ்வதி முன்பள்ளி ஆசிரியர் ர.சங்கீதை. ஆகியோரோடு மாணவர்கள். மற்றும் பெற்றோர்களும் கலந்துகொண்டனர்.(க-246)



## 84 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கல்

கிளிநொச்சி.ஜன.7

கிளிநொச்சி பன்னங்கண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலைக்கு அசோசியேறற்றட் மோட்டர் வே நிறுவனத்தின் சுசிக்கி பிரிவினரால் 84 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

உதவி வழங்கல் நிகழ்வில் வடக்கு நிறுவனத்தின் முகாமையாளர் ராஜ சிறிகாந்தன், பிராந்திய முகாமையாளர் சிகான் கேரத் மற்றும் ஊழியர்கள் பாடசாலை அதிபர் திருமதி ஜெயராணி.ஆசிரியர்கள் மாணவர்கள் நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-222)

# மாற்றுவலுவுள்ளோர் சங்கத்தினரால் கிணறுகள் சுத்தம் செய்யும் பணிகள்

**கிளிநொச்சி,ஜன.7**

**வெள்ள நீர் உட்சென்ற பொது மக்களின் கிணறுகளை சுத்தம் செய்யும் பணிகளை கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் சங்கம் முன்னெடுத்து வருகிறது.**



அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள பொது மக்களின் கிணறுகள் முழுமையாக வெள்ளத்தினால் மூடப்பட்டு வெள்ள நீர் உட்சென்றதன் காரணமாக மக்களின் நீர்த்தேவைக்கு பாவிக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இதனை கருத்தில் கொண்டு கிளிநொச்சி மாவட்ட மாற்று வலுவுள்ளோர் சங்கம் புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் இயந்திர சாதனங்களைக் கொள்வனவு செய்து பொது மக்களின் கிணறுகளைச் சுத்தம் செய்யும் பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

சங்கத்தின் தலைவர் பசுபதி உமாகாந்தன் தலைமையில் தற்போது பணிகள் தருமபுரம்புதுக்காட்டுப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பணி தொடர்ந்தும் பல பகுதிகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும். மாற்று வலுவுள்ளோர் சங்கம் அறிவித்துள்ளது. இதேவேளை, வெள்ள பாதிப்புக்களுக்கு உள்ளான மக்களுக்கும் மாணவர்களுக்கும் இந்தச் சங்கத்தினர். புலம் பெயர் உறவுகளின் உதவியுடன் தொடர்ந்தும் உதவிகளை முன்னெடுத்து வருகின்றனர். (க-214)

## ஆடை விற்பனை நிலையமாக மாறிய ஒலுமடுக் கிராம அலுவலர் அலுவலகம்

வவுனியா.ஜன.7

வவுனியா வடக்கு நெடுங்கேணி ஒலுமடு கிராமஅலுவலர் அலுவலகம் ஆடை விற்பனை நிலையமாக மாறியுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் நெடுங்கேணி ஒலுமடு மகா வித்தியாலயத்தில் கடந்த 3 ஆம் திகதி பாடசாலை மாணவர்களுக்கான சீருடை வவுச்சர்கள் வழங்கப்பட்டன.

இதனைக் கேள்வியுற்ற வவுனியாவில் இயங்கி வரும் ஓர் வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் வவுனியாவிலிருந்து பாடசாலைச் சீருடைத் துணி மற்றும் பாதணிகளை வாகனமொன்றில் ஏற்றிச்சென்று ஒலுமடு கிராம சேவையாளர் அலுவலகத்தினுள் வைத்து மாணவர்களுக்கு விநியோகம் செய்துள்ளார்.

இதன் பின்னர் ஒலுமடுப் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்கள் குறித்த கிராம அலுவலர் அலுவலகத்தினை முற்றுகையிட்டதையடுத்து. அவர் அங்கிருந்து சென்றிருந்தார்.

இந்த விடயம் தொடர்பாக ஒலுமடு கிராமஅலுவலரைத்தொடர்புகொண்டு வினாவிய போது:

சம்பவம் இடம்பெற்ற தினம் நான் சேனைப்புலவு கிராமத்தில் பதில் கடமையில் இருந்தேன். எனது அனுமதியின்றியே குறித்த விற்பனை நிலைய ஊழியர்கள் எனது அலுவலகத்தினை வியாபார நோக்கத்துக்குப் பயன்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளக் கோரி வவுனியா வடக்குப் பிரதேச செயலரிடம் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாக தெரிவித்தார்.

குறித்த பிரதேசத்தில் உள்ள வர்த்தகர்களிடம் சம்பவம் தொடர்பாக வினாவிய போது வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பகுதி போரினால் பாதிக்கப்பட்டு. தற்போது தான் மீண்டெழுந்து வந்து கொண்டிருக்கின்றோம்.

நெடுங்கேணியில் பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத் துணிகள் விற்பனை செய்யும் ஐந்து வர்த்தக நிலையமும். பாதணிகளை விற்பனை செய்வதற்கு ஆறு வர்த்தக நிலையங்களும் உள்ளன.

இப்படியான மோசமான செயலை வவுனியா பெரிய வர்த்தகர்கள் செய்வது கவலையளிக்கின்றது.

அன்றாடம் நாங்கள் சிறு இலாபத்துக்காக வர்த்தக நிலையத்தினை நடத்தி வருகின்றோம். இந்தச் செயற்பாடு எமது வயிற்றில் அடிப்பது போல் அமைந்துள்ளது. இனிவரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறாது இருப்பதுக்கு உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனத் தெரிவித்தனர். (க-222)

## புது முறிப்பு வீதி சீரமைப்புப் பணிகள் ஆரம்பம்

கிளிநொச்சி.ஜன.7

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட, புதுமுறிப்பு சோலை நகர் பிரதான வீதி சீரமைக்கும் பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இரண்டு கிலோ மீற்றர் நீளமான இந்த வீதி ஊற்றுப்புலம் மற்றும் சோலை நகர் கிராமத்தை இணைக்கும் நீண்ட வீதியாகும்.

இதனைச் சீரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் விடுத்த கோரிக்கையினையடுத்து வீதியை நிரந்தரமாக சீரமைக்கும் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

சோலைநகர் கிராமப் பொது அமைப்புக்களின் தலைவர் எமிலியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் வேழமாகிலிதன் கலந்து கொண்டு சீரமைப்புப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

தேசிய மொழிகள் ஒருமைப்பாட்டு அமைச்சினால் வழங்கப்பட்ட 21மில்லியன்·ரூபா நிதியில் நடைபெறும் இந்தப் பணியின் தொடக்க நிகழ்வில், பிரதேச சபை உறுப்பினர்களான பரந்தாமன், சுப்பையா. சமுர்த்தி அலுவலர் மற்றும் கரைச்சி பிரதேச சபையின் தொழிநுட்ப அலுவலர் யதுகுலன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (க)





## நண்பர்கள் கழகத்தால் உதவிகள்

**யாழ்ப்பாணம்,ஜன.7**

**வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி கண்டாவளைப் பகுதியைச் சேந்த மக்களுக்கு யாழ்ப்பாணம் நீராவியடி நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தினால் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான அரிசி, சீனி, பால் மா போன்ற அத்தியவசியப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ஐ)**





## பல்கலைக்கழக மாணவர்களால் கற்றல் உபகரணங்கள் வழங்கல்

வவுனியா,ஜன.7

யாழ்ப்பாணபல்கலைக்கழக,கலைப்பீடமாணவர்களின்நிதி அனுசரணையின்மூலம்வவுனியாமாவட்டத்தைச்சேர்ந்த கல்மடு,பூம்புகார்,ஈஸ்வரிபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள வறுமைக் கோட்டுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 2019 ஆம் கல்வியாண்டை முன்னிட்டு அவர்களுக்கான கற்றல் உபகரணங்களினைத் தந்துதவுமாறு "வேரூன்றி" நிதியத்திடம் வேண்டுகோள் முன்வைத்தமைக்கு அமைவாக, பெறுமதியான கற்றல் உபகரணங்கள் பூம்புகார்மணிமேகலைமுன்பள்ளியில்வைத்துநேற்றுமுன்தினம் வழங்கிவைக்கப்பட்டன. (க-110)



## 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

வவுனியா,ஜன.7

வவுனியா பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி அலுவலரும் பிரபலவர்த்தகரும்அறிவின்திறவுகோல்கல்விநற்பணியின் தலைவியுமான திருமதி அமுதா சுமன்ராஜினால் 50 வசதியற்ற மாணவர்களுக்குப் புத்தாண்டு தினத்தில் கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் வவுனியா பிரதேச செயலர் கா. உதயராஜா, மாவட்டசிறுவர்மேம்பாட்டுஅலுவலர் ஜெயக்கெனடி, வைரவப்புளியங்குளம்கிராமஅலுவலர், வேப்பங்குளம்மெதடிஸ்த ஆலயத்தின்போதகர்மனோரஞ்சன்தமிழ்விருட்சம்அமைப்பின்தலைவர் எஸ். சந்திரகுமார்எனப்பலரும்கலந்துகொண்டனர். (க-111)

## உலர் உணவுப் பொருள்கள் வழங்கல்



புதுக்குடியிருப்பு,ஜன.7

புதுக்குடியிருப்பு, தேவிபுரம் பகுதியில் அண்மையில்'ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 200 குடும்பங்களுக்கான அத்தியாவசிய உலர் உணவுப் பொருள்கள் அந்தப் பகுதி கிராம அலுவலர் ஊடாக வவுனியாமனதுருக்கம்இலங்கைஸ்தாபனத்தினால்வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

கிராமஅலுவலர்மற்றும்சமூகஆர்வலர்கள்கலந்துகொண்டு பொருள்களை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கிவைத்தனர். (க-111)

## மனித உரிமை ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் முடக்கம்

### பிரதேச செயலக அதிகாரிகள் மீது குற்றச்சாட்டு

மன்னார்,ஜன.7

மன்னார்முசலிப்பிரதேசசெயலர் பிரிவில்இருக்கின்றஅகத்திமுறிப்பு குளத்தின் கீழான விவசாயக் காணிதொடர்பில்அந்தப்பகுதியில் இருக்கும்இருசாராருக்கிடையில், நீண்ட காலமாக காணிப்பிணக்கொன்று இருந்துவந்துள்ளது. இதனைத் தீர்த்து வைப்பதில் தற்போது முடக்கநிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிணக்கின்படி 1990 ஆம் ஆண்டுகளுக்குமுன்புஒருபகுதியினர் அகத்தி முறிப்பு குளத்தின் கீழ் விவசாயத்தை மேற்கொண்டு அதற்கான வருடாந்த அனுமதிப் பத்திரத்தையும் பெற்றுள்ளனர்.

எனினும் மீள்குடியேற்றத்தையடுத்து குறித்த வருடாந்த அனுமதிப்பத்திரத்தைப்பெற்றஉரித்தாளிகள் அவர்களது காணிகளை பிரதேச செயலரது அனுமதியுடன் சுத்தப்படுத்தச் சென்ற வேளையில், அந்தப்பகுதியில் மீள் குடியேறிய இன்னுமொரு தரப்பினால் தடுக்கப்பட்டுள்ளனர்.

பிரதேச செயலத்தினால் தீர்க்கப்படாதுநீண்டகாலமாகஇழுத்தடிக்கப்பட்ட நிலையில், பாதிக்கப்பட்டவர்கள்சார்பில்சேகு அப்துல்காதர் சாகுல் ஹ்மீது என்பர் 2016 ஆம் ஆண்டுகளில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியாகாரியாலயத்தில்முறையிட்டுள்ளார்.

ஆணைக்குழுவின் விசாரணைகளை அடுத்து குறித்த காணிப்பிணக்கினை மாகாண காணி ஆணையாளரின் உதவியுடன் தீர்ப்பதற்கான இறுதிக்கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இருப்பினும் தொடர்ந்து இந்தக் காணிப்பிணக்கினை தீர்ப்பதற்கான முக்கியமான ஆவணங்களை பிரதேச செயலர், காணி அலுவலர் மற்றும்கிராமஅலுவலர் போன்றவர்களிடம்கோரியபோதிலும், இவர்கள் ஆவணங்களை வழங்குவதில் இழுத்தடிப்புகளை மேற்கொண்டுவருவதாகஅறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இத்தகைய அரச அதிகாரிகளின் செயற்பாட்டினால் தாம் தொடர்ந்தும் பொருளாதார இழப்பினைச் சந்தித்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

மேலும்இந்தக்காணிப்பிரச்சினை இன்றுவரைதீர்க்கப்படாமல்இருப்பதற்கு அரசியல் தலையீடும் ஒரு பெரும் காரணமாக இருந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் குற்றச்சாட்டுக் குறித்து வவுனியா மனித உரிமை அதிகாரியுடன் தொடர்புகொண்டபோது மனிதஉரிமைகள்ஆணைக்குழுவின் வவுனியா மற்றும் மன்னார் அதிகாரிகளை தொடர்பு கொண்டு விசாரித்தமைக்குஅமையகுறித்த பிணக்கினை தாம் விரைவாகத் தீர்ப்பதற்கு முயற்சிப்பதாகவும், எனினும்முசலிப்பிரதேசஅதிகாரிகளிடம் இருந்து போதுமான ஒத்துழைப்புக் கிடைக்க வில்லை எனவும்மேலும் தெரிவித்துள்ளனர். (க-111)



சுவிஸ்சர்லாந்து நாட்டில் வசித்து வரும் அகம்சிங், ஆர்னாசிங் ஆகியோரால் முல்லைத்தீவு தண்டுவான் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில்கல்விகற்கும்25 மாணவர்களுக்குபுத்தகப்பைகள், மாணவர்களின்கற்றலுக்குத்தேவையான. போதியளவுஅப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டுள்ளன. (க-222)





## புதுக்குடியிருப்பில் 160 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

முல்லைத்தீவு,ஜன.7

முல்லைத்தீவுமாவட்டத்தின்புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட சிவநகர் கிராமத்தில் வன்னிக்குறோஸ் நிறுவனத்தின் ஒழுங்குபடுத்தலில் 160 பாடசாலை மாண்வர்களுக்கான கற்றல் உபகரணங்களும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவ கலாநிதி சி. சிவமோகனின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் சிவநகர் கிராமத்தின் விளையாட்டுக் கழகத்துக்கான உடற்பயிற்சி உபகரணங்களும் கடந்த 3 ஆம் திகதி வழங்கிவைக்கப்பட்டன.

ஓய்வு பெற்ற பெரும்பாக அலுவலர் மாதவராசாவின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வன்னிக்குறோஸ் நிறுவனத்தின்நிறைவேற்றுப்பணிப்பாளருமானசி. சிவமோகன், புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் ம. பிரதீபன், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின்தவிசாளர்செ. பிறேமகாந், பிரதேசசபையின் உறுப்பினர் சி. குகநேசன், வன்னிக்குறோஸ் நிறுவனத்தின் மகளிர் பேரவைத் தலைவி சு. வளர்மதி, வன்னிக்குறோஸ் நிறுவனத்தின்இணைப்பாளர்ச. ரூபன், கலாசாரபேரவையின் செயலர் சி. வேதவனம், வன்னிக்குறோஸ்முன்பள்ளிகல்விமேம்பாட்டுப்பேரவையின் தலைவர் க. விமலதாஸ், கல்வி மேம்பாட்டுப் பேரவையின் புதுக்குடியிருப்புபிரதேசத்தின் செயலர் சுதர்சன், சிவநகர்கிராமஅலுவலகர்திருமதிதேவகி, சிவநகர் பாடசாலையின் அதிபர், சிவநகர் கிராம மாதர்சங்கத்தின் தலைவி திருமதி விதுரா, கிராம அபிவிருத்திச்சங்கத்தின் தலைவர், செயலர், விளையாட்டுக்கழகத்தின்நிர்வாகத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணம் மற்றும் விளையாட்டுக்கழகத்தினருக்கான ஒருலட்சத்து ஐம்பதாயிரம் பெறுமதியுடைய உடற்பயிற்சிஉபகரணம்என்பன வழங்கிவழங்கி வைக்கப்பட்டுள்ளன. (க-ரி3)



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மக்களுக்கு மயிலங்காடு இளைஞர் நற்பணி மன்றத்தினால் 2 ஆம் கட்டமாக கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. கிளிநொச்சி ஜெயபுரம் மகா வித்தியாலயத்தில் உள்ள தரம் 2 தொடக்கம் 7 வரையான 231 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டன. (க-21)

## ஈருருளிகள் வழங்கல்

கிளிநொச்சி,ஜன.7

கல்விக்குக் கரம் கொடுப்போம் என்ற திட்டத்துக்கு அமைய யூனியன்குளம் கிராமத்தில்த. கவிப்பிரியனுக்கும், ஸ்கந்தபுரம் மணியன்குளம் கிராமத்தில் சி. டிலக்சனாவுக்கும் இரண்டு ஈருருளிகள் வழங்கப்பட்டன.

சுவிஸ்நாட்டில்வசிக்கும் புவனேஸ்வரன் சந்திரகலாவின் மகள் நிதர்சனாவின் பிறந்த நாளான கடந்த 3 ஆம் திகதி, இந்த உதவிகள் வழங்கப்பட்டதோடு கிளிநொச்சி காந்தி சிறுவர் இல்லத்தில் மதிய உணவும் வழங்கப்பட்டது. (க-222)





## அரசியல் கைதிகளின் விடுதலையை விரைவுபடுத்துமாறு கோரிக்கை

முல்லைத்தீவு.ஜன.7
முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வெள்ள இடரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை நீதி அமைச்சின் அமைச்சர் தலதா அத்துக்கோரள வழங்கிவைத்துள்ளார். இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சி.சாந்தி அரசியல் கைதிகளின் விடுதலையை விரைவுபடுத்துமாறு கோரிக்கை முன்வைத்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
இங்கு இருப்பவர்கள் அனைவரும் போரில் பாதிக்கப்பட்டவர்கள். போரில் தங்கள் சொந்தங்களை இழந்தவர்கள். அந்த உரிமையுடன் அமைச்சரிடம் நான் ஒரு கோரிக்கையினை விடுகின்றேன்.
நீண்டகாலமாக சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு பொறுப்பான அமைச்சர். அரசியல் கைதிகள் தாங்கள் ஏன் அந்தச் சிறையில் இருக்கின்றோம் என்று தெரியாது. தாங்கள் என்ன குற்றம் செய்திருக்கின்றோம் என்று தெரியாது. தங்களுக்கு எழுதப்பட்டிருக்கின்ற குற்றம் என்ன என்று தெரியாது. கையெழுத்து வைத்த அரசியல் கைதிகளாக சிறையில் வாடிக்கொண்டிருக்கின்றார்கள்.
ஒரு பெண்ணின் வேதனையினை ஒருபெண்ணினால் தான் அல்லது தாயினால்தான் புரிந்து கொள்ளமுடியும். அந்தவகையில் சிறையில் பிள்ளைகள் வாடுவதால் இங்கு தாய்மார், மனைவிமார் படும் கஸ்ரத்தினை நான் அன்றாடம் கண்டு கொண்டு இருக்கின்றேன். அரசியல் கைதிகள் தொடர்பில் பொதுவான அரசியல் தீர்மானம் எடுத்து அவர்களை விடுதலை செய்ய நீங்கள் விரைவில் ஆவண செய்யுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக கேட்டுக்கொண்டுக்கொள்கின்றேன் - என்றார்.
அமைச்சர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 490 குடும்பங்களுக்கு துப்புரவு செய்கின்ற பொருள்களான, தும்புத்தடி, விளக்குமாறு போன்ற உதவிப் பொருள்களும்,.மக்களின் வீட்டுப்பாவனைக்கு தேவையான மெத்தை, நுளம்பு வலை,பானை, மொப்பர்,தண்ணீர்கான்,பாய்,தலையணை, போர்வை,துவாய் உள்ளிட்ட சிறுவர்களுக்கு தேவையான பொருள்களும், பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான கொப்பிகள்,புத்தகப் பை உள்ளிட்ட பத்து இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை 200 குடும்பத்தலைவிகளை கொண்டவர்களுக்கும்,250 பாடசாலை மாணவர்களுக்கும்,40 சிறுவர்களுக்கும் வழங்கிவைத்தார். (க-ரி3,500)

# 30வருட போரால் பாதிக்கப்பட்ட மக்கள் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்

### உதவுவது அனைவரதும் கடமை; விவசாய அமைச்சர் ஹரிஸன் தெரிவிப்பு



கிளிநொச்சி,ஜன.7
**விவசாயம், கிராமப்புற பொருளாதார அலுவல்கள், கால்நடைகள் மேம்பாடு, நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சர் எம். ஹரிஸன் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சிக்குப் பயணம் மேற்கொண்டிருந்தபோது, 30 வருட போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உதவுவது அனைவரதும் கடமை என குறிப்பிட்டார்**

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயம் மற்றும் கால்நடைகள், குளங்கள் உள்ளிட்ட தனது அமைச்சின் கீழ் வருகின்ற விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்கே அமைச்சர் எம். ஹரிஸன் தனது அமைச்சின் செயலர், மற்றும் கமநல சேவைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம், கமநல காப்புறுதி சபையின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட உயரதிகாரிகளுடன் கிளிநொச்சிக்கு பயணம் மேற்கொண்டிருந்தார்.
கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தில் இடம்பெற்ற, நிலமைகளை ஆராயும் கூட்டத்திலும் கலந்துகொண்டார். இதன் போது வெள்ள இடர் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயம்,கால்நடைகள்,நீர்ப்பாசனம்.போன்ற துறைகளில் ஏற்பட்ட அழிவுகள், அதனால் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அதிகாரிகளால் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது.
இதன் போது கருத்து தெரிவித்து அமைச்சர் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவாக இழப்பீடுகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். குறிப்பாக நெல் வயல்கள் முழுமையாக அழிந்திருந்தால் நாற்பதாயிரம் ரூபா காப்புறுதி சபையால் வழங்கப்படும். அதற்கான மதிப்பீடுகள் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும். அத்தோடு கால்நடைகள் இறந்திருந்தாலும் அதற்கான கொடுப்பனவும் வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.
முப்பது வருடப் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் தற்போது வெள்ளத்தினாலும் பாதிக்கப்புட்டுள்ளனர். எனவே இத்தருணத்தில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டியது அனைவரதும் கடமை. எனவும் தெரிவித்தார்
வெள்ளத்தினால் பாதிப்புக்களுக்கு அதிகம் பொறுப்பு சொல்ல வேண்டியது எங்களுடைய அமைச்சு. எனவே பாதிக்கப்பட்ட குளங்களை சீரமைப்பது குறித்து கவனம் செலுத்தப்படும். அத்தோடு இரண்டு வார காலத்துக்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டார்.
மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தினை தொடர்ந்து, அமைச்சர் உள்ளடங்கிய குழுவினர் வெள்ளத்தினால் அழிவடைந்த நெல் வயல்களை பார்வையிடுவதற்கு களப் பயணம் ஒன்றை மேற்கொண்டு கிளிநொச்சி, பன்னங்கண்டி. மற்றும் முரசுமோட்டை பிரதேசங்களுக்கும் சென்றிருந்தனர். (க-214)



ஒட்டுசுட்டான் கிராமத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்ளின்துயர்துடைக்கும் வகையில் ஒட்டுசுட்டான் கிராம அபிவிருத்திசங்கத்தினரின் வேண்டுகோளுக்கமைவாக யாழ்.எயிற் நிறுவனத்தினர் 30 குடும்பங்களுக்கு உதவிப் பொருள்களை வழங்கினர். (க-500)

## பன்னாட்டு இந்து இளைஞர் பேரவையால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

வவுனியா.ஜன.7
வவுனியா கோதண்ட நொச்சிச் குளத்தில் வசிக்கும் 60 மாணவர்களுக்கு பன்னாட்டு இந்து இளைஞர் பேரவையால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.
வவுனியா மாவட்டத்தில் பின்தங்கிய நிலையில் காணப்படும் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் பன்னாட்டு இந்து இளைஞர் பேரவையும் அதனோடு இணைந்த ஏனைய நிறுவனங்களும் செயலாற்றி வருகின்றன.
அந்தவகையில் வவுனியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கோதண்ட நொச்சிக்குளத்தில் கல்விகற்கும் தரம்1 தொடக்கம் தரம் 11 வரையிலான மாணவர்களுக்கு இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.
டென்மார்க்கில் வசிக்கும் வ.கௌசல்யாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது குடும்பத்தாரின் அனுசரணையுடன் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வு நேற்று முன்தினம் கோதண்ட நொச்சிக்குளம் முருகன் ஆலய பெருளாளர் இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற்றது. (க-110)



## வெள்ளப்பாதிப்புக்கு உதவி

சாவகச்சேரி.ஜன.7
மாந்தை கிழக்குப் பிரதேச பிரிவில் உள்ள நட்டாங்கண்டல் கிராம அலுவலர் பிரிவில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், பெண் தலைமைத்துவ குடும்பங்களில் ஒரு பகுதியினருக்கு நிதி உதவியும் வழங்கப்பட்டுள்ளன.
இந்த நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தினரால், கற்றல் உபகரணங்களும் நிதி உதவியுடன் வழங்கப்பட்டன என பிரதேச செயலர் றஞ்சனா நவரத்தினம் தெரிவித்தார். (க-9)



## உழவனூரில் உதவி வழங்கல்

முல்லைத்தீவு,ஜன.7
கருகம்பனை இந்து இளைஞர் கழகத்தின் கல்விக்கரம் செயற்திட்டமூடாக கிளிநொச்சியின் உழவனூர் பகுதியின் தம்பிராசா மகாவித்தியாலயமாணவர்களுக்கு 70ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் 58 மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.
கடந்த மாதம் 31ஆம் திகதி கல்விக்கரம் குழுவினர் நேரில் சென்று வழங்கிவைத்தனர். இதற்கான நிதியினை புலம்பெயர்ந்து வாழும் நகுலேஸ்வரன் வழங்கி உள்ளார். (க-222)







# மாணவர்களுக்கு புலமைப் பரிசில்

பதுளை.ஜன.7

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஏற்பாட்டில் ஊவா மாகாணத்திலிருந்து வேலைநிமித்தம் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்துள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்குப் புலமைப் பரிசில் வழங்கப்பட்டது.

பதுளை வெளிநாட்டுவேலைவாய்ப்புப்பணியகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்றையதினம் நடந்த இந்த நிகழ்வில் தொலைத்தொடர்புகள் மற்றும் வெளிநாட்டுவேலைவாய்பு விளையாட்டுதுறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ, பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல்சுரேஸ்உட்பட இலங்கைவெளிநாட்டுவேலைவாய்ப்புப் பணியகத்தின் உயர் அதிகாரிகள், மாகாணசபை உறுப்பின்ர்கள், தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டார்கள். இதன்போது பெருந்தோட்ட மாணவர்களுக்கும் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


## மாணிக்கம் அகழ்ந்த குற்றத்தில் பொகவந்தலாவவில் 7பேர் கைது

பதுளை.ஜன.7

பொகவந்தலாவ-கொட்டியாகலைமத்தியபிரிவுத்தோட்டத்தில் 7ஆம் இலக்கத் தேயிலை மலைக்கு அருகில் உள்ள சதுப்பு நிலப் பகுதியில் சட்டவிரோதமாக மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட 7பேரைக் கைது செய்ததாகப் பொகவந்தலாவப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை இரவு மேற்கொண்ட சுற்றி வளைப்பின்போது இந்தக்கைதுகள் இடம்பெற்றதாகவும், மாணிக்கக்கல்அகழ்வுக்குப்பயன்படுத்தப்பட்ட உபகரணங்களைக் கைப்பற்றியதாகவும், கைது செய்யப்பட்ட 7பேரும் அதே பகுதியைச்சேர்ந்தவர்கள்எனவும்பொகவந்தலாவப்பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களைக்ஹற்றன் நீதிவான் மன்றில் முன்னிலைப்படுத்துவதற்கானநடவடிக்கைகளைப்பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# மக்களுக்குச் சேவை செய்ய அரசியல் அவசியமில்லை

## முத்தையா முரளிதரன் தெரிவிப்பு

ஹற்றன்.ஜன.7


மக்களுக்கு சேவை செய்வதற்கு அரசியல் தேவையில்லை. எனக்கு அரசியல் அனுபவம் இல்லை. அரசியலுக்கு நான் ஒரு போதும் வரவும்மாட்டேன். எங்களது அமைப்பின் ஊடாக மக்களுக்காகத் தொடர்ந்தும் சேவையைச் செய்வேன் என்றுள்ளார் இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன்.




நேற்றுமுன்தினம் ஹற்றனில் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது:

மக்களின் தேவையை முடிந்தவரை பூர்த்திசெய்வோம். கடந்தகாலங்களில் இடம்பெற்ற அரசியல்குழப்பம்தொடர்பாகநான்விமர்சிக்கவிரும்பவில்லை. தோட்டத் தொழிலாளர்கள் கோரும் ஆயிரம் ரூபாவை விட அதற்கு அதிகமாக வழங்க வேண்டும். தொழிற்சங்கவாதிகள் மற்றும் அரசியல்வாதிகள் தொழிலாளர்கள்படும்கஸ்டங்களைப் புரிந்து கொண்டு சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். தொழிலாளர்களைப் பணிப்புறக்கணிப்புகளில் ஈடுப்படுத்த வேண்டாம். அவர்களின் பணிகள் தடை இல்லாமல் முன்னெடுக்கப்படுமாயின் அவர்களின் தேவைகளைப்பூர்த்திசெய்துகொள்ள முடியும்.

சம்பளப்பிரச்சினைஏற்படும்பட்சத்தில் தொழிலாளர்களைத் தொழிலுக்குச் செல்லவேண்டாம்எனச்சொல்பவர்களால் அவர்களின் அன்றைய நாள் சம்பளத்தைக் கொடுக்க முடியுமா? முடியாது. இதனால் பாதிப்படைவது தொழிலாளர்கள்தான். எனவேஇதற்கு உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் - என்றார்.



# கிராமத்து மாணவர்களே அதிகம் சாதிக்கிறார்கள்

## அவர்களுக்கு உதவுங்கள் -சிறிநேசன் தெரிவிப்பு

மட்டக்களப்பு.ஜன.7

மாணவர்கள் சாதிப்பதற்குப் பின்தங்கிய பிரதேசம்என்பது ஒருதடையல்ல. தடைகளைஉடைத்தெறிந்துசாதனைகளைப் புரிந்தவர்கள் கிராமப்புற மாணவர்களே எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் தெரிவித்தார். கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு - எருவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில்இடம்பெற்றபல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான மாணவர்களைப் பாராட்டி மதிப்புறுத்தும் நிகழ்வில் உரையாற்றும்போதேஅவர்இவ்வாறுதெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்ச்சமூகத்தின் இருப்புக்கானசொத்து கல்வி. கல்வியில் வெற்றியீட்டுவதற்கு பின்தங்கிய கிராமம் என்பது ஒரு தடையல்ல. கல்வியில்இப்பொழுதுபின்தங்கிய பிரதேச மாணவர்களே அதிகமான சாதனைகளைப்புரிந்து வருகின்றனர். இந்த வருடம் மட்டக்களப்பு மாவட்டத்தின் நரிப்புல்தோட்டம், அம்பாறை 15ஆம்கிராமம்



ஆகியபிரதேசங்களில்இருந்துபலமாணவர்கள் சாதனைகள் நிகழ்த்தி யிருக்கிறார்கள். இவ்வாறான சம்பவங்களைப் பலபின்தங்கியகிராமங்களில்நாம்கண்கூடாகக்காண்கிறோம். சமூகசேவையாளர்கள், வெளிநாடு வாழ் கிராமவாசிகள் குழுக்களாக இணைந்து. முன்வந்து கல்விக்கானஊக்கங்களைச்செய்வதும், இவ்வாறான சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கிராமத்துக்குத்தேவையானமருத்துவத் துறைக்குரிய மாணவர்களை ஆசிரியர்கள் அடயாளம் காண்பதும் அவசியமானது - என்றார்.

### மன்னார்ஆயர் – குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட 46ஆவது ஆண்டு விழா

மன்னார்.ஜன.7

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல். பெனாண்டோ ஆண்டகை முன்னாள் பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் சின்னப்பரிடம் உரோமில்அருட்பணியாளராகத் திருநிலைப்படுத்தப்பட்ட 46ஆவது ஆண்டைநினைவுகூரும் தினம் நேற்று மன்னார்-பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத்தில் கொண்டாடப்பட்டது. பெருமளவான மக்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வு பங்குத் தந்தை அருட்பணிஎஸ். தேவராஜாஅடிகளார் தலைமையில் நடந்தது. நிகழ்வின்ஆரம்பத்தில் ஆயர் மேதகு இம்மானுவேல்பெனாண்டோ ஆண்டகை வரவேற்கப்பட்டார். தொடர்ந்துகூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஆயருக்கு மக்கள் சார்பாக நினைவுச் சின்னம்வழங்கப்பட்டது.







## எழுச்சியடைந்து வருகிறது மஞ்சள் அங்கிப் போராட்டம்

பாரீஸ்.ஜன.7
பெற்றோல் மற்றும் டீசல் விலை உயர்வுக்கு எதிராகப் பிரான்ஸ் மக்கள் முன்னெடுத்து வருகின்ற மஞ்சள் அங்கிப்போராட்டமானது எழுச்சியடைந்துவருவதாகப்பன் னாட்டு ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன. தற்போது அண்ண ளவாக 50ஆயிரம் பேர் இந்த மஞ்சள் அங்கிப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.சென்றவாரத்தில் இந்தத்தொகை 29 ஆயிரமாக இருந்தது. நாளுக்கு நாள் அதிக ரித்து வந்து தற்போது 50ஆயி ரத்தை எட்டியுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு பெருகிவருவதைப்புள்ளிவிவரங் கள்காட்டுகின்றன. இந்தப்போராட் டம் டீசல் மற்றும் பெற்றோல் ஆகி யவற்றின் விலை உயர்வுக்கு எதிராகவே பிரான்சின் பல பகுதிக ளில்ஆரம்பிக்கப்பட்டது. மக்களின் எழுச்சிக்கு அடிபணிந்த பிரான்ஸ் அரசானது எரிபொருள் விலை யேற்றத்தை இல்லாமல் செய்வ தாக அறிவித்தது.

ஆனால், சாதாரண தொழிலாளர் களின் ஆகக் குறைந்த சம்பளத் தெகையைநிர்ணயிக்கும்படியும், ஓய்வூதியம் பெறுவோருக்கான வரியை நீக்கும் படியும், அரசால் முன்னெடுக்கப்படுகின்ற இத்த கைய நடவடிக்கைகள் குறித்து மக் களின் வாக்கெடுப்புக்கு விடப் பட வேண்டும் என்றும் கோரிக்கை களை முன்வைத்துப் போராட்டம் விரிவடைந்தது. இருமாதங்க ளைத் தாண்டிய நிலையில் தொடரும் இந்தப் போராட்டத்தில் பங்கெடுக்கின்ற மக்கள் தொகை நாளுக்குநாள்அதிகரித்துவருவது குறிப்பிடத்தக்கது.

### ஜமால் கொலை விவகாரம்

# சவூதியின் உள்ளக விசார
# குறித்து ஐ.நா. விமர்ச

**நியூயோர்க்.ஜன.7**
**சவூதியைச்சேர்ந்தபத்திரிகை யாளர் ''ஜமால் கொல்லப் பட்ட விவகாரம் தொடர்பாகச் சவூ தியில் நடக்கும் விசாரணை முறையாகநடைபெறுகிறதாஎன் பது குறித்த தகவல் இல்லை என்று ஐ.நாவின் மனித உரிமை கள்அமைப்புத்தெரிவித்துள்ளது.**



இது குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள்அமைப்பின்செய்தித்தொடர்பாளர் ரவினா கூறும்போது, 'ஜமால் கொல்லப்பட்ட வழக்கில்தொடர்புடையசவூதிஅதிகாரிகள்ஐந்து பேருக்குச்சாவுத்தண்டனைவழங்கவேண்டும் என்று அரச வழக்கறிஞர் கோரிக்கை விடுத்தி ருக்கிறார். சவூதியில் இந்த விசாரணை முறை யானதாக நடைபெறுகிறதா? என்ற தகவலை இதுவரைப் பெற முடியவில்லை. சவூதியில் நடக்கும் இந்த விசாரணை பன்னாட்டு அளவி லான தலையீடுகளுடன் நடக்க வேண்டும். ஐக்கிய நாடுகள் சபை எப்போதும் சாவுத் தண்ட னையை விரும்பாது" என்று தெரிவித்தார்.

**பின்னணி**
ஜமால் கஷோகிஜி சவூதியின் பிரபல பத்திரிகை யாளர். 1980களில் அல்கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடனின் வளர்ச்சியிலிருந்து தனது எழுத்துப் பணியைத் தொடங்கிய வர்.

அமெரிக்காவின் வோஷிங்டன் போஸ்ட் பத்திரி கையின் பத்தி எழுத்தாளராக இருந்து இவர் சவூதி அரசையும், அதன் மன்னர் மற்றும் இள வரசர்களைவிமர்சித்துஆங்கிலத்திலும், அரபிக் மொழியிலும் கட்டுரை எழுதி வந்தவர். இந்த நிலையில் அவர் துருக்கியில் சவூதித் தூதரக அலுவலகத்தில் மிகக் கொடூரமான முறையில் கொல்லப்பட்டார்.

இந்தக் கொலைச்சம்ப
முகம்து பில் சல்மான்
கூறப்படுவதால் உலக
ரான அதிர்வலைஏற்ப
இந்தக் கொலைக்கும்
மில்லை என்று முதலி
சாட்சியங்கள்வலுவாக
கொலையை ஏற்றுக்
ஆனால் இதில் இளவ
னுக்குத் தொடர்பு இல்
கூறிவருகிறது. சம்பந்த
டிக்கப்படுவார்கள்என்

## நெப்போலியன் மறைத்த தங்கம் தேடப்படுகிறது

மொஸ்கோ.ஜன.7
1812ஆம் ஆண்டில் ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் நடந்தபோரிலிருந்துபின்வாங்கியபிரெஞ்சுஇராணுவத்தளபதி நெப்போலியனால் எடுத்துச்செல்லப்பட்டதாகக் கருதப்படும் தங்கத்தைமறைத்துவைக்கப்பட்டமைதொடர்பானதகவலை விகாஸ்லேவ் எனும் வரலாற்றாசிரியர் ஒருவர் வெளியிட்டுள் ளார்.

200 ஆண்டுகளாகப் புதையல் வேட்டைக்காரர்கள் தவறான இடத்தில்புதையலைத்தேடிக்கொண்டிருப்பதாகக்கூறுகின்றார் அந்த வரலாற்றிசிரியர்.

ஐரோப்பாவின் பல பகுதிகளைத் தனது 'கிரேட் ஆர்மி' என்ற பெயர் கொண்ட படையால் வென்ற நெப்போலியன், ரஷ்யா வின் மொஸ்கோ நகரின் மீது நடத்திய படையெடுப்பில் தோல் வியுற்றவுடன் அங்கிருந்து திரும்பும்போது 80 தொன் நிறையு டைய தங்கத்தையும், ஏனைய மதிப்புமிக்க பொருள்களையும் அங்கிருந்துஎடுத்துச்சென்றதாகவும், அவற்றைப்பிரான்சுக்குக் கொண்டுசெல்வது கடினமானதாக இருந்ததால் செல்லும்வழி யில்புதைத்துவிட்டதாகக்கடந்த 200ஆண்டுகளுக்கு மேலாகக் கூறப்பட்டுவருகிறது.

எனினும், இதுவரை அது எங்குள்ளது என்பது அறியப்பட வில்லை. 1830களில்ரஷ்யாவின் அரசஅதிகாரிகளும், தொல் லியலாளர்களும், புதையல் வேட்டைக்காரர்களும் பல இடங் களில் இதைத்தேடினர்.

அவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. அந்தப் புதையலை அடைய விரும்புகிறவர்களைத் திசை திருப்புவதற்காகத் தவ றான இடத்தை மற்றைய வரலாற்றாசிரியர்கள் தெரிவித்ததாக வும் அந்தப் புதையல் பெலாரஸிலுள்ள பேரெஜினே என்ற ஏரி யில் மறைந்து வைக்கப்பட்டிருக்கலாம் என்றும் விகாஸ்லேவ் கூறுகிறார்.





## அமெரிக்காவில்வாகனவிபத்து குழந்தைகள் தீயில் கருகிச்சாவு

புளோரிடா.ஜன.7
அமெரிக்காவின் புளோரிடாவில் வான் ஒன்றுடன் இரண்டு லொறிகள் மோதியதில் வானில் இருந்த 5 குழந்தைகள் உட் பட 7 பேர் சாவடைந்தனர்.

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தின் லூசியானாப் பகுதி யில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் இருந்து 'டிஸ்னி வேர்ல்ட்' பகுதிக்குக் குழந்தைகளைச் சுமந்து சுற்றுலா சென் றுகொண்டிருந்த வானை அதிவேகமாக வந்த இரண்டு லொரிகள் கென்ஸ் வில்லே என்ற இடத்தில் வைத்து மோதின.

இதனால்நொருங்கியவான்வீதியில்குடைசாய்ந்தது. அதன் மீது மேலும் 2 வாகனங்கள் மோதின.

இதனால் வான் தீப்பிடித்தது. அந்த வானில் இருந்த 9முதல்14வயதுடைய5குழந்தைகள்தீயில்கருகிச்சாவடைந் தனர். 8 குழந்தைகள் காயம் அடைந்தனர்.

**அவர்கள் மீட்கப்பட்டுச்சிகிச்சையளிக்கப்பட்டுவருகின்றனர். அத்துடன்வான்மீதுமோதியலொரிகளின்சாரதிகள் 2பேரும் சம்பவ இடத்திலேயே சாவடைந்தனர்.**



ரணை
சனம்



டார்.
லைச் சம்பவத்தில் சவூதி இளவரசர்
சல்மான் சம்பந்தப்பட்டிருப்பதாகக்
ால் உலக அளவில் சவூதிக்கு எதி
லை ஏற்பட்டது.
லைக்கும் தங்களுக்கும் சம்பந்த
று முதலில் கூறிய சவூதி பின்னர்
வலுவாகஇருந்ததைத்தொடர்ந்து
ஏற்றுக்கொண்டது.
ில் இளவரசர் முகமது பின் சல்மா
டர்பு இல்லை என்று தொடர்ந்து
து. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தண்
ாகள் என்று கூறியிருந்தது.

# அவசர நிலையை அறிவிப்பேன் அமெ. அதிபர் ட்ரம்ப் எச்சரிக்கை

வோஷிங்டன்.ஜன.7
அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஒப்புதலின்றி அமெரிக்கா-மெக்சிக்கோ இடையேஎல்லைச்சுவர்கட்டுவதற்காகஅமெரிக்காவில்அவசரநிலையை அறிவிப்புச் செய்வேன் என்று அமெரிக்காவின் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

எல்லைச்சுவர் கட்டுவதற்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு தொடர்ந்து மறுப்புத் தெரிவித்து வரும் ஜனநாயகக் கட்சியினருடனான பேச்சுக்கள் தோல்வியடைந்ததையடுத்து ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்தார். எல்லைச்சுவர் திட்டத்துக்கு நாடாளுமன்றத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படாததால், கடந்த வருடத்தின் இறுதியிலிருந்து நடைமுறையிலுள்ள பகுதியளவு அரச முடக்கத்தை முடிவுக்கு கொண்டுவரும் ஒப்புதலுக்கு ட்ரம்ப் மறுப்புத் தெரிவித்து வருகிறார்.

அமெரிக்கநாடாளுமன்றத்தின் ஒப்புதலின்றி எல்லைச்சுவர்திட்டத்துக்குத் தேவையான நிதியை ஒதுக்குவதற்குத் தனக்குண்டான அதிகாரத்தைப் பயன்படுத்தி நாட்டில் அவசர நிலையை அறிவிப்புச் செய்வது குறித்து யோசிக்கிறீர்களா? என்று ட்ரம்பிடம் கேட்டபோது,

'ஆம்' என்று பதிலளித்த அவர், 'அதற்கு வாய்ப்புள்ளது. அவசர நிலையை அறிவிப்புச் செய்து, எல்லைச்சுவரை விரைந்து கட்ட முடியும். இலக்கை அடைவதற்கான மற்றொரு வழி அது' என்றார்.





# கஜாபுயல்-தொடரும்சோகம்

## தென்னைகளைக் குழியில் புதைக்கும் விவசாயிகள்

தமிழகம்.ஜன.7
கடந்தநவம்பர்மாதத்தின்நடுப்பகுதியில் இந்தியாவைத் தாக்கியிருந்த கஜாப் புயலால் சேதமடைந்த தென்னை மரங்களை அகற்றுவதற்கு மனமில்லாமல், தமதுதென்னந்தோப்புக்குஉரமாகட்டும் என்று அவற்றைக் குழி தோண்டி புதைத்து வருகின்றனர் விவசாயிகள். கஜாப் புயலின் பாதிப்பால் தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு, பேராவூரணி ஆகிய பகுதிகளில் 80இலட்சம் தென்னை மரங்கள் வேரோடுசாய்ந்துவிழுந்தன.

மேலும்,10இலட்சம்தென்னைமரங்கள் தலைப்பகுதிமுறிந்துவீழ்ந்தன. பாதிக்கப்பட்டதென்னைமரம்ஒன்றுக்குநிவாரணமாக தமிழக அரசு 600ரூபாவும், மரத்தை அகற்றுவதற்கு 500ரூபாவும்(இந்திய மதிப்பில்) வழங்குவதாக அறிவித்தது. இந்த நிவாரணம் போதாது என்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். இந்த நிலையில், விவசாயிகள் தென்னை மட்டைகளைஎரித்து அகற்றிவருகின்றனர். மரங்களுக்கு உரிய விலை கிடைக்காத நிலையில், மனவேதனையில் இலவசமாகவாவதுஎடுத்துச்செல்லுங்கள்என்று பலரிடமும்கூறிவருகின்றனர்.தென்னை மரங்களைத் துண்டு துண்டாக வெட்டி அகற்றினால் போதும் என்ற மனநிலையில் உள்ள விவசாயிகள்,-நிலத்துக்கு உரமாகட்டும் எனக்கருதி அவற்றைத் தோப்பில் குழிதோண்டிப் புதைக்கும் பணியில்ஈடுபட்டுள்ளனர்.

# மியன்மாரில்தாக்குதல் 13 பொலிஸார் சாவு



யங்கொன்.ஜன.7
மியன்மாரின் ரோஹிங்கிய மாகாணத்தில் வாழ்கின்ற முஸ்லிம்களை அங்குள்ள பௌத்த பெரும்பான்மையினரும் மியன்மார் இராணுவமும் ஒடுக்குமுறைக்குட்படுத்தி வருகின்றனர். 'அரக்கன்' என்கிற பெயருடன் செயற்படுகின்ற போராளிகள் குழு ஒன்று ஒடுக்கப்படுகின்ற முஸ்லிம்களுக்காகக் குரல்கொடுக்கும் வகையில் மியன்மார் இராணுவத்துக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறது. இந்த நிலையில்ஜனவரிநான்காம்திகதியன்று மியன்மார் அரசு தனது சுதந்திர தினத்தைக் கொண்டாடியது. சுதந்திர தினக் கொண்டாட்டங்களில்ஈடுபட்டிருந்தசமயம்பங்களாதேஷின் எல்லையில் அமைந்துள்ள மியன்மாரின்



பொலிஸ் காவலரண்கள் மீது 'அரக்கன்' போராளிகள் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 13 பொலிஸ் அதிகாரிகள் சாவடைந்தனர்.





# அகதிகளைத் திருப்பி அனுப்பியதற்கு இந்தியாவிடம் விளக்கம் கேட்கிறது ஐ.நா.

நியூயோர்க்.ஜன.7
இந்தியாவில்தஞ்சமடைந்தரோஹிங்கியா அகதிகளை மியான்மருக்குத் திருப்பி அனுப்பியமை தொடர்பாக ஐ.நா. அகதிகள் அமைப்பு இந்திய அரசிடம் விளக்கம் கேட்டுள்ளது.

மியான்மர் அரசாலும் அங்குள்ள பௌத்த பெரும்பான்மையினராலும் ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்பட்ட ரோஹிங்கியாமுஸ்லிம்கள்ஏராளமானோர் இந்தியாவுக்கு அகதிகளாகத் தஞ்சமடைந்திருந்தனர்.

கிட்டத்தட்ட 18 ஆயிரம் வரையிலானவர்கள் இந்தியாவிலுள்ள ஐ.நா. அகதிகள் முகமையில் பதிவு செய்தனர். கைது நடவடிக்கைகள் மற்றும் நாடுகடத்தல்களில் இருந்து தங்களைத் தற்காத்து கொள்வதற்காக இவர்களுக்குஅடையாளஅட்டைகள்மற்றும் ஆவணங்களும் வழங்கப்பட்டுள்ளதாக ஐ.நா. அகதிகள் அமைப்புத் தெரிவித்தது. இந்த அகதிகள் அவர்களின் நாட்டுக்குப் திருப்பி அனுப்பப்படுவார்கள்என இந்திய அரசுஅறிவித்து அதற்கானநடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளது. சட்டவிரோதமாக நுழைந்ததாகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த ரோஹிங்கியா முஸ்லிம்கள் 7 பேர் கடந்த ஆண்டு இறுதியில் திருப்பி அனுப்பப்பட்டனர். பின்னர் ஒருகுடும்பத்தினர் மியான்மருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதற்கு ஐநா கவலைதெரிவித்துள்ளது.

இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள ரோஹிங்கியா முஸ்லிம்களை மியான்மருக்கு நாடு கடத்தியதற்கு ஐ.நா. அகதிகளுக்கானஉயர்ஆணையர் அலுவலகம் தனது வருத்தத்தை தெரிவிக்கிறது. கடந்த மூன்று மாதங்களில் இரண்டாவது முறையாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தடுத்து வைக்கப்பட்டுள்ள ரோஹிங்கியாஅகதிகளைசந்தித்து, அவர்களின் சூழ்நிலைகளைஅறிந்துகொள்ளவும், அவர்களைத் திருப்பி அனுப்புவது தொடர்பான அவர்களின் விருப் பத்தைக் கேட்கவும் அனுமதிக்கும்படி தொடர்ந்துகோரிக்கைவிடப்பட்டுவருகிறது. ஆனால், இந்திய அதிகாரிகளிடம் இருந்து பதில் வரவில்லை. அகதிகளைசந்திக்கஅனுமதிக்கவேண்டும். மேலும், எந்த சூழ்நிலைகளில் அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர் என்பது குறித்து இந்திய அரசு தெளிவுபடுத்த வேண்டும்' என ஐ.நா. அகதிகள் அமைப்பு வலியுறுத்தி உள்ளது.



# பாகிஸ்தானில் குண்டுத் தாக்குதல்

இஸ்லாமபாத்.ஜன.7
பாகிஸ்தான் -பெஷாவர் நகரில் மகிழுந்தில் மறைத்துவைக்கப்பட்டிருந்த குண்டுபலத்த சத்தத்துடன் வெடித்தது. இதனால் பெண் ஒருவர் தூக்கி வீசப்பட்டார். அவர்உட்பட 4பேர்படுகாயம்அடைந்தனர். பெஷாவர் நகரின் சத்தார்ப் பகுதியில் கலாபாரிஎன்னும்பிரபலசந்தையிலேநிறுத்திவைக்கப்பட்டிருந்த மகிழுந்தில் நேற்றுமுன்தினம் காலை பலத்த சத்தத்துடன் இந்தக் குண்டு வெடித்தது. 12 கடைகள் சேதம் அடைந்தன.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அந்தப் பகுதியை முற்றுகையிட்டு விசாரணை நடத்தி வருகின்றனர். குண்டுத்தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்குமருத்துவசிகிச்சையளிக்கப்பட்டுவருகிறது. இந்தத்தாக்குதலுக்குஎந்த அமைப்புகளும்பொறுப்பேற்கவில்லை.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## இறுக்கமான நடவடிக்கைகளை எடுப்பார்களா தமிழ்த் தலைமைகள்?

கடந்த ஒக்ரோபர் 26ஆம் திகதி அரச தலைவரின் நடவடிக்கைளால் நாட்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிநிலமைதற்போதுதணிந்துள்ளது. அரசதலைவரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும் பங்கை வகித்திருந்தது. தற்போது புதிய அரசு அமைக்கப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்கதலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு அமைப்பதற்கு நிபந்தனையுடன்என்றுகூறப்பட்டாலும்எந்தவிதஎழுத்துமூல நிபந்தனைகளும் இன்றியே ஆதரவைக் கூட்டமைப்பு வழங்கியது.

இதனால், தெற்கில் ஏற்பட்ட நிலமை தணிந்துள்ள போதும் தமிழர்களின் பிரச்சினைகள் தீர்வின்றியே தொடர்கின்றன. அவற்றில் ஒன்று அரசியல் கைதிகள் விடுதலை.

அநுராதபுரம் சிறைச்சாலையில் நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டுள்ளதமிழ் அரசியல் கைதி ஒருவர் நேற்று முன்தினம் உணவுதவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார். தன்னை விடுவிக்குமாறு கோரிய அவர் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவது இது முதல்தடவையல்ல. அவர்கள் தமது விடுதலையை வலியுறுத்திப் பல போராட்டங்களை நடத்தியுள்ளனர். தமிழ் அரசியல் தலைவர்கள் அவர்களைச்சந்தித்துவாக்குறுதிகள்வழங்கி அவர்களின் போராட்டங்களை முடித்து வைத்தபோதும் அதன் பின்னர் காத்திரமான நடவடிக்கை எவற்றையும் மேற்கொள்ளவில்லை.

சிறைச்சாலைகளில் நீண்டகாலமாக அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை. அந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்குப் போதிய அழுத்தங்களை வழங்க வேண்டும் என்பதும் மக்களின் எதிர்ப்பார்ப்பு.

தமிழ் மக்களின் தீர்க்கக் கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவற விடுகின்றதா என்ற ஐயப்பாடும் மக்கள் மத்தியில் எழாமல் இல்லை. ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சி அமைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு தேவையாக இருந்த நிலையில் அரசியல் கைதிகள் விடுதலை, காணிப் பிரச்சினைகள், காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைகள் தொடர்பாகத் தமது பிடியை இறுக்கியிருக்கலாம் என்ற கருத்துக்களும் உள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த விடயங்களில் அரசுடன் இறுக்கமான போக்கைக் கடைப்பிடிக்கவில்லை என்பதைப் போன்றே தெற்கில் இருந்துவரும் கருத்துக்கள் இருக்கின்றன. நேற்றுமுன்தினம் முல்லைத்தீவுக்கு வந்த நீதி அமைச்சரிடம் அரசியல் கைதிகள் விடயம் தொடர்பாகக் கேட்கப்பட்டபோது அவர் அரசியல் கைதிகள் விடயத்தில் நாடாளுமன்றத்தின் ஊடாக முடிவெடுக்கப்படும் என்று பொதுவாகக் கூறிச் சென்றுள்ளார். அரசும் இந்த விடயத்தில் மெத்தனப் போக்கையே கைக்கொண்டுள்ளது.

ஆனால், அரசியல் கைதிகள் விடயத்தில் அரசியல் ரீதியான முடிவே எடுக்கப்பட வேண்டும் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்திருக்கிறார். அவரால் ஆட்சியில் மீண்டும் அமர வைக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க அவரது இந்தக் கருத்துக்கு மதிப்புக் கொடுத்து இதுவரையில் நடவடிக்கை எதுவும் எடுத்ததாகத் தெரியவரவில்லை.

அரசியல் கைதி ஒருவர் தற்போது போராட்டத்தை ஆரம்பித்துள்ளார். ஏனைய சிலரும் போராட்டத்தில் இறங்கவுள்ளனர் என்று கூறப்படுகின்றது. தமது வாழ்வின் பெரும்பகுதியை இருண்ட சிறையில் தொலைத்துள்ள அவர்களின் விடுதலையை விரைவாக்க வேண்டியது அவசியம். தமிழ்த்தலைமைகள் அதை உணர்ந்து செயற்பட வேண்டும்.



## குடாநாட்டினது பதற்ற நிலை தணிவதற்கு வாய்ப்பில்லையா

சேரலாதன்

குடாநாட்டில் பதற்றம் கலந்த அச்சமான சூழ்நிலை தொடர்வதால் மக்கள் பீதியுடன் பொழுதைக் கழிக்க வேண்டிய நிலையில் உள்ளனர். கொக்குவில் பகுதியில் ஏராளமான இளைஞர்கள் பட்டப்பகல் வேளையில் வாள்களுடன் தாக்குதலுக்குத் தயாராக வந்தமை குடாநாடு எத்தகைய ஆபத்தான நிலையில் உள்ளதென்பதை எடுத்துக்காட்டிவிட்டது.

> குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் இளவயதினராகவே காணப்படுகின்றனர். தாம் தாக்குதலுக்கு வருகிறோம் என்று பகிரங்கமாக அறிவித்துவிட்டு வருமளவுக்கு அவர்களுக்குத் துணிச்சல் எவ்வாறு வந்ததென்பது ஆராயப்பட வேண்டியதொரு விடயமாகும். இவர்களுக்கு விலையுயர்ந்த உந்துளிகள் எவ்வாறு கிடைத்தன? வாள்கள் போன்ற பயங்கரமான ஆயுதங்கள் எங்கிருந்து பெறப்பட்டன என்பன ஆராயப்பட வேண்டிய விடயங்களாகும்.

### அரசின் அசமந்தத்தால் அதிகரிக்கும் குற்றங்கள்

குடாநாட்டின் பாதுகாப்பை உறுதிசெய்யப்போவதாக அரசின் சார்பில் பாதுகாப்பு அதிகாரிகள் அடிக்கடி கூறிவருகின்றபோதிலும் குற்றச் செயல்கள் தொடர்ந்தும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. மக்களும் பீதியில் உறைந்து போய்க் கிடக்கின்றனர். குடாநாடு பெரிய நிலப்பரப்பைக் கொண்டதொரு இடமல்ல. அங்கு பாதுகாப்பை உறுதிசெய்வது சிரமமானதொரு காரியமுமல்ல. ஆனால் ஏதோவொரு கரணத்தால் குற்றச் செயல்களை அங்கு தடுத்துநிறுத்த முடியவில்லை.

இங்கு குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் இளவயதினராகவே காணப்படுகின்றனர். தாம் தாக்குதலுக்கு வருகிறோம் என்று பகிரங்கமாக அறிவித்துவிட்டு வருமளவுக்கு அவர்களுக்குத் துணிச்சல் எவ்வாறு வந்ததென்பது ஆராயப்பட வேண்டியதொரு விடயமாகும். இவர்களுக்கு விலையுயர்ந்த உந்துளிகள் எவ்வாறு கிடைத்தன? வாள்கள் போன்ற பயங்கரமான ஆயுதங்கள் எங்கிருந்து பெறப்பட்டன? என்பன ஆராயப்பட வேண்டிய விடயங்களாகும். தாக்குதல் சம்பவங்கள் மட்டுமல்லாது திருட்டு, கொள்ளை ஆகியனவும் அடிக்கடி இடம்பெறுவதைக் காணமுடிகின்றது. வீடுகளில் தனித்து வாழ்பவர்கள் குறிவைக்கப்பட்டு கொள்ளைச் சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

இந்தச் சம்பவங்களின்போது அவர்கள் மோசமான தாக்குதல்களுக்கு உள்ளாவதையும் அவதானிக்க முடிகின்றது. குடாநாட்டைப் பொறுத்தவரையில் மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்யக்கூடிய எண்ணிக்கையில் ஒவ்வொரு பகுதியிலும் பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர அதிகளவான இராணுவத்தினரும் முகாமிட்டுள்ளனர். இவை அனைத்தையும் மீறி ஒரு சிறிய குழுவினர் குற்றச் செயல்களில் ஈடுபடுவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான அமைச்சைத் தம்வசம் எடுத்து வைத்திருக்கும் அரச தலைவர் இதில் உடனடியாகக் கவனமெடுத்துக் குடாநாட்டின் அமைதியை உடனடியாக உறுதிசெய்துகொள்ள வேண்டும்.



### கல்வியில் பெரும் பின்னடைவு

அண்மையில் வெளியான க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகளின் பிரகாரம் தமிழ் மாணவர்கள் பின்னடைவைச் சந்தித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. இதனால் தமிழர்களின் எதிர்காலமே பாதிப்பை எதிர்கொள்ளப்போகின்றது. கல்வியில் பின்னடைவு ஏற்படுமாயின் அது பல துறைகளிலும் பாதிப்பை ஏற்படுத்திவிடுமென்பதை மறந்துவிடக் கூடாது.

உரிய தொழில்வாய்ப்பின்மையும் இளைஞர்கள் தவறான வழிகளில், செல்வதற்குக் காரணமாக அமைந்து விடுகின்றது. போரின் பின்னர் தொழில் வாய்ப்பை ஏற்படுத்தும் வகையிலான செயற்றிட்டங்கள் எவையுமே இங்கு வகுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. போரின் காரணமாக அழிவடைந்ததொழிற்சாலைகளும்சீரமைக்கப்படாது கைவிடப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றன. அரசு மாற்றான்தாய் மனப்பான்மையுடன் செயற்படுவதையே இது தெட்டத் தெளிவாக்க காட்டுகின்றது. இந்த நிலை தொடருமேயானால் தமிழ் இளைஞர்கள் அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழ வேண்டிய நிலையொன்றும் உருவாகிவிடலாமென்பதை மறுத்துவிட முடியாது.

தமிழ் அரசியல் வாதிகள் குடாநாட்டு இளைஞர்கள் தொடர்பாகக் கூடிய கவனம் செலுத்த வேண்டும். தவறான பாதையில் செல்கின்ற இளைஞர்களுக்கு நல்வழிகாட்டுவதற்கான திட்டங்களை வகுத்து அவர்கள் செயற்பட வேண்டும். வெறுமனே பண்பாடு, கலாசாரம் எனப்பழைய பெருமைகளைக் கூறிக்கொண்டிருப்பதால் எந்தவிதமான நன்மையும் கிடைத்துவிடா தென்பதை இங்குள்ளவர்கள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்துமதி

# உருவாக்கப்படும் புதிய அரசமைப்பு நிறைவேறுவதற்கு வாய்ப்பு உண்டா?



தமிழர்களுக்கு அரசியல் தீர்வொன்றை வழங்கக்கூடிய இறுதிச் சந்தர்ப்பமாகவே புதிய அரசமைப்பின் உருவாக்கத்தைத் தமிழர்கள் நம்புகின்றனர். தற்போது நடைமுறையிலுள்ள அரசமைப்பின் ஊடாக தமிழர்களுக்கு எதுவுமே கிடைக்காதென்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்தான். இந்த அரசமைப்பின் ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றையும் கண்டுவிட முடியாது. பலமான ஒற்றையாட்சி என்ற இரும்பு விலங்கு அதை இறுகப் பற்றியிருப்பதே இதற்கான காரணமாகும். ஒற்றையாட்சிக்குள் அரசியல் தீர்வு எதையும் காணமுடியாது என்பதுடன் இனப் பிரச்சினைக்கும் தமிழர்களுக்கு உகந்த தீர்வைக் கண்டுவிட முடியாது. இதனால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதற்கு மாற்றீடாக புதிய அரசமைப்பை நிறைவேற்றி வைப்பதில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது.

**தமிழர்களுக்கு விடிவு வரக்கூடாதென்பது இனவாதிகளின் முதன்மையான நோக்கம்**

இனவாதம் புரையோடிப்போய்க் கிடக்கும் இந்த நாட்டில் தமிழர்களுக்கு எதையும் வழங்கிவிடக்கூடாது என்பதில் இனவாதிகள் கண்ணும் கருத்துமாகவுள்ளனர். தற்போதும்கூட புதிய அரசமைப்பை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு அனுமதிக்கப்போவதில்லையென இனவாதிகள் சூளுரைத்துள்ளனர். இதில் மகிந்த தரப்பினரை முதன்மையாகக் குறிப்பிட முடியும். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை அவர்கள் கொண்டிராத போதிலும் இனவாதக் கருத்துக்களை உதிர்ப்பதில் முன்னிலை வகிக்கின்றனர்.



அரச தலைவரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட அரசியல் குழப்பங்கள் முற்றாக ஓய்ந்ததாகக் கூறமுடியவில்லை. ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசை எவ்வாறாவது பதவியிலிருந்து வீழ்த்த வேண்டுமென்பதில் மகிந்த தரப்பு முனைப்புடன் செயற்படுவதையும் காண முடிகின்றது. இவ்வாறானதொரு பின்னணியில் புதிய அரசமைப்பின் உருவாக்கத்துக்கு இவர்கள் ஒத்துழைப்பு வழங்குவார்களென எதிர்பார்க்க முடியாது. மாறாக அதை நிறைவேறாவிடாது தடுப்பதில்தான் ஈடுபடுவார்களென்பதைக் கூறத் தேவையில்லை. ஆனால் கூட்டமைப்பினர் எவ்வாறாயினும் புதிய அரசமைப்பு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுவிடும் என்ற நம்பிக்கையை வெளியிட்டு வருகின்றனர். இதன் நிறைவேற்றத்தி லேயே அவர்களின் எதிர்காலம் தங்கியுள்ளதையும் இங்கு குறிப்பிடத்தான் வேண்டும்.



**தொடர்கிறது பனிப்போர்**

அரச தலைவருக்கும் ரணில் தலைமையிலான அரசுக்கும் இடையில் நீடித்து வருகின்ற பனிப்போர் முடிவுக்கு வருவதற்குப் பதிலாக நீடித்துச் செல்வதையே காண முடிகின்றது. அமைச்சர்களின் அதிகாரங்களுக்குக் கடிவாளம் இடுகின்ற நடவடிக்கைகளும் அரச தலைவரால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதனால் அரசின் சுதந்திரமான செயற்பாடுகளில் தேக்கநிலை காணப்படுகின்றது. இந்த நிலையில் அரசால் புதிய அரசமைப்பை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி வைக்க முடியுமா? என்ற சந்தேகம் ஏழாமலில்லை.. அதுமட்டுமல்லாது அரசுக்குள்ளும் இனவாத சக்திகள் இருக்கத்தான் செய்கின்றன. சந்தர்ப்பத்தைப் பொறுத்து இவை தமது வேலையைக் கூட்டாதென்பதற்கு எவ்வித உத்தரவாதமும் கிடையாது.

புதிய அரசமைப்பின் உள்ளடக்கம் தொடர்பாக இதுவரை எவ்வித தகவலும் வெளியிடப்படவில்லை. ஆனால் ஒற்றையாட்சி என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லையென ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் தெரிவிக்கப்பட்டுவிட்டது. ஆனால் சம்பந்தன் ஒருமித்த நாடு என்பதில் விடாப்பிடியாக இருக்கின்றமை தெளிவாகத் தெரிகின்றது. அரசுக்கு இது சங்கடத்தை ஏற்படுத்தி விடுமென்பதில் ஐயம் கிடையாது. இதனால் பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதற்கு அரசு துணியுமா? என்பதிலும் சந்தேகம் நிலவுகின்றது.

**இனப்பிரச்சினைக்குத் தீர்வுதான் இலங்கைக்கு சுபீட்சம் வழங்கும்**

இந்த நாட்டைப் பீடித்த பீடை நீங்கவேண்டுமென்றால் இனப்பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வு காணப்பட்டேயாக வேண்டும். இதற்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டியது அவசியமானதாகும்.

ஆனால் அதற்கான வாய்ப்பு கைகூடி வருமா? என்பது சந்தேகமே. கூட்டமைப்பின் விருப்பத்துக்கு ஏற்றவாறு புதிய அரசமைப்பை நிறைவேற்ற முடியாதென்கிறார் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் புதிய பொதுச் செயலாளரான தயாசிறி ஜயசேகர. கூட்ட மைப்பும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து முயற்சி செய்தாலும் புதிய அரசமைப்பை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அவர்களால் பெறமுடியாதெனவும் அவர் உறுதியாகத் தெரிவித்திருக்கிறார். அதுமட்டுமல்லாது புதிய அரசமைப்பின் நிறைவேற்றம் தொடர்பாக நடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துவரும் கருத்துக்கள் தமிழ்மக்களை ஏமாற்றுகின்ற செயலாகவே கருதப்படவேண்டுமெனவும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கூட்டமைப்பின் அவசரப் போக்கால் தமிழர்கள் அதிகாரப் பரவலை இழக்கக்கூடிய நிலை உருவாகியுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இவற்றையெல்லாம் பார்க்கும்போது புதிய அரசமைப்பை எளிதில் நிறைவேற்ற முடியுமா? என்ற சந்தேகம் எழுகின்றது. அதைவிட தெற்கில் புதிய அரசமைப்புக்கு எதிரான குழப்பங்கள் வலுப்பெற்றால் ரணில் தலைமையிலான அரசுக்கு அதை எதிர்கொள்கின்ற தைரியம் உண்டா? என்பதையும் ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

## ஆசிரியருக்கான கடிதம்

# ஏழைக்கு உதவுங்கள் அதுவே கடவுளின் விருப்பமும்

பசித்தவருக்கு உணவும் தாகத்துக்கு நீரும் கொடுப்பது ·மிகப்பெரிய புண்ணியப்பேறு. நோயாளிக்கு உதவுவது வயோதிபர் மற்றும் ஊனமடைந்தவரை நேசித்து உதவுவது ஆண்டவருக்கு நாம் செய்யும் தொண்டுகளைப் போன்றவையே.

அதேபோல் வறுமைக் கோட்டில் வாழும் ஏழைப்பிள்ளைகள், பாடசாலைச் சிறார்களின் கல்வி கற்றலுக்கு உதவுவதும் எதிர்காலச் சிறார்களை நற்பிரசைகளாக மாற்றுவதும் எமக்குள்ள மிகப்பெரிய பொறுப்பும் கடமையும் ஆகும்.

அந்த வகையில் ஊடகங்களில் தற்போது வறுமைப்பட்ட மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள், ஈருளிகள் புலம்பெயர்ந்தவர்கள், தாயகத்தில் தாரள மனம் கொண்டவர்களால் வழங்கப்படுவது தொடர்பில் வெளிவரும் செய்திகள் தமிழினத்தின் மனிதாபிமானத்தை வெளிப்படுத்திய வண்ணமுள்ளன.

தற்போது ஆலய நிர்வாகத்தினரும் வறுமைப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை அதிபர்கள் ஊடாக பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றமை மேலும் மனமகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. வடமராட்சி சிறி வல்லிபுர ஆழ்வார் ஆலய நிர்வாகத்தினர் கடந்த இரண்டாம் திகதி தென்மராட்சிப் பிரதேச அ.த.க. பாடசாலை, வரணி சைவப் பிரகாச வித்தியாசாலையில் உள்ள வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட சுமார் 20 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களை பாடசாலை அதிபர்கள் ஊடாக வழங்கியுள்ளனர். சைவப்பிரகாச வித்தியாலய பாடசாலையின் அதிபர் வை.விஜயகுமாரன் இந்தக்கற்றல் உபகரணங்களை 10 மாணவர்களுக்கு வழங்கியுள்ளார். இப்படியான உதவிகளை வழங்கிய சிறி வல்லிபுர ஆழ்வார் ஆலய நிர்வாகத்தினர் மிகவும் பாராட்டத்தக்கவர்கள். இதேபோல் தாயகத்தில் உள்ள ஆலய நிர்வாகத்தினர் ஆலயத்துடன் நின்றுவிடாது பாதிக்கப்பட்டவர்கள் மாணவர்கள் போன்றோருக்கும் உதவினால் மிகவும் சிறப்பாக இருக்கும். ஆண்டவரின் திருவருள் நிச்சயம் கிடைக்கும்.

**அ.அன்பு, வரணி.**

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

# சுடலை ஞானம்


தையல் ஊசி ஒன்று தன்னுடைய ஒருமுனை கூர்மையாக இருப்பதில் பெருமையடைந்தது. ஆனால் மறுமுனையில் துவாரம் இருப்பதை அவமானமாக நினைத்தது. எப்படியாவது இந்தத் துவாரத்தை அழித்துவிட வேண்டும் என்று அது துடித்தது. அதுமட்டுமா கிழிந்து போன ஆடைகளைத் தைப்பதற்குத் தான் பயன்படுவதை நினைத்துக் கர்வமும் கொண்டது. அந்த ஊசியை இலட்சுமி பாட்டி பயன்படுத்திய பின் சில்வர் கடதாசியில் பத்திரமாகச் சுற்றி வைப்பார். இந்தச் செயல் அதற்கு இன்னும் கர்வத்தை அளித்தது.
ஒருநாள் இலட்சுமிப் பாட்டியின் பேத்தி அந்த ஊசியை எடுத்து ஏதோ கடினமான துணியில் தைத்துக் கொண்டிருந்தாள். அப்போது துவாரமுடைய அதன் மறுமுனை உடைந்து போனது. ஊசிக்கு காதறுந்த நிலையில் அந்த ஊசியை பயன்படுத்த முடியாமல் பேத்தி தூக்கியெறிந்தாள். அப்போதுதான் அந்த ஊசிக்குத் தான் அவமானமாக நினைந்த மறுமுனையின் முக்கியத்துவம் தெரிந்தது.

**நீதி: ஒற்றுமை இன்றேல்**
**அனைவருக்கும் தாழ்வு**

# ஜேம்ஸ் கெமரூன்



ஜேம்ஸ் பிரான்சிஸ் கெமரூன் கனடாவைச் சேர்ந்த புகழ்பெற்றஆங்கிலத்திரைப்பட இயக்குநர். திரைக்கதை, எழுத்தாளர், கண்டுபிடிப்பாளர் ஆவர். இவர் 'த டெர்மினேட்டர்', 'டெர்மினேட்டர் 2', 'எலியன்ஸ்', 'டைட்டானிக்', 'அவதார்' உள்ளிட்ட புகழ்பெற்ற ஆங்கிலத் திரைப்படங்களை படைத்தவர்.
மார்ச் 26. 2012 அன்று உலகின் மிக ஆழமான கடற்பகுதியான மரியானா அகழியின் 11 கி.மி ஆழத்திலுள்ள அடிப்பகுதிக்குத் தனியொரு ஆளாகச் சென்று திரும்பிச் சாதனை படைத்தார். 1984ஆம் ஆண்டு ஜேம்ஸ் கெமரூன் இயக்கத்தில் வெளிவந்த த டெர்மினேட்டர் மிகப் பெரிய வெற்றிப் படமாக அமைந்தது.
1985ஆம் ஆண்டு வெளிவந்த ராம்போ 11 திரைப்படமும் வசூலில் சாதனை படைத்தது. இந்தப் படம் 1985இல் வெளியான மிகப் பெரும் வெற்றிப்படங்களுள் ஒன்றாக உள்ளது. 1997ஆம் ஆண்டு ஜேம்ஸ் கெமரூன் இயக்கத்தில் வெளிவந்த டைட்டானிக் திரைப்படம் உலகளாவிய அளவில் 1.8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஈட்டிச் சாதனை நிகழ்த்தியது. அதுபோல் 2009ஆம் ஆண்டு ஜேம்ஸ் கெமரூன் இயக்கத்தில் சுமார் 1500 கோடி ரூபா செலவில் உருவாகி வெளிவந்த அவதார் திரைப்படமும் வசூலில் சாதனை படைத்து முந்தைய சாதனையான டைட்டானிக் படத்தின் சாதனையை முறியடித்தது.
இதில் வித்தியாசமான விலங்குகள், மரங்கள் போன்ற தோற்றங்களை உருவாக்கி அவற்றைத் தான் முப்பரிமாணத்தில் அவதாரமெடுக்க வைத்துள்ளனர். ஜேம்ஸ் கெமரூன் குழுவினர்.
இந்தத் திரைப்படமானது சினிமாத்துறையின் உயரிய விருதுகளில் ஒன்றான இரண்டு ஒஸ்கர் விருதுகளைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.





டெர்மினேட்டர்

# கல்வி



கல்வி என்பது மனிதனுக்கு அறிவூட்டும் ஒளி விளக்குப் போன்றது. மனிதரிடத்துள்ள அறியாமையைப் போக்கி நல்வழி காட்டவல்லது. கற்றறிந்தவனே கண்ணுடையவனாகக் கருதப்படுவான். கல்வி அறிவில்லாதவன் கண்கள் இருந்தும் கண்கள் அற்றவன் எனக் கருதப்படுவான்.
"கண்ணுடைய ரென்பர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்" என்கிறது திருக்குறள். எனவே மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் கற்க வேண்டியவற்றைக் கற்று, கற்ற நெறிப்படி ஒழுகுதல் வேண்டும். இதனையே திருவள்ளுவரும், "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்கிறார். கற்கவேண்டியவற்றைக் கற்கும் பருவத்திலேயே நாம் கற்க வேண்டும். உலகில் இருவகைச் செல்வங்கள் உள்ளன. ஒன்று கல்விச் செல்வம் மற்றையது பொருள் வெல்வம். பொருள் செல்வம் பிறருக்குக் கொடுக்கும் தோறும் குறைவடையும்.
வெள்ளத்தால், நெருப்பால் அழியக் கூடியது. கள்வரால் கவரக்கூடியது. எவ்வளவு பொருள் செல்வத்தை நாம் தேடி வைத்தாலும் அவை நிலைப்பதில்லை. ஆனால், கல்விச் செல்வமானது நிலையானது. அழியாதது. கல்விச் செல்வமானது பிறருக்குக் கொடுக்குந்தோறும் பெருகிக் கொண்டே செல்லும். கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு. ஒருவனுக்குக் கல்வி அழகே உண்மையான அழகாகும். கல்வி அழகைப் பெறுவதற்கு நாம் முயற்சிக்கவேண்டும். கல்வி அறிவாலேயே நாமும், நாடும் முன்னேற முடியும். இதனை நன்குணர்ந்து கல்விச் செல்வத்தைப் பெருக்கிக் கொள்ள நாம் ஒவ்வொருவரும் முயற்சித்தல் வேண்டும்.

**தேடி நிதம் பூக்களில் தேன் சேர்க்கும் தேனிபோல்**
**தேர்ந்து நல்ல கல்வியைத் தேடி நாமும் கற்போமே.**



## பன்னிரண்டு மாதங்கள்

*சித்திரை யோடு வைகாசி*
*சிறந்த நல்ல இளவேனில்*
*ஆனி ஆடி மாதங்கள்*
*அப்பா! மிகவும் முதுவேனில்*
*ஆவணியோடு புரட்டாதி*
*ஆகா! அழகிய கார்காலம்*
*ஐப்பசி கார்த்திகை வந்தாலோ*
*அந்தோ மிகவும் குளிர்காலம்*
*மார்கழி, தை மாசி முன்னே*
*பனி பெய் மாதங்கள்*

# கோபத்தை தவிர்ப்போம்



மனிதர்களிடம் இருக்கும் பல்வேறு குணங்களில் கோபமும் ஒன்று. நியாயமான ஒரு விடயத்துக்குக் கோபம் வருவது தவிர்க்க முடியாதது. மற்றவர்களும் அதில் இருக்கும் நியாயத்தை உணர்ந்து, தவறாக நினைக்க மாட்டார்கள். ஆனால் பெரும்பாலானவர்கள் தேவையின்றி, சிறிய விடயங்களுக்கெல்லாம் கோபப்படுகிறார்கள்.
இது நல்லதல்ல. உடல் நலத்துக்குத் தீங்கானது. கோபமே வராத மனிதர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.
கோபம் வரும் சூழலிலும் ஒரு புத்தரைப் போல் அமைதி காத்துவிடுவார்கள். இந்தக் குணம் அபூர்வமானது.
இந்த நண்பர்களைப்போல் இருக்க வேண்டும் என்றுதான் நான் நினைப்பேன். ஆனால் என்னால் சில நேரங்களில் கோபத்தைக் கட்டுப்படுத்த முடிவதில்லை. உங்களை யார் கோபப்படுத்தினாலும் நம் பெற்றோர், நண்பர், சகோதரர், சகோதரி, உறவினர்தானே என்று நினைத்துக் கொள்ளுங்கள்.
அன்பு அதிகம் இருக்கும் இடத்தில் கோபம் வருவதற்குத் தயங்கும். நம் மீது எவராவது கோபப்படுவதை விரும்புவோமா? இல்லை தானே? நம்மைப்போல்தான் பிறரையும் நினைக்க வேண்டும்.
ஒருவேளை கட்டுப்படுத்த முடியாத கோபம் வந்தால், ஒரு டம்ளர் தண்ணீரைக் குடியுங்கள். அல்லது அந்த இடத்தை விட்டு அகன்றுவிடுங்கள்.
அல்லது ஒரு புத்தகத்தை எடுத்து வாசிக்க ஆரம்பித்துவிடுங்கள். நாளடைவில் கோபம் உங்களுக்குக் குறைந்துவிடும். தேவை இல்லாமல் கோபப்பட்டால், அந்தக் கோபத்துக்கும் மதிப்பில்லை.
நம்மைப் பற்றிய மதிப்பீடும் குறையும். கோபத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டால், உங்களைக் கொண்டாடுவார்கள்

# வர்ணம் தீட்டுவோம்



## மரண அறிவித்தல்



### திருமதி இராசம்மா இராசரத்தினம்

மானிப்பாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் உடுவில் தெற்கு மானிப்பாய் மற்றும் நீர்கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா இராசரத்தினம் 03.01.2019 வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - குட்டியம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா -சுந்தரம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசரத்தினம் (துரைசிங்கம் - நியூஸ் பேப்பர் ஏஜன்ட்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பரமராசா, கிருஸ்ணராசா, பொன்னம்மா, தேவியம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இரத்தினம், சரசுவதி ஆகியோரின் மைத்துனியும், பரிபூரணநந்தன், பரிமளகாந்தன், சிவானந்தன், செல்வானந்தன், ஜெயரூபி, சுந்தரலட்சுமி, தயாளினி ஆகியோரின் பாசமிகு தாயும், யோகரஞ்சினி, பாலரஞ்சினி, சறோஜினி, உமாமகேஸ்வரி, உதயகுமார், சந்திரகுமார், வரதலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும், லக் ஷாயினி, நிரேஷ், பானுஷா, நிரோஸ், உஷாநாத், அபிஷாலினி, ரகுபரன், துஷாலினி, குமரநாத், அபிலாஷ், மனுதர்ஷன், ரதீவன், ரசிக்கா, பவீனா, டிவோயன், வினோயன், ரகீயன், சாருஜன், சாரங்கி, தீபிகா, பானுஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஹரிஷ் இன் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2019) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் (உடுவில் தெற்கு, மானிப்பாய்) நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : பிள்ளைகள்**
**ஆனந்தன் - 077 614 4129**
**சிவானந்தன் - 077 983 9429**

**உடுவில் தெற்கு,**
**மானிப்பாய்.**
(cs.22356) (13.17)

## மரண அறிவித்தல்



### காசிப்பிள்ளை அம்பிகைபாகன்

(பொன்னாவளை, களபூமி, காரைநகர்)

பொன்னாவளை, களபூமி காரைநகரைச் சேர்ந்த காசிப்பிள்ளை அம்பிகைபாகன் 06.01.2019 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை-அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், விஜயலட்சுமியின் அன்புக் கணவரும், சிவபாதசுந்தரம், Dr. மீனாட்சி சுந்தரம், சியாமளா ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரி காலஞ்சென்றவர்களான விஸ்வேஸ்வரன், மகேஸ்வரி, பாலசௌந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான குலநாயகம் (சட்டத்தரணி), கந்தையா, சிவசுப்பிரமணியம் மற்றும் புனிதவதி, சரோஜினி தேவி, சபாநாதன், ஸ்ரீனிவாசன், பரமேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், நித்யா சொரூபினி, அருண்மொழித் தேவர் ஆகியோரின் பர்சமிகு மாமனாரும், தனுஷா, விதுஷா, அக்ஷயன், ஆதவன், அபிராமி, சிவகாமி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.01.2019 திங்கட்கிழமை பி.ப 3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**உமையகம், திக்கரை,**
**களபூமி, காரைநகர்**

**தகவல்: குடும்பத்தினர்.**

**சிவா: 077 5883 164 சுந்தரம்:077 4088 169**
**அம்மா: 0777802107**

## மரண அறிவித்தல்

**பிறப்பு**
**01.04.1939**

### திருமதி பவளம் தேவராசா

**இறப்பு**
**05.01.2019**



இணுவிலைப் பிறப்பிடமாகவும், மறவன்புலோ மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவளம் தேவராசா 05.01.2019 சனிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணர் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், தேவராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அற்புதகலா மற்றும் பாஸ்கரன் (சிறி), மீனலோஜினி (கீதா), பேபிசயிலா, அருணோதயன் (இத்தாலி), ஸ்ரீதரன், ஜீவதயாபரன் (ஜீவன்), யாழினி (இத்தாலி), ஸ்ரீபவன் (செல்வ முத்துமாரியம்மன் பிரதம குரு) ஆகியோரின் அன்புத் தாயாரும், திலகேஸ்வரன் (வவா), ஆனந்தி, லிங்கேஸ்வரன், சிவலிங்கம் (சிவா), குலேஸ்வரி, சந்திராதேவி, விஜிஜா, குலேஸ்வரன் (இத்தாலி), சுமித்திரா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், வினோதினி, சங்கீதா, சர்மிளா, வித்தியா, பிரியா, டயானி, மகிந்தன், ஜனா, துசிபன் (சிவா களஞ்சியம்), துசீபா, தனுசன், தனுசியா, றஜீபா, சஜீபன், மது, ஜனா, கீர்த்திகா, றம்மியா, சங்கவி, மதுமிதன், டக்ஷிகா, விதுர்சன், சரணியா, பகிர்சன், பகீரதன், திலக்சன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கோபி, கஜான், வேணுஜன், ஐஸ்மி, தர்மிகன், பானுஜன், நர்ஷிகன், பிரணிகா, வருண் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.01.2019) செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக தனிப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மறவன்புலோ மத்தி,**
**சாவகச்சேரி.**
(CS/22355)(11,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 278 4004, 077 283 5533 (சிவாகடை)**

# IIS

23 வருட கால அனுபவம்

எதிர்காலத்தை உங்களுடையதாக்குங்கள்

Pearson

# HND



**COMPUTING**

**CIVIL ENGINEERING**

**BUSINESS MANAGEMENT**

புதிய பிரிவுகள் ஆரம்பம் : 05.01.2019

- உயர்கல்விக்கே உரித்தான வளாகம்
- மூன்றாம் நிலைக்கல்வி, தொழில்கல்வி ஆணைக்குழுவின் (TVEC) அங்கீகாரம்
- PEARSON பிரதிநிதிகளின் நேரடி வருகையும் கண்காணிப்பும்
- தொழில்சார் பயிற்சியுடனான கற்கைநெறி
- இலகுதவணை முறையிலான கட்டண வசதி
- கல்விக்கேற்ற வேலைவாய்ப்பு வசதிகள்

IIS CITY CAMPUS

200, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 8060
iis@iis.edu.lk , info@iis.edu.lk

Hot line : 0777570038

---

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையானதொரு
தனித்துவமிக்க பயிற்சி நிலையம்

யாழ் **கலாலயா** பயிற்சியகம்

இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி
ஆணையத்தால் பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)



**மகளிருக்கான பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

✌ *கேக் ஐசிங்* - றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream, Piping Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).

✌ *உணவு தயாரித்தல்* - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங்கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.



✌ *கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்* 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.

✌ **FACIALS** *(முக அழகுக்கலை)* Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)

✌ **BRIDAL DRESSINGS** *(மணப்பெண் அலங்காரங்கள்)* இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப்பெண் அலங்காரமும் Modern, சுவர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகளும் பயிற்றுவிக்கப்படும்.



**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**



✌ *பிளவுஸ், சாறி பிளவுஸ், சுரிதார்,* மற்றும் மகளிருக்கான ஆடைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற கிழமை நாள் பயிற்சிகள்.

பயிற்சிகள் யாவும் பலவருட அனுபவமிக்க எமது ஆசிரியைகளினால் சீறந்த முறையில் பயிற்றுவிக்கப்படும்!

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்
19.01.2019 சனி காலை 10.00மணி
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்
21.01.2019 திங்கள் காலை 10.00 மணி

மேலும் விபரங்களை பி.ப 5.30 வரை நேரில் அறிந்து கொள்ளலாம். -இயக்குநர்-

---

# After O/L or A/L

**DMI** COMPUTER EDUCATION

**புதிய பிரிவு ஆரம்பம்**
7/1/2019 (MON) 9:30 a.m. or 3:30 p.m.
16/1/2019 (WED) 9:30 a.m. or 3:30 p.m.

**IT + ENGLISH DIPLOMA**

**Professional IT Courses**

Diploma in PC Application
Diploma in Office Automation
Diploma in Web Designing & Development
Diploma in Computerized Accounting
Diploma in Business Management
Adv. Diploma in Hardware & Networking
Diploma in Video Production & Multimedia
Diploma in AutoCAD
JAVA , C#, C++ , PHP

DiTEC

☑ அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑ Microsoft Online பரீட்சைகளுடாக Microsoft - அமெரிக்காவில் இருந்து தலைமை செயலதிகாரியின் கையொப்பத்துடனான Microsoft Specialist சான்றிதழ்கள்.
☑ இலகு தவணைக்கட்டண வசதிகள்

**DIPLOMA IN INFORMATION TECHNOLOGY**

**DIPLOMA IN ENGLISH** (PART 1 + PART 2)

## யாழில் ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்



- அனுபவம் மிக்க விரிவுரையாளர்களினால் Grammar பற்றிய போதிய விளக்க முறைகள் மாணவர்களுக்கு பூரணமாக வழங்கப்படுகிறது.
- ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்கள் ஆங்கிலம் கதைப்பதற்கான சந்தர்ப்பம்
- கணினி மூலமான Online Listening பயிற்சிகள்உள்ளடக்கப்பட்டுள்ளது .

**DIPLOMA IN ENGLISH**
**Spoken English**

ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்

புதிய பிரிவுகள் ஆரம்பம் Reading Writing Speaking Listening

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | |
|---|---|---|---|
| Mon,Wed,Fri 8:00 a.m<br>Mon,Wed,Fri 3:30 p.m<br>Sat, Sun 3.30 p.m. | Tue, Thu 3.30 p.m.<br>Sat, Sun 3:30 p.m. | Tue, Thu 08.30 a.m.<br>Tue, Thu 03.30 p.m. | சுன்னாகம் Mon,Wed,Fri 11:00 a.m<br>சண்டிலிப்பாய் Mon,Wed,Fri 2:30 p.m<br>கிளிநொச்சி Sat, Sun 10.30 a.m. |

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

**IELTS** •Unique Test Tips •Latest course Materials

**IELTS Life Skills** திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம். (Reg No. P25/0056)

# DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| No.113, [illegible] | M.M.V.வீதி | No. 174 [illegible] HNB வங்கி அருகில் | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் | சீரணிச் சந்தி | No.19,A9 [illegible] |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021 225 6665 | Tel.: 021-228 5655 |

---

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 . 11 . 1954 | 06 . 01 . 2019 |

## திருமதி கமலாம்பாள் பாலசுந்தரம்

(கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்)

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கு மற்றும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பாள் பாலசுந்தரம் நேற்று (06.01.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னையா- பொன்னம்மா தம்பதியரின் மகளும். கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான திரு. இலங்கநாதன்-மதியாபரணம் தம்பதியரின் மருமகளும். காலஞ்சென்ற பாலசுந்தரம் (Bamini Engineers & Contractors) அவர்களின் மனைவியும். இலண்டனைச் சேர்ந்த பாமினி. சாமினி ஆகியோரின் தாயாரும். இலண்டனைச் சேர்ந்த ராஜகுலசிங்கம். சத்தியகுமார் ஆகியோரின் மாமியாரும். ஆதர்ஷ். அபிலாஷ். அபிராம். ஹரிராம். அனிஷா ஆகியோரின் பேர்த்தியும். திருமதி கோகிலாம்பாள் சிவாநந்தன். திருமதி றமணியம்பாள் சந்திரகுமார் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மகிந்த மலர்ச் சாலையில் காலை 9.00 மணிக்கு வைக்கப்பட்டு ஈமக்கிரியைகள் அதே தினம் 07.01.2019 மாலை 2.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு பின்னர் கல்கிஸ்ஸ மயானத்தில் மாலை 5.00 மணியளவில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பாமினி
சாமினி

தொடர்புகள்: +4475 489 54210, +4475 77 612879, 076 807 9440

# காந்தி என்ன சொல்கிறார்...?

ஒவ்வொருவரும்தனக்குத்தானே துப்புரவுத்தொழிலாளராகஇருக்கலாம். உணவு உண்பதைப் போலவேமலத்தைக்கழிப்பதும்அவசியமான ஒரு செயல். தன்னுடைய கழிவுப்பொருளைத்தானே அப்புறப்படுத்த வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையாகும். இதுசாத்தியமில்லையென்றால் ஒவ்வொரு குடும்பமுமாவது, தனது துப்புரவு வேலைகளுக்குத் தானே பொறுப்பேற்க வேண்டும். சமூகத்தில்ஒருகுறிப்பிட்ட வகுப்பினர்தான் அந்த வேலை செய்ய வேண்டுமென்பதில் பெரிய தவறு இருக்க வேண்டுமென்று நான் பல ஆண்டுகளாகவே கருதிவந்திருக்கிறேன். இந்த அத்தியாவசியமான சுகாதார சேவைக்கு மிகத் தாழ்ந்த மதிப்பைமுதன்முதலாக அளித்தவர் யாரென்பதைப் பற்றி வரலாற்றுபூர்வமான எழுத்துச் சான்று எதுவும் நம்மிடமில்லை. அது யாராக இருந்தாலும் சரி, அவர் நமக்கு எந்தவித நன்மையும் செய்யவில்லை. நம்முடைய குழந்தைப் பருவத்திலிருந்தேநாமெல்லாம்துப்புரவுத்தொழிலாளர்கள் என்ற எண்ணத்தை நாம் மனதில் பதித்துக்கொள்ள வேண்டும். இதை உணர்ந்த ஒவ்வொருவரும் துப்புரவுத் தொழிலாளியாக உடல் உழைப்பை மேற்கொள்ளத் தொடங்க வேண்டியதுதான். இவ்வாறுபுத்திக்கூர்மையுடன்செய்யப்படும் வேலையானது, மனிதனின்சமத்துவத்தை உண்மையாக நிலைநாட்டுவதற்கு உதவும்.



**நகராட்சிக் கூட்டமொன்றில் காந்தி...**

"இப்படி நாம் நம் துப்புரவுத் தொழிலாளர்களை விலங்குகளைவிடக் கேவலமான நிலைமைக்குத்தள்ளியிருக்கிறோம்....ஏதோ அவர்கள்இப்படிக்கொஞ்சம்பணம்சம்பாதித்தாலும், அது அவர்களின் மனிதத்தையும் கண்ணியத்தையும்சிதைத்துத்தானேவருகிறது? அந்தத் துப்புரவுத் தொழிலாளர்கள், மலத்துக்கு நடுவில், கழிப்பறை சுவரின் நிழலில் பயந்து பதுங்கியபடி, தங்கள் உணவைஉண்பதைப்பாருங்கள். நம்இதயத்தைப்பிளக்கும்சோகமில்லையா இது?"

*நன்றி: தி ஹிந்து*

**'எரவாடா மந்திரிலிருந்து' நூலில்...**

உங்களை விசாலமான வீதிகளுக்காகவும், அற்புதமான விளக்கு வெளிச்சங்களுக்காகவும், அழகானபூங்காக்களுக்காகவும் பாராட்டுகிறேன். ஆனால், முன் மாதிரிக் கழிப்பறைகளும், இரவும்பகலும்சுத்தமாகவும், சுகாதாரமாகவும் இருக்கும் வீதிகளும்இல்லாத ஒரு நகராட்சி, அதன் நிர்வாகம் அவை இருப்பதற்கே தகுதியற்றவை அல்லவா? நம் நகராட்சிகள் அவசியமாகத் தீர்க்க வேண்டிய ஒருபெரிய, முக்கியமான பிரச்சினை சுகாதார மின்மைதான். நீங்கள் எப்போதாவதுயோசித்திருக்கிறீர்களா, எப்படி, எந்த விதமான சூழ்நிலைகளில் நமது துப்புரவுத் தொழிலாளர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்று?




## மரண அறிவித்தல்



### திருமதி மகாலிங்கம் இராஜேஸ்வரி


உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகாலிங்கம் இராஜேஸ்வரி (குஞ்சு) நேற்று (06.01.2019) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-சொர்ணம்மா (பாக்கியம்) தம்பதியரின் கனிஸ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை இராசமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற மகாலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், வாமதேவன் மற்றும் யோகேஸ்வரி (கனடா), ஞானேஸ்வரி, கமலநாதன் (ஜேர்மனி), யோகநாதன் (கண்ணன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அகிலாண்டேஸ்வரி, கவிதா, சஞ்சீவன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஸ்ரீ உதயகுமார் (கண்ணன்), பவளசுதன், லக்ஷிகா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ரேணுகா (லண்டன்), சுதாகரன், அபிரா, திபாகரன், அஷ்வினா, சிந்துஜன், சாலினி, ஆதவன் ஆகியோரின் பேர்த்தியும், தர்ஸ்வினின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் உரும்பிராய் கிழக்கிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (07.01.2019) திங்கட்கிழமை பி.ப ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### சொக்கலிங்கம் சிவநாயகம்

யாழ்ப்பாணம் கந்தர்மடம் மணல்தறை ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சொக்கலிங்கம் சிவநாயகம் (உரிமையாளர்-இரும்பு பெட்டி தொழிலகம், இல.13, பிறவுண் வீதி) அவர்கள் 06.01.2019 ஞாயிற்றுக் கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம் நாகரெத்தினம் சொக்கலிங்கம் தம்பதியரின் மூத்த மகனும், அருந்தவநாயகம் (ஓய்வுநிலை விவசாய உத்தியோகத்தர்), காலஞ்சென்ற செல்வநாயகம் (முன்னாள் பிறிமா ஆலை உத்தியோகத்தர்), இராஜராஜேஸ்வரி, புவனேஸ்வரி, பேரின்பநாயகம் (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கமலலோஜினி (விவசாய இலாகா உத்தி யோகத்தர்), தனேஸ்வரி (ஓய்வுநிலை ஆசிரியை), இராஜகோபால் (புதிய சாயி கல்வி நிலையம்), இராஜகுலேந்திரவதி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுஜாந்தினி, சுஜேந்திரா மதுரா (டென்மார்க்) ஆகியோரின் அன்பு பெரியப்பாவும், விஜிதன், லோஜினி ஆகியோரின் பெரிய மாமனாரும், ஜிதிஷ் பவன், தக்ஷணன், சாருக்ஷணன் ஆகியோரின் பெரிய தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.01.2019) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

43, மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

தொடர்புகள்: 077 519 8741

**வேலைவாய்ப்பு** Computer Technician

தொழில்சார் நிபுணத்துவத்துடன் கூடிய ஆற்றல்மிக்க கணினி திருத்துநர்கள் CCTV பொருத்துநர்கள் தேவை.
ஒப்பந்த அடிப்படையிலான மாதாந்த கொடுப்பனவு 45,000/=

**GUNA BEST PC 0779086737**
திருத்தம் விற்றல் வாங்குதல் பொருத்துதல்
யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு வவுனியா மன்னார்

522 மானிப்பாய் வீதி ஒட்டுமடம் யாழ்ப்பாணம்.
43 பாங்சால்வீதி சந்தைமேல்மாடி சின்னக்கடை யாழ்ப்பாணம்.

உ

புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி அரியநாயகன் புலம்

## ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்

## வருடாந்த பொதுக்கூட்டம்

மேற்படி ஆலய பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 20.01.2019 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது. தவறாது வருகை தந்து ஆலய வளர்ச்சி தொடர்பாக தங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களைத் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**நிகழ்ச்சி நிரல்**

- இறைவணக்கம்
- வரவேற்புரை
- தலைமையுரை
- வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கை வாசித்தல்
- பொருளாளர் அறிக்கை வாசித்தல்
- செயற்பாட்டு அறிக்கை - செயலாளர்
- நடப்பாண்டு நிர்வாக உறுப்பினர் தெரிவு
- நன்றியுரை

ச.தனபாலசிங்கம் — தலைவர்

து.சுந்தரலிங்கம் — செயலாளர்.

(CS/22319)(11,17)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்




2018 க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி யின் வர்த்தகப் பிரிவு மாணவன்

**நித்தியானந்தன் துவாரகேசன்**

அவர்கள் **3A** சித்தியினையும் **மாவட்ட நிலை 02** பெற்று பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி உள்ளார். இவர் மேலும் பல வெற்றிகளைப் பெற்று முன்னேற மந்துவில் மேற்கு ஆரியங்காட்டுப் பிள்ளையாரின் அருள்பெற்று சீரும் சிறப்புடன் வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- அத்தைமார், சித்திமார், சித்தப்பாமார், பெரியப்பாமார், மாமா, மாமிமார், மச்சாள், மச்சான்மார்.


# எதிரணியை களைப்படைய செய்யும் ஒரே வீரர் புஜாரா

## இயன் சப்பல் புகழாரம்

டெஸ்ட் ஆட்டங்களுக்கு உரிய இலக்கணத்தின் படி விளையாடி எதிரணியைக் களைப்படையச் செய்யவல்ல உலகின் ஒரே வீரர் புஜாரா மட்டும் தான் என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் இயன் சப்பல்.

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் தற்போது நடைபெற்றுவரும் தொடரில் புஜாராவின் ஆட்டம் அபாரம். தொடர்ச்சியாகச் சதங்கள், அரைச்சதம் என்று அவர் அமர்க்களப்படுத்தினார். இந்த நிலையில் புஜாராவை வெகுவாகப் புகழ்ந்துள்ளார் இயன் சப்பல்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒட்டுமொத்த ஆஸ்திரேலிய அணியின் கவனமும் விராட் கோக்லிமேல் இருக்க அரங்கின் பின்னணியிலி ருந்து வெளிப்பட்டு அத்தனை பேரின் கவனத்தையும் களவாடிச் சென்றுள்ளார் புஜாரா. இந்திய அணிக்கு ஆஸ்திரேலியாவில் முதல் தொடர் வெற்றியைச் சாதிக்க உதவியதுடன் முதல் தரமான பந்துவீச்சு வரிசையை வெறுப்பேற்றி தன்னிடம் சரணடையச் செய்தார். சிட்னியில் கடைசியில் ஆஸ்திரேலியப் பந்துவீச்சு அறுந்து நொந்து நூலாகிப்போனதற்குக் காரணம் புஜாரா.

தனிநபராக புஜாரா ஆஸ்திரேலியப் பந்துவீச்சாளர்களை மண்டியிட வைத்ததோடு, தன் அணியின் சக வீரர்கள் இந்தப் பந்துவீச்சை அடித்து நொறுக்கவும் வகை செய்தார். பன்ட் தனது திறமையை இந்தத் தொடரின் ஆரம்பத்தில் காட்டினார். எனினும் கட்டுக்கோப்பு ஆரம்பத்தில் இருக்கவில்லை. மெல்போர்ணில் அவரது அணுகுமுறையில் மாற்றம் ஏற்பட்டது. சிட்னியில் கோக்லி ஆட்டத்தை இடைநிறுத்தும் போது இந்த சக்திமிக்க இலக்குக் காப்பாளர் தனது திட்டத்தை நிறைவு செய்திருந்தார்.

புஜாராவின் ஆட்டம் நாம் இந்திய ரசிகராக இல்லாத பட்சத்தில் பார்ப்பதற்கு அவ்வளவு அழகானதாக இருக்காது.

அடித்து நொறுக்கி எதிரணியின் பந்துவீச்சை சரணடைய வைக்கும் இன்றைய உலகில் எதிரணியின் பந்துவீச்சை முனை மழுங்கச் செய்து களைப்படையச் செய்யும் உலகின் ஒரே வீரர் புஜாராதான்- என்றார். (ம)


## நினைவஞ்சலி

41ஆம் ஆண்டு

பிறப்பு 04 . 06 . 1917

இறப்பு 28 . 06 . 1978



அமரர்

**முருகேசு கார்த்திகேசு**

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

10ஆம் ஆண்டு

பிறப்பு 27 . 05 . 1931

இறப்பு 07 . 01 . 2009



அமரர்

**இராசம்மா கார்த்திகேசு**

அன்பையும், பண்பையும், கல்வியையும், எமக்கு ஊட்டி வளர்த்து, இம்மானிலத்தில் பெயரோடும், புகழோடும் முதன்மை பெற்று விளங்க வழிகாட்டிய எம்பெற்றோருக்கு எமது இதய அஞ்சலி

144/6, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### கந்தையா கனகரத்தினம்

(முன்னைநாள் அதிபர் - வேலணை நடராசா வித்தியாலயம்)



வேலணை கிழக்கு அம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான கந்தையா கனகரத்தினம் 04.01.2019 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும், பாஸ்கரன் (ரவி), சிறிகரன் (ரகு) காலஞ்சென்ற கிரிதரன் (ராதா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரேவதி, இந்துமதி, கவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆதித், ஆரணி, அசோக், ஆனந், லவன், கஸ்தூரி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான தையல்நாயகி (முத்தம்மா), கனகம்மா (மணல்தரைலேன் சாமி அம்மா), பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, கணபதிப்பிள்ளை, செல்லம்மா, செல்லத்துரை, இரத்தினம், பாலசிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடா நேரப்படி இன்று (07.01.2019) திங்கட்கிழமை காலை நடைபெற்று தகனக்கிரியைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

20, அன்னசத்திரலேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
செ.சந்திரசேகரம் (சந்திரன்- மருமகன்)

கனடா - பாஸ்கரன் - ரேவதி - 001416 754 9608,
001416 90 25920 (வைபர்)
சிறிகரன் - இந்துமதி - 001647 325 7 248 (வைபர்)

(CS/22361)(11,17)



## மரண அறிவித்தல்

### திருமதி புஸ்பராணி நகுனகுலசிங்கம்

(ஓய்வுபெற்ற நெசவு புடைவை கைத்தொழில் மேற்பார்வையாளர்)



பிறப்பு 14.06.1944 இறப்பு 06.01.2019

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி நகுனகுலசிங்கம் நேற்று (06.01.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை குருக்கள் - அன்னம்மா தம்பதிகளின் புத்திரியும், காலஞ்சென்ற நகுனகுலசிங்கத்தின் அன்பு மனைவியும், நாகேஸ்வரி, சிலோன்மணி, செல்வமலர், லலிதா, தங்கமலர், பிறைசூடிகுரு, கணேசாந்தகுரு ஆகியோரின் அன்புச் சகோதரியும், சந்திராதேவி, சற்குணாந்தம் (கனடா), சந்திரகுமாரி, தம்பிரட்ணம் (ஜேர்மனி), சந்திரவதனா, கந்தசாமி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும், கமலவேணி (மாவட்ட நீதிமன்றம் மல்லாகம்), நிர்த்தனன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், வினோவிந்தன், திவ்ஜா ஆகியோரின் அன்பு மாமியும், விகாஷ், ஜாதனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சிவாங்கதன், கார்த்தி, ஐங்கதன் (கனடா), நிவேதா, லாவண்யா, கீர்த்தி, உமாங்கதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2019) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

297, பலாலி வீதி,
பரமேஸ்வராச்சந்தி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மகள் - கமலவேணி - 077 706 5380,
மகன் - நிர்த்தனன் - 076 678 9697
மற்றும் குடும்பத்தினர்.

(CS/22357)(11,17)

# உணவு உண்ணும்போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள்

1. நின்றுகொண்டு சாப்பிடும் பழக்கத்தை மாற்றி. குடும்பத்துடன் அமர்ந்து ஒன்றாகச் சாப்பிடுங்கள்.
2. எந்த வகைச் சாப்பாடாக இருந்தாலும் நன்றாக மென்று சாப்பிடுங்கள்.
3. பேசிக்கொண்டு சாப்பிட வேண்டாம்.
4. சாப்பிடும் பொழுது இடையில் தேவையில்லாமல் தண்ணீர் குடிக்கக் கூடாது. கடைசியில் தண்ணீர் குடிக்க மறக்கக் கூடாது.
5. அவசர அவசரமாகச் சாப்பிட வேண்டாம்.
6. பிடிக்காத உணவுகளை வலிந்து சாப்பிட வேண்டாம்.
7. பிடித்த உணவுகளை அளவுக்கு அதிகமாகவும் சாப்பிட வேண்டாம்.
8. ஆரோக்கிய உணவுகளை சிலர் பிடிக்காமல் வைத்துவிடுவார்கள் அப்படிச்செய்யாமல் சாப்பிடப் பழகவும்.
9. இரவு உணவில் கீரை உணவுகளை சேர்க்க வேண்டாம்
10. சாப்பாட்டுக்குப் பின்பு பழங்கள் சாப்பிட வேண்டாம்.
11. சாப்பிடும் முன்பு சிறிது நடந்துவிட்டு பின்பு சாப்பிடவும்.

## வாடகைக்கு

பலாலி வீதி, திருநெல்வேலியில் சிறந்த முறையில் இயங்கி வந்த உணவகம் வாடகைக்குத் தரப்படும். உணவகத்துக்கு தேவையான உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு:
**077 261 9590**

## பணியாளர் தேவை

எமது விற்பனை நிலையத்திற்கு பணியாளர் (பெண்) தேவை. (தெல்லிபளை பிரதேசத்துக்கு உட்பட்டவர்கள்.
தொடர்புகொள்ளவும்:
**077 5070 473**

## வேலையாள் தேவை

பண்ணையில் வேலை செய்ய வேலையாள் (ஆண்)தேவை. தங்கி நின்று வேலை செய்வோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஆர்வமுள்ளோர் நேரில் வரவும்.

**வீனஸ் பாம்** (CG 22325) (4.17)
6ஆம் ஒழுங்கை, கலாசாலை வீதி
(முத்துத்தம்பி மகாவித்தியாலயம் வடக்கு ஒழுங்கை)
திருநெல்வேலி.
**077 844 8300**

## பொருளியற் கல்லூரி

நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

வணிகக்கல்வி
ஆசிரியர் -
சக்திவடிவேல் பிரதீபன்
(HNDA, M.Com,PGDE)
**(A/L Day Class)**
ஆரம்பம் :- இன்று (07.01.2019)
திங்கட்கிழமை
நேரம் :- 6.00 - 7.00AM
**Note:-** எமது இணை நிறுவனமான பொருளியற் கல்லூரி (சுன்னாகத்தில்) புதன்கிழமை 3.00 மணிக்கு நடைபெறும்.
**077 220 9651**

## INVITATION FOR BIDS (IFB) STILL PHOTOGRAPHY AND VIDEO FOR 34thGENERAL CONVOCATION–PART I UNIVERSITY OF JAFFNA

1. The Chairman, Procurement Committee of University of Jaffna invites sealed bids from eligible and qualified bidders for the Still Photography and Video tocover 34thGeneral Convocation–Part I of the University of Jaffna whichis scheduled to be held on 22ndJanuary 2019.
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have the valid business registration with a minimum of five year experience in relevant field.
3. Interested bidders may obtain further information from the Deputy Registrar/ Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna and viewthe Bidding Documents at the same address on any working day from 9:00hrs to 16:00 hrs. Contact number: 021 2219201
4. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the DeputyRegistrar/ Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna until 11thJanuary, 2019from 9:00 hrs to 15:00 hrs and upon payment of a non- refundable fee of Rupees two thousand (Rs.2000/-).
5. Sealed Bids shall be delivered or sent by registered post to the Deputy Registrar, Capital Works & Planning, University of Jaffna, P.O Box 57,Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Registrar's office to reach on or before 10.00 hrs on 14thJanuary, 2019. Bids will be opened soon after closing at 10.00 hrs on 14thJanuary, 2019at the Capital Works & Planning Branch in the presence of the bidders' representatives who choose to attend.
6. Bids shall be valid at least for a period of 60 Days from the date fixed for receiving of Bids or any extended date.
7. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Bidding document.
   - In favour of"Vice Chancellor, University of Jaffna"
   - For a amount ofRs. 15,000/=
   - Issued by one of the agencies acceptable to the client.
8. Pre Bid meeting will be held on 10th January, 2019 at 10.00 am in the Capital Works & Planning Branch, University of Jaffna.

Vice Chancellor,
University of Jaffna,Thirunelvely, Jaffna.
04.01.2019 (m.9002) (13.17)

## மரண அறிவித்தல்

பிறப்பு 05 . 06 . 1955



இறப்பு 20 . 12 . 2018

### சுப்பிரமணியம் நந்தகுமார்

யாழ்.நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை (France) வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நந்தகுமார் 20.12.2018 பிரான்ஸில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் -மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற அருணாசலம் மற்றும் சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும், ராயினியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அரசகுமார் மற்றும் பத்மகுமார், சிவகுமார், சாந்தினி, சந்திரகுமார் ஆகியோரின் சகோதரரும், ஜெயக்குமார், இரத்தினகுமார், இரத்தினேஸ்வரி, நயனமாலினி, சாந்தினி, சிவகுமார், திலீப்குமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.01.2019) செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இராசவீதி, குமுதினி இல்லம், நீர்வேலி வடக்கு, நீர்வேலி.**
**தகவல்: சு.சிவகுமார் (சகோதரன்)**

(CS.22362)(1.17) **077 803 4061**

## கண்ணீர் அஞ்சலி



எமது கழக ஆர்வலரான
**சின்னத்துரை செல்வரட்ணம்**
**(சித்தப்பா)**
**(முன்னாள் ஊழியர் யாழ்.பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்)**
அவர்கள் காலமான செய்தி கேட்டு துயரடைவதுடன், அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், ஆன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**வளர்மதி நண்பர்கள்,**
**வளர்மதி முன்னேற்றக் கழகம்**
**சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு.**

## மரண அறிவித்தல்



### சின்னத்துரை செல்வரட்ணம் (சித்தப்பா)

**(முன்னாள் ஊழியர் யாழ்.பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்)**

நவாலியைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை செல்வரட்ணம் நேற்று (06.01.2019) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா சோதிமதி தம்பதியரின் அன்பு மருமகனும் சுமதி, சுகந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயசீலனின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, பேரின்பநாதன் மற்றும் சறோஜினிதேவி, மல்லிகா தேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2019) திங்கட்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**44/11, சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு.**
**தகவல்: குடும்பத்தினர்.**

**தொ.பே: 021 221 3532**

## மரண அறிவித்தல்

உதிப்பு 03 . 02 . 1939



உதிர்வு 05 . 01 . 2019

### சிவராசசிங்கம் பரராசசேகரம்

(இளைப்பாறிய ஆயுர்வேத வைத்தியர்)

புலோலியைப் பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டியை வதிவிடமாகவும், உரும்பிராயை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சிவராசசிங்கம் பரராசசேகரம் (05.01.2019) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவராசசிங்கம்-நாகம்மா தம்பதியரின் பாசமிகு புத்திரனும், காலஞ்சென்றவர்களான அருணாச்சலம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், அழகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பரயோகஜெயம் மற்றும் பராசக்தி, பரமேஸ்வரி, பரராசசிங்கம், பார்வதி அம்மாள், பத்மயோகன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகாதேவி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கைத்தொழில் திணைக்களம் வடமாகாணம்), கோகுலன் (லண்டன்), கிரிதரன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுரேஷ (ஆசிரியர் - யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி), சிவனுஜா (லண்டன்), தர்ஷினி (முகாமைத்துவ உதவியாளர் - பிரதிப்பிரதம செயலாளர் அலுவலகம் பொறியியல்சேவை - வடமாகாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஸ்ரீமாலன், பிரவீனா, ருஷாந்த் (லண்டன்), சோபியா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2019) திங்கட்கிழமை அவரது தற்காலிக இல்லத்தில் (உரும்பிராய்) நடைபெற்று, முற்பகல் 10.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி பத்தன் கடை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.**
**தகவல்: குடும்பத்தினர்.**

(cs.22360) (13.17) **தொ.பே: 077 9530 606**

## கோழியின் கிறுக்கல்!!

@KOZHIYAAR



'இப்படியே இருந்து விடுவோமோ!?' என்பதில் இருந்து 'அப்படியே இருந்திருக்கலாமே!?' என்பதாய் முடிகிறது வாழ்க்கை!!!



## மீண்டும் வில்லனாக களமிறங்கும் பாரதிராஜா

'கல்லுக்குள் ஈரம்' படத்துக்கு பின்னர் படங்களில் நடிக்காமல் இருந்த பாரதிராஜாவைத் தனது 'ஆயுத எழுத்து' படத்தில் வில்லனாக மணிரத்னம் நடிக்க வைத்தார். தொடர்ந்து 'பாண்டிய நாடு' படத்தில் பயந்த சுபாவம் கொண்டவராகவும், 'குரங்கு பொம்மை' படத்தில் வெகுளியாகவும் நடித்து இரசிகர்களைக் கவர்ந்தார் பாரதிராஜா. ராம் இயக்கத்தில் வெளியான 'தரமணி' படத்தில் கதாநாயகனாக அறிமுகமான வசந்த் ரவி நடிக்கும் படத்தில் பாரதிராஜா மீண்டும் வில்லனாக நடிக்கிறார். ராக்கி எனப் பெயரிடப் பட்டுள்ள இந்தப் படத்தைக் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார் அருண் மாதேஸ்வரன்.










## இது தந்திரமான உலகம்....!!

ஒரு தேசத்தில் சிகரெட் விற்பனை கிடையாது..! யாரும் புடிப்பிடிப்பதும் கிடையாது..! அங்கு உள்ள சிகரெட் கம்பெனி ஒரு மனிதனை வேலைக்கு சேர்த்தது..! அவன் பரப்புரை உத்தியைக் கையாண்டான்...!
அதற்கு ஒரு விளம்பரமும் செய்தான்..!

சிகரெட் பிடித்தால்..
1. திருடன் உங்கள் வீட்டுக்கு வரமாட்டான்...!!
2 .உங்களுக்கு முதுமையே வராது.!!
3 . பெண் குழந்தை பிறக்காது...!!

இந்த விளம்பரத்தைப் பார்த்து எல்லோரும் சிகரெட் பிடிக்க ஆரம்பித்து விட்டார்கள்..!
அந்தத் தேசத்தில் இருந்த சமூக ஆர்வலர் ஒருவர் இந்தக் கதை தவறு என்பதை நிரூபிக்க உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்... நீதிமன்றத்தின் முன் வழக்கு வந்தது. சிகரெட் விற்பனைப் பிரதிநிதி நீதிமன்றத்தின் முன்னிலையானார். நீதிபதி அவரிடம், "இப்படி ஒரு கருத்தை விளம்பரம் செய்து உள்ளாய்? இது அறிவியலுக்கு ஏற்றதாய் இல்லையே" என்று கேட்டார்.
அதற்கு அவன் சொன்னான், முதலில் நான் என்ன சொன்னேன்...?
1. திருடன் உங்கள் வீட்டுக்கு வரமாட்டான்.. ஆமாம் வரமாட்டான்..
காரணம் எப்பொழுது சிகரெட் குடிக்க ஆரபித்து விட்டார்களோ அப்பொழுதே இருமல் வந்து விடும்..
இருமிக் கொண்டே இருப்பதால் இவர்களுக்கு தூக்கம் வராது. முழித்து கொண்டு இருக்கிறார்கள் என்று திருடன் வரமாட்டான்...!!
2ஆவது என்ன சொன்னேன், முதுமையே வராது... எப்படி வரும்...? சிகரெட் பிடித்தால் இளமையிலே செத்து விடுவான் எப்படி முதுமை வரும்...? 3 ஆவது என்ன சொன்னேன். பெண் குழந்தை பிறக்காது... எப்படிப் பிறக்கும்...? சிகரெட்டில் நிக்கோடின் எனும் நச்சுத்தன்மை இருப்பதால் மலட்டுத் தன்மை வந்துவிடும் பிள்ளை பேறே முடியாது.
இதில் ஆண் என்ன? பெண் என்ன? பிள்ளையே பிறக்காது என்று சொல்லி முடித்தான்...!! அவன் சொன்னது சரிதான் நாம் தான் யோசித்து முடிவு எடுக்க தவறிவிட்டோம் என்று வழக்கை தள்ளுபடி செய்தார் நீதிபதி. இப்படித்தான் தந்திரமாக விளம்பரங்கள் செய்கிறார்கள் நாம் தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.




**மேடம்:** உறவினரில் சிலர் எதிர்பார்ப்பு மனதுடன் அணுகுவர். இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழிலில் மாறுபட்ட சூழ்நிலை உருவாகி தொந்தரவு தரலாம்.

**இடபம்:** செயலில் தடுமாற்றம் உருவாக்கலாம். எதிர்கால நலன் கருதி நிதானமும் அக்கறையும் பின்பற்றுவது அவசியம். வாகனத்தில் மிதவேகம் பயணத்தை எளிதாக்கும்.

**மிதுனம்:** மனதில் பிறருக்கு உதவுகிற சிந்தனை அதிகரிக்கும். தொழிலில் உற்பத்தி விற்பனை நடைமுறையில் இருந்த குளறுபடி சரியாகும். தாராள பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** வாழ்வில் பெற்ற நன்மைகளை எண்ணி மனம் மகிழ்வீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை வியத்தகு அளவில் முன்னேற்றம் பெறும்.

**சிங்கம்:** திட்டமிட்ட பணியில் மாற்றம் செய்ய நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாப்பது நல்லது. சராசரி பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** மனக்குறையை பிறரிடம் சொல்ல வேண்டாம். இதனால் சுயகவுரவம் பாதுகாக்கலாம். தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். அளவான பணவரவு கிடைக்கும்.

**துலாம்:** நற்செயல் கண்டு புதியவர் அன்பு பாராட்டுவர். மனம் செயலில் புத்துணர்வு பிறக்கும். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். பணவரவு திருப்திகரமாகும்.

**விருச்சிகம்:** நண்பரின் ஆலோசனை புதிய நம்பிக்கையைத் தரும். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்க மாற்று உபாயம் பயன்படுத்துவீர்கள். கூடுதல் செலவு ஏற்படும்.

**தனுசு:** உறவினருக்கு முன்னர் செய்த உதவிக்கான நற்பலன் தேடி வரும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள்.

**மகரம்:** செயல்களில் நிதானம் வேண்டும். தொழிலில் இலக்கு நிறைவேற கால அவகாசம் தேவைப்படும். செலவில் சிக்கனம் பின்பற்றவும். செலவில் சிக்கனம் சிரமம் தவிர்க்க உதவும்.

**கும்பம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். நண்பரின் நற்செயலை மனமுவந்து பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணி நிறைவேறும்.

**மீனம்:** பேச்சில் அதிக அன்பும், பண்பும் கலந்திருக்கும். முக்கியஸ்தரின் நட்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி ஏற்படும். ஆதாய பணவரவு பெறுவீர்கள்.

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | | | | 7 | | 8 |
| | 5 | 3 | 1 | | 8 | | 2 | |
| | 8 | | | | 9 | 5 | | |
| | | | | | | | 7 | |
| 8 | 4 | | 7 | | 2 | | 5 | 3 |
| | 2 | | | | | | | |
| | | 2 | 4 | | | | 9 | |
| | 6 | | 3 | | 7 | 2 | 1 | |
| 4 | | 1 | | | | | | 5 |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 8 | 3 | 5 | 6 | 4 | 2 | 1 |
| 2 | 3 | 6 | 1 | 4 | 8 | 7 | 5 | 9 |
| 5 | 1 | 4 | 7 | 2 | 9 | 3 | 6 | 8 |
| 7 | 2 | 1 | 8 | 6 | 3 | 9 | 4 | 5 |
| 4 | 5 | 3 | 9 | 1 | 2 | 8 | 7 | 6 |
| 6 | 8 | 9 | 5 | 7 | 4 | 2 | 1 | 3 |
| 8 | 4 | 7 | 6 | 3 | 1 | 5 | 9 | 2 |
| 3 | 6 | 5 | 2 | 9 | 7 | 1 | 8 | 4 |
| 1 | 9 | 2 | 4 | 8 | 5 | 6 | 3 | 7 |

## தமிழ் மொழி

"அ" வுக்கு அடுத்து "ஆ" வருவதேன்?
அரசனும், ஆண்டியாகலாம் என்பதை அறிந்திட!!

"இ" வுக்கு அடுத்து "ஈ" வருவதேன்?
இருப்பவன், ஈய வேண்டும் என இயம்பிட!!

"உ" வுக்கு அடுத்து "ஊ" வருவதேன்?
உழைப்பே ஊக்கம் என உணர்த்திட!!


"எ" வுக்கு அடுத்து "ஏ" வருவதேன்?
எதையும், ஏன் என்று சிந்தித்துப் பார்க்க!!

"ஐ" மட்டும் ஏதோடும் சேராமல் தனித்து இருப்பதேன்?

அதற்கு நான் ( ஐ ) என்ற அகம்பாவம் இருந்தால் தனிமை படுத்தப்படுவாய் என்பதனை உணர்த்த!

"ஒ" வுக்கு அடுத்து "ஓ" வருவதேன்?
ஒற்றுமையே ஓங்கும் என்பதை உணர்த்திட!!!

# எலுமிச்சம் பழம்



எலுமிச்சம் பழத்தைப் பிழிந்தெடுத்து அதன் சாற்றைச் சமையலில் பயன்படுத்துகிறோம். சுவைக்காகச்சேர்த்துக்கொண்டாலும்அதில்நிறைய மருத்துவக் குணங்கள் பொதிந்து கிடக்கின்றன. அதைப்பற்றி அறிந்துகொள்வோம்.

எலுமிச்சம் பழத்தை ஒரு சர்வரோக நிவாரணி என்று சொல்லலாம். அந்தளவுக்கு நோய்கள் வராமல் தடுத்து உடல் நலத்தைக் காத்துக் கொள்ள என்னென்னபொருள்கள் அவசியம்தேவையோ. அவைகள் அனைத்தும் இந்தப் பழத்தில் இருக்கின்றன.

குருதிக் கொதிப்பைத் தடுப்பதில் எலுமிச்சம் பழம் மிக முக்கிய பங்காற்றுகிறது. மேலும் கெட்ட குருதியைத் தூய்மைப்படுத்துவதற்கு எலுமிச்சம் பழத்தை விடமேலான ஒன்று கிடையாது. முக்கிய விற்றமின் சி. எலுமிச்சம் பழத்தில் நிறைய இருக்கிறது. எலுமிச்சையில் இருக்கும் சித்திக் அமிலம் கிருமிகளை அழிக்கும் தன்மை கொண்டது. அதனால் தொற்று நோய் கிருமிகளின் தாக்குதலில் இருந்து உடலை கண்போல பாதுகாக்கிறது.

எலுமிச்சம் பழ ரசத்தைச் சாப்பிட்டால் மண்ணீரல் வீக்கம் பிரச்சினை யில் இருந்து விடுபடலாம்.

எலுமிச்சம்பழத்தின்சாற்றை தேனில்கலந்துசாப்பிடுவது ஒரு சத்து மிக்க பானம் ஆகும்.

உடலுக்கு வேண்டிய உயிரூட்டத்தையும், ஒளியையும் எலுமிச்சம் பழத்தின் மூலம்மனிதர்கள்பெறஇயலும்.

இத்தனைநன்மைசெய்யக் கூடியஎலுமிச்சம்பழத்துக்கு மலத்தைக் கட்டக்கூடிய குணமும் உண்டு. ஆனாலும் தேன் சேர்த்து உண்டு வந்தால் மலக்கட்டு நீங்கி விடும்.

## இது புதுசு



பெண்களுக்கான கைப்பைகள் சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரத்து 450 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

# குளிர் காலத்தில் சருமத்தைப்பாதுகாக்கும் வெண்ணெய்

வெண்ணெய்சருமத்துக்குமிகவும்நல்லது. அதிலும்இதில்செலினியம் மற்றும் விற்றமின் 'ஈ' நிறைந்திருப்பதால், அது சருமத்தை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள உதவும்.

சிறிதளவு வெண்ணெயுடன் கொஞ்சம் தேன் கலந்து வாரம் ஒரு முறை உடல் முழுவதும் பூசினால் தோல் சொர சொரப்பு விரைவில் குணமாகும்.

சிறிதளவு வெண்ணெயை முகத்தில் தடவி மசாஜ் செய்தால் முகம் வெண்ணெய் போலவே மிருதுவாக மாறும். உங்களுக்குப் பிரகாசமான முகம் கிடைப்பதும் உறுதி.

2 கரண்டி வெள்ளரிக்காய் சாறுடன் ஒரு மேசைக்கரண்டி வெண்ணெய் சேர்த்து குழைத்து முகத்தில் பூசிக்கொள்ள வேண்டும். 10 நிமிடங்களுக்கு பிறகு குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். சருமம் பொலிவுடன் காட்சியளிக்கும்.

வாழைப்பழத்துடன் ஒரு கரண்டி வெண்ணெய் சேர்த்து நன்கு பிசைந்து கொள்ள வேண்டும். முகத்தில் மென்மையாகத் தடவ வேண்டும். 10 நிமிடம் கழித்து குளிர்ந்த நீரில் முகத்தை கழுவி வந்தால் முகம் பளபளப்பாக மின்னும்.

சிறிது வெண்ணெய். பாதாம் பருப்பு ஒன்று, சிறிது எலுமிச்சை சாறு காலந்து நன்கு அரைக்கவும். இதை முகம் மற்றும் கழுத்துப்பகுதிகளில் தடவி 20 நிமிடம் ஊற விட வேண்டும். பின்னர் பஞ்சை பாலில் நனைத்து அதை முகத்தைச் சுற்றி தடவி, பின்னர் பன்னீரால் முகத்தைக் கழுவ வேண்டும். இப்படித் தொடர்ந்து செய்து வந்தால் முகத்தில் குருதி ஓட்டம் சீராகும்.

உதட்டின்வறட்சியைத்தடுக்கஇரவில்வெண்ணெய்க்கொஞ்சம் உதட்டில் தடவி வந்தால் உதட்டின் வறட்சி போக்கி மிக மென்மையாக காணப்படும்.



ராசி அதிர்ஷ்டம்
திகதி 06.01.2019 | வெற்றி வாரம் 2430 | வர்ணம் ஊதா
துலாம்
வெற்றி இலக்கங்கள் 22 41 57 58
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ- 3,171,584 /=
2019.01.08 ம் திகதி செவ்வாய்க் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
SMS: DLB<space>LOT<space>LW

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 904
சீட்டிழுப்பு திகதி 2019.01.05 சனிக்கிழமை
H 08 21 51 57
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ- 43,641,792/-
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

# நொறுக்குத் தீனிகளை நாம் விரும்ப காரணம் என்ன?



ஆரோக்கியம்தரும்உணவுகள்எவை என்பது பற்றியும், ஆரோக்கியத்தைக் கெடுக்கும் உணவுகள் எவை என்பது பற்றியும்நமக்குத்தெரியும். ஆனாலும், நொறுக்குத் தீனிகளை நாம் விரும்பும் காரணம் என்ன? அவைகளை ஏன் தவிர்க்க முடிவதில்லை என்பதற்கான காரணத்தையும் அறிந்து கொள்ளலாம்.

புரதச்சத்துக்கள் நம் உடலின் கட்டுமானத்துக்கும் இயக்கத்துக்கும் மிகவும் அத்தியாவசியமானவை.


இந்த புரதச்சத்துப் பற்றாக்குறையும் நொறுக்குத் தீனிகள் எடுத்துக் கொள்வதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

பொருளாதாரவசதிமிக்கவர்களும்இப்போதுபட்டினியோடுதான்உறங்கச்செல்கிறார்கள். ருசியான, விதவிதமான உணவுகளை அவர்கள் வயிறு நிறைய சாப்பிட்டாலும் போதுமானபுரதச்சத்தினை அவர்கள்தங்கள்உணவின் மூலம்பெற்றுக்கொள்வதில்லை.

இதை மறைமுகமான பட்டினி(HIDDEN HUNGER) என்று குறிப்பிடலாம். இதனால், குருதிச்சோகை, கல்லீரல் பாதிப்பு, ஊட்டச் சத்து குறைபாடு ஆகிய உடல் நலக்குறைபாடுகள் வரும். மேலும், நமது நோய் எதிர்ப்புசக்தியும்கெடும். இப்படிபோதுமான புரதச்சத்துகிடைக்காதகாரணத்தால்தான் பசி உணர்வு ஏற்பட்டு, ஏதேனும் நொறுக்குத் தீனிகள் சாப்பிட வேண்டும் என்ற உணர்வு ஏற்படுகிறது. இதை மாற்றியும் சொல்லலாம்.

அதிக நொறுக்குத் தீனிகள் சாப்பிடுவதால் போதுமானபுரதச்சத்தும்கிடைப்பதில்லை.

எனவே, புரதத்தின்முக்கியத்துவத்தைஉணர்ந்துபோதுமானஅளவில்சேர்த்துக்கொள்ளவேண்டும். ஏனெனில், நம்முடையஉடல்நலத்திற்கும், இயக்கத்திற்கும்தேவையானசத்துக்களில்புரதச்சத்துதவிர்க்கமுடியாத இடம்பெறுகிறது.



துவரை. காராமணி, பட்டாணி போன்ற சைவ உணவிலும், முட்டை, கோழி இறைச்சி, மீன் முதலான அசைவ உணவிலும் நமக்குத் தேவையான அளவு கிடைக்கிறது. அடுத்தது பால், தயிர் ஆகியவற்றில் இருந்தும் நமக்குத் தேவையானபுரதச்சத்தினைப் பெற்றுக் கொள்கிறோம். காய்கறிகளிலும் புரத சத்தினை ஓரளவு பெற்றுக்கொள்கிறோம்.

# மரண அறிவித்தல்



## நாகலிங்கம் பரஞ்சோதி

வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பரஞ்சோதி 06.01.2019 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கத்தின் மனைவியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், நாகேஸ்வரனின் தாயாரும், சாரதாதேவியின் மாமியாரும், காலஞ்சென்ற லட்சுமிப் பிள்ளை மற்றும் மாணிக்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்மசாந்தன், மதிசாந்தன், லுகசாந்தன் (பிரான்ஸ்) யாழினி, கஜசாந்தன், வாகினி, தினேசாந்தன், மோகனராஜ் (அசோக்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2019) திங்கட்கிழமை பி.ப 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சியக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

தொ.பே: 077 533 6559



# பாரதி சம்பியன்

யாழ்ப்பாணம், ஜன. 7
வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கரத்தில் பாரதி அணி கிண்ணம் வென்றது.
வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இறுதியாட்டம் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிறிமுருகன் அணி மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் பாரதி அணி வெற்றிபெற்றது. (ம-422)



# ஊரெழு றோயல் இறுதிக்கு தகுதி

யாழ்ப்பாணம், ஜன. 7
வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது.
உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உருத்திபுரம் விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்டத்தின் 7ஆவது நிமிடத்தில் உருத்திரபுரம் அணியின் முதலாவது கோலை ஹரிஸ் பதிவு செய்தார். 12ஆவது நிமிடத்தில் றோயலின் முதலாவது கோலை எடிசன் பதிவு செய்தார். 13ஆவது நிமிடத்தில் றோயலின் சார்பாக நிதர்சன் கோலொன்றைப் பதிவுசெய்தார். 21ஆவது நிமிடத்தில் உருத்திரபுரம் அணியின் சார்பில் ஹரிஸ் மற்றொரு கோலைப் பதிவுசெய்தார். இரண்டு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பெற்றிருந்த நிலையில் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியின் மூன்றாவது நிமிடத்தில் எடிசன் றோயலின் மூன்றாவது கோலைப் பதிவுசெய்தார். ஆட்டம் முடிவதற்கு 9 நிமிடங்கள் இருக்கையில் நடுவர் வழங்கிய தீர்ப்பை ஏற்க மறுத்து ஆட்டத்தில் இருந்து வெளியேறியது உருத்திரபுரம். இதையடுத்து 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது றோயல். (ம-23)

## மாவத்தை கழக கால்பந்து முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன. 7
அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் விழாவை முன்னிட்டு நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அராலி மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு.
பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் குறிஞ்சிக்குமரன் அணியை எதிர்த்து அண்ணா அணி மோதியது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வைத்து 13:12 என்ற கோல் கணக்கில் அண்ணா அணி வெற்றிபெற்றது. மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் மாதகல் ஐக்கிய அணியை எதிர்த்து பை ஸ்ரார் அணி மோதியது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வைத்து 4:2 என்ற கோல் கணக்கில் ஐக்கிய அணி வெற்றிபெற்றது. மாலை 5.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் கலைவாணி அணியை எதிர்த்து கல்வளை விநாயகர் அணி மோதியது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வைத்து கலைவாணி அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



# ஆஸ்திரேலியக் கிண்ணம் இம்முறை என்னிடம்தான்!

## நம்பிக்கையில் செரபோவா

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரைக் கைப்பற்றும் நம்பிக்கையை வெளிப்படுத்தினார் ரஷ்ய வீராங்கனை மரிய செரபோவா.
ஒவ்வொரு வருடத்தின் ஜனவரி மாத இடைப் பகுதியில் ஆஸ்திரேலியத் தொடர் ஆரம்பித்து நடைபெறும். இந்த வருடத்துக்கான தொடர் ஜனவரி 14ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது. இந்தத் தொடர் தொடர்பில் பலரும் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்து வரும் நிலையில் ரஷ்ய வீராங்கனை மரிய செரபோவா கிண்ணத்தைக் கைப்பற்றும் நம்பிக்கையை வெளிப்படுத்தினார்.
2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஆஸ்திரேலியத் தொடரில் செரபோவாவிடம் இருந்து பெறப்பட்ட குருதி மாதிரியைச் சோதித்துப் பார்த்ததில் அவர் மெல்டோனியம் என்ற தடைசெய்யப்பட்ட மருந்தைப் பயன்படுத்தியமை தெரியவந்தது. இதையடுத்து அவர் 20 மாதங்கள் தடை செய்யப்பட்டார். மீண்டும் களம் திரும்பிய பின்னர் அவரால் இன்னமும் முக்கிய கிண்ணமெதையும் கைப்பற்ற முடியவில்லை. இந்த நிலையில் நடப்பு வருட ஆஸ்திரேலியத் தொடரைக் கைப்பற்றும் நம்பிக்கையை வெளிப்படுத்தினார் அவர். (ம)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 7

**நவஜீவன்ஸின் கால்பந்தாட்டம்**

உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமராட்சி, பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்குகளில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான தொடரின் ஆட்டங்கள் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட் கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்லயன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மனோகரா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி யுத் அணி மோதவுள்ளது.

**யாழ். லீக்கின் கால்பந்தாட்டம்**

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அணியை எதிர்த்து வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**துடுப்பாட்டம்**

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 19 வயதுக்குட்பட்ட மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரின் ஆட்டமொன்று யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது. இதில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து பாணந்துறை சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23)

# தம்பகாமம் இந்து இளைஞர் கழகத்துக்கென வழங்கப்பட்டன விளையாட்டு உபகரணங்கள்



கிளிநொச்சி, ஜன. 7
நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் நிதி ஒதுக்கீட்டில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் தம்பகாமம் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்துக்கு 90 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் சீருடைகள் என்பன வழங்கப்பட்டன.
தம்பகாமம் வட்டார அமைப்பாளரின் வேண்டுகோளுக்கு அமைவாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனால் குறித்த நிதி ஒதுக்கப்பட்டது. குறித்த உபகரணங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர் போல்ராஜ் ஆகியோர் கழகத்திடம் கையளித்தனர். (ம)

# கிண்ணம் வெல்வதில் இந்தியா உறுதி 71 ஆண்டுகள் கனவு நிறைவேறுகிறது!



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றிபெற்றோ ஆட்டத்தைச் சம நிலையில் முடித்தோ கிண்ணம் வெல்லும் கம்பீர நிலையில் உள்ளது இந்திய அணி.

இந்திய அணி இதுவரை ஆஸ்திரேலியாவில் வைத்து டெஸ்ட் தொடரெதையும் வென்றதில்லை. ஆனால் இம்முறை சுற்றுப் பயணத்தின்போது இது சாத்தியம் என்று பலரும் கருதினார்கள். இதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று, கோக்லி தலைமையிலான இந்திய இளம் அணி மிகமிக வலுவானது. அனைத்துத் துறைகளிலும் பலமானது. மறுமுனையில் சிமித், வோர்ணர் இல்லாத ஆஸ்திரேலிய அணி பலம் குறைந்தது.

மூன்று ஆட்டங்கள் முடிவடைந்திருந்த நிலையில் அவற்றில் இரண்டில் இந்திய அணி வெற்றிபெற்று கிண்ணத்தை இழக்கும் நிலையை ஏற்கனவே தவிர்த்திருந்தது. நான்காவது ஆட்டம் சிட்னியில் கடந்த 3ஆம் திகதி ஆரம்பமானது. இந்த ஆட்டத்தில் வென்றேயாக வேண்டும் என்ற கௌரவச் சிக்கல் ஆஸ்திரேலியாவுக்கு இருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி 7 இலக்குகளை இழந்து 622 ஓட்டங்களைக் குவித்திருந்தபோது ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக புஜாரா 193 ஓட்டங்களையும், பண்ட் ஆட்டமிழக்காமல் 159 ஓட்டங்களையும், ஜடேயா 81 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் லயன் 4 இலக்குகளையும், ஹசில்வூட் 2 இலக்குகளையும், ஸ்ராக் ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி நேற்றுமுன்தின மூன்றாம் நாள் முடிவில் 6 இலக்குகளை இழந்து 236 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஹான்ட்ஸ்கொம் 28 ஓட்டங்களையும், கம்மின்ஸ் 25 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காதிருந்தனர்.

நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 300 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது.

ஸ்ராக் 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.


பந்துவீச்சில் குல்தீப் யாதவ் 5 இலக்குகளையும், சமி, ஜடேயா இருவரும் தலா 2 இலக்குகளையும், பும்ரா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

ஆட்டத்திரேலிய அணி பொலோ ஒன் முறையில் இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்டது. நேற்றைய நாள் முடிவில் அந்த அணி இலக்குச் சரிவில்லாமல் 6 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கவாயா 4 ஓட்டங்களுடனும், ஹரிஸ் 2 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

**மழை காரணமாக ஆஸி. தப்பிக்கும்**

இந்த ஆட்டத்தில் மழையின் ஆதிக்கம் மிகவும் அதிகளவில் உள்ளது. நேற்று வெறும் 26 பந்துப்பரிமாற்றங்களே வீசப்பட்டன. அந்தளவுக்கு மழை இடையூறு செய்தது. இந்த நிலை இன்றும் தொடர்ந்தால் ஆஸ்திரேலிய அணி தோல்வியில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம். (ம)





## கவாயா, ஹரிஸ் மீது பெரிய எதிர்பார்ப்பு!

இந்தியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணியின் பிடியில் இருந்து ஆஸ்திரேலிய அணியை ஆஸ்திரேலிய ஆரம்ப வீரர்களான கவாயா, ஹரிஸ் கூட்டணி தப்பிக்க வைக்குமா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது.

முன்னதாக நடைபெற்ற மூன்று ஆட்டங்களில் ஹரிஸ், பின்ஞ் கூட்டணியே ஆரம்ப இணையாகக் களமிறங்கியது. பின்ஞ் தொடர்ச்சியாகத் தடுமாறி வந்தார். இதையடுத்து பின்ஞ் நீக்கப்பட்டு கவாயா ஹரிஸுடன் ஆரம்ப வீரராகக் களமிறக்கப்பட்டார். இந்த இணையும் பெரியளவில் சாதிக்கவில்லை.

இதனால் இன்னிங்ஸ் தோல்வியின் பிடியில் இருந்து ஆஸ்திரேலிய அணியை இந்த இருவரும் மீட்டெடுப்பார்களா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது. (ம)





## பும்ரா மிகவும் ஆபத்தானவர் இப்படிப் புகழ்கிறார் பெய்ன்!

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் பும்ரா மிகவும் ஆபத்தான வீரர் என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் தலைவர் ரிம் பெய்ன்.

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான நான்காவது டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாம் நாளான நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் பெய்ன்.

"பும்ரா பேராபத்தான வீரர். அவர் மிகச் சிறந்த வேகப்பந்து வீச்சாளராக உள்ளார். இந்திய ஆடுகளங்களில் மட்டுமல்லாது அயல்நாட்டு ஆடுகளங்களிலும் அதிகம் சாதிக்கக் கூடியவர் பும்ரா. குறிப்பாக ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா ஆடுகளங்கள் பும்ராவுக்கு உரியவை" என்று பெய்ன் மேலும் தெரிவித்தார். (ம)

31 ஆண்டுகளுக்குப் பின்னர்

## ஆஸ்திரேலியா 'பொலோ ஒன்'



இந்தியாவுக்கு எதிராக தற்போது நடைபெற்றுவரும் டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி பொலோ ஒன் செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இது அந்த அணியின் மோசமான அடைவாகப் பார்க்கப்படுகிறது.

மெல்பேர்ணில் இந்த ஆட்டம் நடைபெற்று வருகிறது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 7 இலக்குகளை இழந்து 622 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 300 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது.

இதையடுத்து அந்த அணி களத்தடுப்பில் ஈடுபட தகுதியில்லாத அணியாக மாறியது. இதனால் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடும்படி ஆஸ்திரேலிய அணியைப் பணித்தார் இந்திய அணியின் தலைவர் கோக்லி. சொந்த மண்ணில் ஆஸ்திரேலிய அணி பொலோ ஒன் செய்வது 31 ஆண்டுகளின் பின்னர் இதுவே முதல்முறை. (ம)

## கணினி வடிவமைப்பாளர் தேவை



தனியார் நிறுவனம் ஒன்றுக்கு
பகுதி நேர (இரவு) கணினி
வடிவமைப்பாளர் தேவை

தொடர்பு:
**Mob: 077 9592 628**


# வில்லாரியல் - மட்ரிட் ஆட்டம் சமநிலையில்

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வில்லாரியல் - மட்ரிட் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டத்தின் 4ஆவது நிமிடத்தில் வில்லாரியலின் சார்பில் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் கசோர்லா. பென்சிமா 7ஆவது நிமிடத்தில் மட்ரிட்டின் சார்பில் கோலைப் பதிவுசெய்து பதிலடி கொடுத்தார். வரானி 20ஆவது நிமிடத்தில் மட்ரிட்டின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். முதல் பாதியின் முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது ரியல் மட்ரிட் அணி.

இரண்டாவது பாதியும் மட்ரிட்டின் ஆதிக்கத்துடன் நகர்ந்து சென்றுகொண்டிருந்தது. கசோர்லா 82ஆவது நிமிடத்தில் மற்றொரு கோலைப் பதிவுசெய்தார். முடிவில் 2:2 என்ற கோல் கணக்கில் ஆட்டம் சமநிலையானது. (ம)




✣ வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
11kg இற்கு மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகைகள்
UK - 600/= France - 700/= Swiss - 800/=
✣ சகல நாடுகளுக்குமான Online Visa விண்ணப்பங்கள் பூர்த்திசெய்துதரப்படும்
Thirumurugan Com Net (Pvt) Ltd
321, K.K.S Road, Jaffna.
கிளைகள்: திருநெல்வேலி, நெல்லியடி, கொழும்பு.
077 755 4528

**மணமகள் அலங்கார வகுப்பு**
**26th Jan 2019 @ Gajan Wedding Hall**
**Prisanthi Make - up Artist Germany**
**076 271 3939**
**www.prishankar.com**

## SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

O/L, A/L எழுதியோர், இளைஞர் யுவதிகள், மாணவர்களுக்கான
3 மாத உரையாடல் மூலமான ஆங்கிலப்பயிற்சிநெறி.

ஆங்கிலத்தில் ஒரெழுத்துத்தெரியாதவர்களும் தமிழ்போல மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம்பேசமுடியும்.

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 19.01.2019 சனி
1. காலை : 08-10 3.மதியம் : 01-03
2. காலை : 10-12 4.மாலை : 03-05

11.01.2019 வரை பதிவுசெய்வோருக்கு ரூபா 1800 பெறுமதியான
Study pack மற்றும் சான்றிதழ் முற்றிலும் இலவசம்.


வாரநாள் வகுப்புகள் : செவ்வாய் மற்றும் வியாழன் காலை 08.30 - 10.30

SAAMSON
Experts in English Training
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவிலடி, யாழ்நகர்.
077 621 4567 222 4282

## சிறுநீரகம் தேவை

B, O இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.
தொடர்பு - 076 239 9874


## மரண அறிவித்தல்



## நாகலிங்கம் சந்திரலிங்கம்

**(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், கச்சேரி, யாழ்ப்பாணம்)**

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், சுதுமலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சந்திரலிங்கம் 05.01.2019 சனிக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான பூரணலிங்கம், ஈஸ்வரலிங்கம், நாகபூரணம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், விமலநாயகியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னம்மா (கமலம்), திருநாவுக்கரசு மற்றும் தனபாலசிங்கம், திருமதி நாகேஸ்வரி, திருமதி கோமளம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், சந்திரகாந்தி (லண்டன்), சந்திரநிவாசன் (லண்டன்), சந்திரமாதேவி (மாகாண கல்வித் திணைக்களம், வடமாகாணம்), சந்திரகுமார் (லண்டன்) ஆகியோரின் சிறிய தந்தையும், Dr.சத்தியசீலன் (லண்டன்), Eng. சாந்தீபன் (லண்டன்), Dr.சுரேந்திரன் (லண்டன்), மயூரன் (ஆஸ்திரேலியா), குருபரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தர்சினி (லண்டன்), யோகினி (ஆசிரியை - யா/ காரை. சுப்பிரமணிய வித்தியாசாலை), கஜந்தினி (லண்டன்) ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (08.01.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கன்னி தோட்டம்,**
**சுதுமலை வடக்கு, மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**021 225 5369**


## வெளிநாட்டு பல்கலைக்கழக நேர்முக அனுமதி

HigherStudy.lk

**வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில்**
**கல்வி கற்கும் அரிய வாய்ப்பு**
**[மலேசியா மற்றும் சீனா]**

**O/L அல்லது A/L உடன்**
**Foundation மற்றும் Degree**
**கற்கும் வாய்ப்பு**

**O/L & A/L மாணவர்களுக்கான**
**புலமைபரிசில்களுடன்**
**நேர்முகத் தேர்வு**

**100% இலவச**
**நேர்முக பரீட்சை**

இடம் : Jetwing Jaffna (காகில்ஸ் அருகாமை)
காலம் : 12th ஜனவரி 2019 (9.30 am - 1.30 pm)

தொடர்பு :
**077 408 3570** **info@higherstudy.lk**

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

**20 வருடகால அசைக்க முடியாத**
**நம்பிக்கையை வென்ற நாம்**

## அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
**021 222 6113**


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.